பதிவு இலக்கம் : 105267
வார இதழ்
# தீபம்
28.06.2020 தீபம் – 231
இணையப் பதிப்பு




சர்வதேச போதைப்பொருள் பாவனைக்கும் அதன் சட்டவிரோதக் கடத்தலுக்கும் எதிரான தினம்.

சித்திரவதைக்கு உள்ளானவர்களுக்கு ஆதரவுக் கரம் நீட்டும் சர்வதேச தினம்

ஜூன் 26







## 212 மில்லியனுக்கு நடந்தது என்ன?

தமிழரசுக்கட்சி மகளிர் அணி கேள்வி!



## தென்னிலங்கை அரசியலில் கருணா காவியம்



## கோத்தாபாய அரசுடன் கைகோர்க்கும் கூட்டமைப்பு

## சீனாவின் நீர் ஆயுதம்

## நாடாளுமன்றத் தேர்தலும் தமிழினமும்

கருணாவின் தேர்தல் பிரசாரம் மற்றுமொரு காட்டிக் கொடுப்பு நடவடிக்கையா? - குருபார்வை -

## கொரோனாச் சிந்தனைகள் 08



# வைரசின் காலத்தில் தேசமாகச் சிந்திப்பது

கோவிட் -19 இலங்கை தீவில் இரண்டு மீடியாத் தளங்கள் இருப்பதனை நிரூபித்திருக்கிறது. இரண்டு மீடியாத் தளங்கள் என்பதை விடவும், இலங்கைத்தீவில் இரண்டு நோக்கு நிலைகள் உள்ளன என்பதனையும், இரண்டு கருத்துருவாக்க மையங்கள் உண்டு என்பதனையும், இரண்டு அபிப்பிராய மையங்கள் உண்டு என்பதனையும் கோவிட் -19 நிரூபித்திருக்கிறது. இதை அதற்குரிய அரசியல் அடர்த்தியோடு சொன்னால் வைரஸ் தொற்றானது இலங்கைத் தீவில் இரண்டு தேசங்கள் இருப்பதனை நிரூபித்திருக்கிறது எனலாமா ? ஏனெனில் கோவிட் -19 தொற்றத் தொடங்கியதிலிருந்து இலங்கைத் தீவில் இரண்டு மீடியா அப்டேட்கள் தொடர்ச்சியாக வெளி வந்தன ஒன்று கொழும்பு மைய ஊடக தளம். இதில் அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட அதிகாரமுடைய அலுவலர்கள் ஒவ்வொரு நாளும் கோவிட் -19 தொடர்பான புள்ளிவிவரங்களைத் தொடர்ச்சியாக பிரசுரித்து வந்தார்கள். அதே சமயம் மற்றொரு ஊடகத் தளம் வடக்கில் இயங்கியது. அங்கே யாழ் போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் மருத்துவர் சத்தியமூர்த்தி தொடர்ச்சியாக ஒவ்வொரு நாளும் கோவிட் -19 தொடர்பான புள்ளி விவரங்களை வெளியிட்டுக் கொண்டிருந்தார். தவிர அவ்வப்போது ஊடகவியலாளர்களை சந்தித்து நோய்த் தொற்றுத் தொடர்பான சர்ச்சைக்குரிய கேள்விகளுக்கு பதில்களையும் வழங்கிக் கொண்டிருந்தார். அக்காலகட்டத்தில் மருத்துவர் சத்தியமூர்த்தியின் செயற்பாடானது சமூகத்தின் அச்சத்தை தணிக்கும் நோக்கிலும், சமூகத்திற்கு நம்பிக்கையூட்டும் நோக்கிலும் அமைந்திருந்தது. இலங்கைத்தீவின் வேறெந்த மருத்துவ நிர்வாகப் பிராந்தியத்திலும் இப்படி ஒரு ஊடகத் தளம் கொரோனாக் காலத்தில் செயற்படவில்லை.

தமிழ் சூழலில் கடந்த 11 ஆண்டுகாலப் பகுதிக்குள் சத்தியமூர்த்தி இரண்டாவது தடவையாக அப்படி ஒரு பாத்திரத்தை வகித்திருக்கிறார். முதலாவது தடவையாக கடைசிக் கட்டப் போரின் போது அவர் சமூகத்தின் பேச்சாளர்களில் ஒருவர் போலச் செயற்பட்டார். அந்நாட்களில் அவர் நிர்வகித்த ஆஸ்பத்திரிகளில் இருந்து சில நூறு மீட்டர் தொலைவில் கூடாரங்களில் வசித்த மக்கள் பி.பி.சி போன்ற உலக ஊடகங்களுக்கு சத்தியமூர்த்தி தெரிவிக்கும் தகவல்களுக்கு ஊடாகவே தங்களைச் சுற்றி என்ன நடக்கிறது என்ற விபரங்களை அறிய முடிந்தது. அதுவும் ஒரு தகவல் யுகத்தில்? அந்நாட்களில் வெளியுலகத்தில் இருந்து துண்டிக்கப்பட்டு மூடப்பட்டிருந்த அல்லது முற்றுகை இடப்பட்டிருந்த ஒரு சமூகத்தின்



பேச்சாளர்களில் ஒருவராகச் சத்தியமூர்த்தி மேலெழுந்தார். அந்நாட்களில் முற்றுகையிடப்பட்ட ஒரு சமூகத்தின் வெளி உலகத்துக்கான வாசலாக ஆஸ்பத்திரி காணப்பட்டது. ஆஸ்பத்திரி ஏறக்குறைய சமூகத்தின் அனைத்துலக வாசலாகக் காணப்பட்டது. ஆஸ்பத்திரியிலிருந்து காயப்பட்டவர்களைப் பன்னாட்டு செஞ்சிலுவைச் சங்கத்தின் கப்பல்கள் அவ்வப்போது எடுத்துச் சென்றன. இதனால் ஆஸ்பத்திரிகள் தான் சமூகத்தின் ஒரே பிரதான வெளி வாயிலாகக் காணப்பட்டன. அப்படிப்பட்ட ஒரு காலத்தில் சமூகத்தின் பேச்சாளர்களில் ஒருவராகச் சத்தியமூர்த்தி மேலெழுந்தார். இப்பொழுதும் சரியாக 11 ஆண்டுகளின் பின் ஒரு நோய்த் தொற்றுக் காலத்தில் சத்தியமூர்த்தி வடக்கின் பேச்சாளராக மாறினார். அனர்த்த காலங்களில் சமூகத்தின் பேச்சாளராக மாறும் ஒரு ராசி அவருக்கு. சத்தியமூர்த்தி வடக்கை மட்டுமே பிரதிபலித்தார். அவர் கிழக்கைப் பிரதிபலிக்கவில்லை. எனவே அவருடைய அறிக்கைகள் முழுத் தமிழ்ச் சமூகத்தையும் பிரதிபலிக்கவில்லை. அதுபோலவே யாழ்ப்பான ஊடகத் தளம் எனப்படுவது முழுத் தமிழினத்தையும் பிரதிபலித்ததா? என்ற கேள்வி உண்டு. இது தனியாக ஆராயப்பட வேண்டும். அதோடு வடக்கு ஊடகத் தளமானது கோவிட் -19 தொடர்பான செய்திகளை நிதானமாகக் கையாண்டதா? என்ற கேள்விக்கும் தனியாக ஒரு கட்டுரை எழுத வேண்டும்.

இவ்வாறு ஒரு போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் ஊடகங்களுக்கு தொடர்ச்சியாக தகவல் தெரிவிப்பது என்பது தாபன விதிக்கோவைகளின்படி ஒரு வளமை அல்ல என்று சுட்டிக்காட்டப்படுகிறது. எனினும் இதில் இருக்கக்கூடிய தாபன விதிக்கோவை வளமையை மீறி ஒரு புதிய வளமையை யாழ் போதனா வைத்தியசாலை உருவாக்கியிருக்கிறது.

ஒருபுறம் இலங்கை அரசாங்கத்தின் சுகாதார அமைச்சு கோவிட் -19 க்கு எதிரான நடவடிக்கைகளை ஒரு கிளர்ச்சி முறியடிப்பு நடவடிக்கைகள் போலப் பெயரிட்டு அதற்குப் படைத் தளபதியைப் பொறுப்பாக நியமித்தது. படையினரை நோய்த் தடுப்பு நடவடிக்கைகளில் முன்னணியில் நிறுத்தி ஏறக்குறைய அதை ஒரு யுத்தம் போல முன்னெடுத்தது. தென்னிலங்கை ஊடகங்களில் சுகாதார அலுவலர்களோடு சேர்ந்து படைப் பிரதானிகளும் பேச்சாளர்களாகச் செயற்பட்டார்கள் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் மருத்துவர்கள் மற்றும் நிர்வாக அதிகாரிகளோடு படைப் பிரதானிகளும் ஒன்றாக அமர்ந்து இருந்து கலந்துரையாடல்களில் பங்குபற்றினார்கள்.

இவ்வாறான ஒரு சமூக மருத்துவ ராணுவச் சூழலில்தான் யாழ்ப்பாணம் இலங்கைத் தீவின் மற்றொரு ஊடகத் தளம் என்பது நிரூபிக்கப்பட்டது. இது தற்செயலாக நிகழ்ந்தது அல்ல. அதற்கு ஒரு நீண்ட காலப் பாரம்பரியம் உண்டு அது என்னவெனில் இலங்கைதீவில் கொழும்பு ஊடகத் தளத்துக்கு வெளியே மற்றொரு பிராந்திய ஊடகத் தளமாக யாழ்ப்பாணம் பல தசாப்த காலமாக ஒரு நடைமுறையாக இருந்து வருகிறது. இது கிறீஸ்தவ மிசனெரிகளின் காலத்திலிருந்து தொடங்குகிறது.

கொழும்பு மைய ஊடகங்கள் தமிழ் மக்களின் அபிலாசைகளையும் நோக்கு நிலைகளையும் போதிய அளவுக்கு பிரதிபலிக்கவில்லை என்று கருதிய ஒரு காரணத்தால் வடக்கில் ஏற்கனவே இருந்த ஒரு ஊடகத் தளம் அரசியல் நோக்கு நிலையில் பலப்படுத்தப்பட்டது. தமிழ் மக்கள் ஒரு தேசமாக சிந்திக்கிறார்கள் என்பதன் மற்றொரு குறி காட்டியாக அது வளர்ந்து வந்தது.

ஆயுதப் போராட்டத்தின் எழுச்சியோடு மற்றொரு அதிகார மையம் கொழும்புக்கு வெளியே கட்டி எழுப்பப்பட்டது. ஆயுதப் போராளிகளின் கட்டுப்பாட்டு பிரதேசத்தில் ஒரு மாற்று அதிகார மையம் கட்டி எழுப்பப்பட்டது. ரணில் – பிரபாகரன் உடன்படிக்கையானது இலங்கைத் தீவில் இரண்டு அதிகார மையங்கள் இருப்பதனை வெளிக் கொண்டு வந்தது என்று அப்பொழுது வன்னியில் இருந்து வெளிவந்த ஈழநாதம் பத்திரிகையின் ஆசிரியர் தலையங்கத்தில் எழுதப்பட்டிருந்தது.

இப்படிபட்டதொரு பாரம்பரியத்தின் பின்னணியில்தான் ஓர் அனர்த்த காலத்தில் அதாவது வைரஸ் தொற்றுக் காலத்தில் யாழ் ஊடகத்தளம் மீண்டும் ஒருதடவை துருத்திக் கொண்டு மேலெழுந்தது. இது தமிழ் மக்கள் ஒரு தேசமாகச் சிந்திக்கிறார்கள் என்பதனை உணர்த்தும் ஓர் ஊடகக் குறிகாட்டி ஆகும். கோவிட் - 19 அதை மீண்டும் ஒரு தடவை உறுதிப்படுத்தியுள்ளது .

**சிந்தனைகள் தொடர்ந்து வரும்...**

பதிவு இலக்கம் : 105267
வார இதழ்
தீபம்
28.06.2020 தீபம் – 231
இணையப் பதிப்பு

# 212 மில்லியன் ரூபாவுக்கு நடந்தது என்ன? தமிழரசுக்கட்சி மகளிர் அணி கேள்வி!




நுண் நிதிக் கடனால் இடம்பெறும் தற்கொலைகள் மற்றும் வறுமைக்குள்வாடும் பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்கு வழங்க எனக் கனடியத் தமிழ் பெருமக்களால் சேகரித்து அனுப்பப்பட்ட 212 மில்லியன் ரூபாவுக்கு என்ன நடந்தது என்று கேள்வி எழுப்பி இருக்கின்றனர் தமிழ் அரசுக் கட்சியின் மகளிர் அணி உறுப்பினர்கள்.

கனடாவிலுள்ள தமிழ் அமைப்புகள் பல ஒன்றிணைந்து தாயகத்திலுள்ள தமிழ் மக்கள் நல மேம்பாட்டுக்காகச் சேகரித்த பெருந்தொகை யான பணத்தை தமிழ் அரசுக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் ஊடாக இலங்கைக்கு அனுப்பி வைத்தனர் எனவும், குறித்த நிதி வழங்கப்பட்டமை தொடர்பில் அண்மையில் திருகோணமலையில் நடைபெற்ற தமிழரசுக் கட்சியின் மகளிர் அமைப்புக் கூட்டத்தில் குகதாசன் என்பவரால் கணினி மூலம் வெளிபடுத்தப்பட்டபோதும் குறித்த நிதிப் பயன்பாடு பற்றியோ அல்லது அது தமிழரசுக் கட்சியின் வங்கிக் கணக்குக் கூற்றுகளில் குறித்த நிதி வரவு வைக்கப்பட்டது பற்றியோ விவரங்கள் எதுவும் வெளிப்படுத்தப் படவில்லை எனத் தமிழரசுக் கட்சியின் மகளிர் அணிச் செயலாளர் திருமதி விமலேஸ்வரி ஸ்ரீகாந்தரூபன் தெரிவித்திருக்கிறார்.

தமிழரசுக் கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தில் கட்சியின் பொருளாளர் கனகசபாபதி இது குறித்துக் கருத்துத் தெரிவிக்கையில் கட்சிக் கணக்கில் அந்தத் தொகை வரவு வைக்கப்பட்டிருக்கவில்லை என்று குறிப்பிட்டிருந்ததாகவும், தானும் இக் கேள்வியைத் தொடர்ந்தெழுப்பியதன் விளைவாக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் தானே குறித்த நிதியினைக் கனடாவிலிருந்து பெற்றுக் கொண்டு வந்ததாகக் குறிப்பிட்டார் எனவும், குறித்த நிதிக்கு என்ன நடந்தது என்பது தொடர்பாக இதுவரை எந்தவித உத்தியோகபூர்வத் தகவல்கள் எதுவும் இல்லை என்றும் அவ்வாறாயின் குறித்த நிதி எங்கே? அந்நிதியை யார் கையாண்டார்கள்? குறித்த நிதி மோசடி செய்யப்பட்டுவிட்டதா? என்பன போன்ற சந்தேகங்கள் எழுகின்றதெனவும் தமிழ் அரசுக் கட்சி மகளிர் அணிச் செயலாளர் திருமதி விமலேஸ்வரி ஸ்ரீகாந்தரூபன் மேலும் தெரிவித்திருக்கிறார்.

இதிலே முக்கியமாக நாம் கவனிக்க வேண்டியவைகள்... இந்த நிதி யாருக்காகச் சேகரித்து அனுப்பப்பட்டதோ! அவர்கள் தமக்கு அந்த நிதி கிடைக்கவில்லை என்று வருத்தம் தெரிவிக்கின்றனர். தெரிவிப்பவர் அந்தக் கட்சி சார்ந்த முக்கிய உறுப்பினர் மட்டுமல்ல மகளிர் அணிக்குப் பொறுபானவர்களில் ஒருவர்.

அடுத்தது நிதிக்கு என்ன நடந்தது என்று கேள்வி எழுப்புபவர்கள், நிதியில் மோசடி நடைபெற்றிருக்கலாமோ? எனச் சந்தேகத்தை வெளிப்டுத்துபவர்கள், தமிழரசுக் கட்சிக்கு எதிரானவர்கள் அல்லர், அதே கட்சியைச் சேர்ந்தவர்கள். கட்சியை வழி நடத்துகின்ற பொறுப்பிலுள்ளவர்கள்.

எனவே இது பற்றி நிதியைச் சேகரித்து அனுப்பிய கனடிய மண்ணிலுள்ளவர்களிடமும் தகவல்கள் சேகரிக்கப்பட்டு விசாரணைகளைக் கட்சி முன்னெடுத்துத் தமது கட்சி சார்ந்த மகளிர் அமைப்புக்கு இது பற்றிச் சரியான தகவல்களைத் தெரிவிக்க வேண்டும்.

கட்சித் தலைவர் என்ற வகையில் இது பற்றிப் பேசவும், சொல்லவும், ஆராயவும், தகவல்களைத் தெரிவிக்கவும் மாவை சேனாதிராசாவுக்கு முழுப்பொறுப்பு உண்டு என்றும், அவர் அதனைச் செய்வார் எனத் தாம் மனப்பூர்வமாக நம்புவதாகவும் தமிழ் மக்கள் தெரிவிக்கின்றனர்.

- ஆதித்தன் -

## இராணுவச் சூழலும் ஜனநாயகமும்...

கடந்த வாரம் ஊடகங்களில் வெளியான பல செய்திகள் மக்கள் மத்தியில் பெரும் அச்சத்தையும், குழப்பத்தையும் ஏற்படுத்தியுள்ளதுடன் நாட்டின் மீதும், ஆட்சியாளர் மீதும் ஒட்டு மொத்தமாகத் தேர்தல் களத்தில் மக்களின் வாக்குகளை சாம, பேத, தான, தண்டமெனும் சகல வகை உத்திகளையும் பயன்படுத்தி “கபளீகரம்” செய்யும் நோக்குடன் களமிறங்கியிருக்கும் அனைத்து அரசியல்வாதிகள் மீதும் சினத்தையும், வெறுப்பையும் ஏற்படுத்தியுள்ளது என்றால் மிகையில்லை.

தேர்தலில் மக்கள் வாக்களிப்பது என்பது வாக்காளர்களின் ஜனநாயக உரிமை மட்டுமல்ல தேசியக் கடமையும் கூட என மக்களை உசுப்பேத்தி வாக்கு யாசகம் கேட்டு வருவோரிடம் கேட்பதற்கு மக்களிடம் ஏராளம் கேள்விகளும், சந்தேகங்களும் இருக்கின்றன. ஆனால் அதற்கெல்லாம் நெஞ்சுரத்துடனும், நேர்மைத் திறனுடனும் பதில் வழங்கும் ஆளுமைத் திறன் எவரிடமுமில்லை என்பதாலேயே கொள்கைகளின் அடிப்படையிலானதும், கருத்தியல் ரீதியிலானதுமான அரசியல் பிரசார நடவடிக்கைகள் மௌனித்துப் போய் விட, அச்சமூட்டும் அல்லது அச்சுறுத்தும் வகையிலான அரசியல் அறிக்கைகளைப் பிரசார நடவடிக்கைக்கு பயன்படுத்தும் மதவாத, இனவாத வெறியுடன் கூடிய செயற்பாடுகள் மூர்க்கம் கொண்டுள்ளது.

இது, வாக்காளர்களைச் சுயமாகச் சிந்தித்து, ஆழமாக ஆராய்ந்து, தெளிவான முடிவெடுத்து தமது வாக்குகளைப் பயன்படுத்தும் ஜனநாயக உரிமையை முற்றாகச் சிதைக்கும் நடவடிக்கையேயாகும். உரிமைகள் மறுக்கப்பட்டு, நீதி நிராகரிக்கப்பட்டு, வாழ்வியல் இருப்பு அச்சுறுத்தல்களுக்கு உள்ளாக்கப்பட்டுள்ள நிலையில் வாழும் சிறுபான்மைத் தேசிய இனங்களுக்கு வாக்களிக்கும் உரிமை இருந்தும் என்ன பயன்?

அவர்கள் அளிக்கும் வாக்குகளால் தேர்ந்தெடுக்கப்படும் அரசியல்வாதிகள் அந்த மக்களை இதுநாள் வரை எவ்வாறு மதித்து கௌரவித்திருக்கிறார்கள்? அல்லது அந்த மக்களுக்கு என்ன வாழ்க்கை உத்தரவாதத்தை நடைமுறைப்படுத்தி யிருக்கிறார்கள்?

இது விடையில்லாக் கேள்வியே!

எல்லாவகையிலும், எல்லாக்காலத்திலும் தமிழ் அரசியல்வாதிகளால் ஏமாற்றப்பட்டும், ஏமாளிகளாக்கப்பட்டும் வரும் மக்கள் தேர்தல் குறித்த விடயங்களில் அக்கறை கொள்பவர்களாக இம்முறை இல்லை என்பது யதார்த்தமே.

ஆகவே தேர்தலில் பெரும்பாலான கட்சிப் பிரசாரகர்கள் இம்முறை கொள்கைகளின் அடிப்படையில் அல்லாது உளவியல் ரீதியாக மக்களை குழப்பத்திலும், அச்சத்திலும் ஆழ்த்தி வாக்குகளை அபகரிக்கும் உத்திகளையே கையாண்டு வருவது கண்கூடு அரசியல் பிரமுகர்கள் முதல் அடிப்படை வாதப் பிக்குகள் வரை இந்த உத்தியையே கையாளுகிறார்கள்.

தென்பகுதியில் மதவெறியுடன் கூடிய இனவாத அச்சுறுத்தலாகப் பீறிட்டு கிளம்பி வருகிறது. தமிழ்ப்பகுதிகளில், வரப்போவது முன்னெப்போதுமே சந்தித்திராத இராணுவ ஆட்சி... என்ற வகையிலான கருத்தியலை பேரிடர் வடிவமாகக் காட்டி வாக்குக் கொள்ளையில் ஒரு சாராரும், காழ்ப்புணர்வுடன் கூடிய வெறுப்புணர்வை ஏற்படுத்தும் வகையிலான எதிர்ப்பு அரசியலை மற்றவர்களும், முன்வைத்து வாக்கு வேட்டைக்கு இறங்குகிறார்கள்.

மக்களுக்கான அரசியல் பற்றி சிந்திப்பார் ஒருவருமில்லை. போர் நடந்த காலத்தில் கூட மக்கள் இவ்வளவு அச்சமோ பீதியோ, அவநம்பிக்கையோ கொண்டதில்லை. அப்போது போர்தான் அரசியலை தீர்மானிக்கும் வழியாக இருந்தது. இன்று அரசியல் தான் போர்ச் சூழலை ஏற்படுத்தும் சக்தியாக உள்ளது.


பேச்சளவில் மட்டும் ஜனநாயகம் இருக்கும் நாட்டில் நடைமுறையில் போர்ச்சூழலை ஏற்படுத்தியே அதிகாரம் செய்ய முடியும் என்பது எவரும் அறிந்த விடயமே... போருக்குள் வாழலாம். மரணம் ஒருமுறை வரும். போர்ச் சூழல் என்பது மரணச் சூழலை நிரந்தரமாகவே ஏற்படுத்தும்.

# 400 ஆவது ஆண்டு நிறைவு

# யாழ்ப்பாண நகரத்தின் வரலாற்றுச் சுவடுகள்

## குவைரோசின் நூலும் யாழ்ப்பாணமும்

இ. மயூரநாதன்



The Temporal and Spiritual Conquest of Ceylon.

BY

Father FERNAÕ DE QUEYROZ,
of the Society of Jesus, Sometime Provincial of Goa.

TRANSLATED BY

Father S. G. PERERA,
of the same Society.

COLOMBO:
A. C. RICHARDS, ACTING GOVERNMENT PRINTER, CEYLON.
1930.

இலங்கையின் வரலாறு தொடர்பில், போர்த்துக்கேயப் பாதிரியாரான பெர்ணாவோ டி குவைரோஸ், "இலங்கை மீதான உலகியல், ஆன்மீக வெற்றி" (வுநஅிழசயட யனெ ளிசைவைரயட ஊழஙெரநளவ ழக ஊநலடழஎ) என்னும் நூல் மிகவும் முக்கியமானது. இலங்கை வரலாற்றைப் பொறுத்த அளவில், மகாவம்சத்துக்கு அடுத்ததாகப் பெறுமதி வாய்ந்த நூலாக இதைக் கருதலாம் என இந்த நூலை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவரான எஸ். ஜி. பெரேரா குறிப்பிட்டுள்ளார். போர்த்துக்கேய மொழியில் எழுதப்பட்ட இந்நூல், 1930 ஆம் ஆண்டு ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து வெளியிடப்பட்டது. இந்த ஆங்கில மொழிபெயர்ப்பு நூல் 1300 க்கு மேற்பட்ட பக்கங்களைக் கொண்ட பெரியதொரு நூல். 16 ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் இருந்து, 17 ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதி வரையான யாழ்ப்பாணத்தின் வரலாறு தொடர்பிலும் முக்கியமான தகவல்களை இந்நூல் தருகின்றது. மேற்குறிப்பிட்ட ஏறத்தாழ ஒரு நூற்றாண்டுக் காலப் பகுதியில் யாழ்ப்பாண இராச்சியம் தொடர்பான பொதுவான விபரங்களையும், அரசியல், மதம் என்பவை தொடர்பான விபரங்களையும் இந்த நூலிலிருந்து அறிய முடிகின்றது.

இந்த நூலை எழுதிய கத்தோலிக்கக் குருவானவரான குவைரோஸ் யேசு சபையைச் சேர்ந்தவர். 1617 ஆம் ஆண்டில் போர்த்துக்கலில் பிறந்த இவர் தனது 14 ஆவது வயதில் யேசு சபையில் இணைந்தார். ஆரம்பகாலக் கல்விக்குப் பின்னர் 1635 ஆம் ஆண்டில், அவரது 18 ஆவது வயதில், 30 யேசுசபையினருடன் சேர்ந்து இந்தியாவுக்கு வந்தார். இந்தியாவில் போர்த்துக்கேயரின் தலைமையிடமாக இருந்த கோவாவில், மெய்யியல், இறையியல் ஆகியவற்றைக் கற்றுச் சில காலம் பேராசிரியராகப் பணிபுரிந்தார். பின்னர் யேசுசபையின் நிர்வாகம் சார்ந்த பதவியொன்றில் இணைக்கப்பட்ட குவைரோஸ் படிப்படியாகப் பல உயர் பதவிகளை வகித்தார். 53 ஆண்டுகள் இந்தியாவில் வாழ்ந்த இவர் 1688 ஆம் ஆண்டில் காலமானார்.

இவர் "இலங்கை மீதான உலகியல், ஆன்மீக வெற்றி" என்னும் நூலை 1671 ஆம் ஆண்டில் தொடங்கி 1687 ஆம் ஆண்டில் எழுதி முடித்தார். இவர் இலங்கைக்கு வந்ததில்லை. ஆனாலும், இவர் பிறர் எழுதிய நூல்கள், குறிப்புக்கள் போன்றவற்றையும், கோவாவில் அவருக்குக் கிடைக்கக்கூடியதாக இருந்த தகவல்களையும் அடிப்படையாகக் கொண்டே இந்த நூலை எழுதியுள்ளார். யாழ்ப்பாணத்தில் போர்த்துக்கேயரின் ஆட்சிக் காலத்தின் பிற்பகுதியில் (1635-1658) குவைரோஸ் கோவாவிலேயே இருந்துள்ளார். எனவே, இக்காலத்தில் யாழ்ப்பாணம் தொடர்பான சமகால விவரங்களை இவர் அறிந்திருக்கக்கூடிய வாய்ப்புக்களும் உண்டு.
நூலின் தொடக்க அத்தியாயங்களுள் ஒன்றில் யாழ்ப்பாண இராச்சியத்தின் வரலாற்றை விளக்கும்போது, தொடக்கத்தில் இப்பகுதி, இலங்கைப் பேரரசர்களின் கீழ் இருந்ததாகவும், முதலில் "விதானை" பதவியில் உள்ள ஒருவரால் நிர்வகிக்கப்பட்டுப் படிப்படியான வளர்ச்சி ஏற்பட "அதிகாரி", "முதலியார்" என நிர்வாகியின் தரம் உயர்ந்ததாகவும் நூல் குறிப்பிடுகின்றது. பின்னர் கோட்டை இராச்சியத்தின் பிரதிநிதியாக யாழ்ப்பாணத்துக்கு வந்த செண்பகப் பெருமாள் என்பவனே முதன்முதலாக அரசன் என்ற தரத்தில் யாழ்ப்பாணத்தை ஆண்டவன் என்றும் அக்காலத்திலிருந்தே யாழ்ப்பாண இராச்சியம் உருவானது என்றும் நூல் கூறுகின்றது. ஆனால், செண்பகப் பெருமாள் 1450 ஆம் ஆண்டில் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றுவதற்கு இரண்டு நூற்றாண்டுகளுக்கு முன்னரே யாழ்ப்பாண இராச்சியம் உருவாகிவிட்டது என்பதும் செண்பகப் பெருமாளுக்கு முன்னர் பல தமிழ் மன்னர்கள் யாழ்ப்பாண




யாழ்ப்பாணத்தின் ஒரு பகுதியைக் காட்டும் போர்த்துக்கேயர் கால நிலப்படம்

இராச்சியத்தை ஆண்டுள்ளனர் என்பதும், இன்று பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படுகின்றது.
1544 ஆம் ஆண்டுக்குப் பின்னர் மன்னாரில் போர்த்துக்கேயக் குருமார் உள்ளூர் மக்களை மதமாற்றம் செய்யும் நடவடிக்கைகளை முன்னெடுத்த காலத்தில் இருந்து, யாழ்ப்பாண இராச்சிய விவகாரங்கள் குறித்த விவரமான தகவல்களைக் குவைரோசின் நூலின் தொடர்ந்து வரும் அத்தியாயங்களிலிருந்து இருந்து அறிய முடிகின்றது. மன்னாரில் மதம் மாறியோர் முதலாம் சங்கிலி மன்னனால் கொல்லப்பட்டமை, சங்கிலியைத் தண்டிப்பதற்கு இந்தியாவில் இருந்த போர்த்துக்கேய மதகுருமார் எடுத்த முயற்சிகள், மூன்று தடவைகள்

பொதுவான விபரங்கள் தரப்பட்டுள்ளன. யாழ்ப்பாணம் என்னும் பெயர் பற்றிய விளக்கங்கள், யாழ்ப்பாணம் ஒரு இராச்சியமாக உருவான வரலாறு, யாழ்ப்பாண இராச்சியத்தின் ஆட்சிப் பகுதிகள், வளங்கள், போன்ற விபரங்களுடன், போர்த்துக்கேயரின் படையெடுப்புக்கள் தொடர்பான மேலோட்டமான விபரங்களும் தரப்பட்டுள்ளன. பெயர் தொடர்பாகத் தரப்பட்டுள்ள விபரங்களில் இருந்து, அக்காலத்தில் யாழ்ப்பாணத்துக்கு "யாழ்ப்பாண நாயன் பட்டினம்" அல்லது "யாழ்ப்பாணாயன் பட்டினம்", யாழ்ப்பாணப் பட்டினத்துறை" போன்ற பெயர்கள் புழக்கத்தில் இருந்ததை அறிய முடிகின்றது. யாழ்ப்பாண இராச்சியம் தோற்றம் பெற்ற

இடம்பெற்ற போர்த்துக்கேயப் படையெடுப்புக்கள், இப்போர்களுக்கான பின்னணிகள் என்பன நூலில் விரிவாக விளக்கப்பட்டுள்ளன.
1560 ஆம் ஆண்டிலிருந்து 1619 வரையிலான ஏறத்தாழ 60 ஆண்டு காலத்தில் யாழ்ப்பாணத்தில் போர்த்துக்கேயரின் தலையீடுகளும், கட்டுப்பாடுகளும் படிப்படியாக அதிகரித்து வந்ததை நூல் தரும் விபரங்கள் மிகவும் தெளிவாகக் காட்டுகின்றன. முதலாம் சங்கிலியின் காலத்தில் இருந்து, இரண்டாம் சங்கிலி அல்லது சங்கிலி குமாரன் காலம் வரை நல்லூரில் இருந்து யாழ்ப்பாணத்தை ஆண்ட அரசர்களின் பெயர்கள், ஆட்சிக்காலம், அவர்களின் செயற்பாடுகள் போன்றவற்றை அறிந்துகொள்வதற்கான நம்பத் தகுந்த மூலமாகவும் இந்த நூல் விளங்குகின்றது. யாழ்ப்பாண வைபவ மாலையில் குளறுபடியாகத் தரப்பட்டுள்ள பிற்கால நல்லூர் அரசர்களைப் பற்றிய வரலாற்றை முறைப்படுத்துவதற்கு இந்நூல் பயன்பட்டது.

யாழ்ப்பாணம் இறுதியாக வீழ்ச்சியடைந்த பின்னர், கட்டளைத் தளபதியாகப் பதவியேற்ற ஒலிவேராவின் செயற்பாடுகள் பற்றி இந்நூல் சிறப்பாகப் பேசுகின்றது. குறிப்பாகக் கத்தோலிக்க மதத்தின் வளர்ச்சிக்கு ஒலிவேரா ஆற்றிய பணிகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது. ஒலிவேராவின் காலத்தில் புதிய யாழ்ப்பாண நகரம் உருவானமை, அதன் பின்னணி, ஆகிய விடயங்கள் பற்றி அறிந்துகொள்ள முடிந்தாலும், அந்நகரின் அமைப்பு வளர்ச்சி ஆகியவை குறித்து மிகவும் குறைவான தகவல்களே நூலில் உள்ளன.
யாழ்ப்பாண இராச்சியத்தின் மீதான ஆன்மீக வெற்றிக்காகக் கத்தோலிக்கக் குருமார்கள் மேற்கொண்ட செயற்பாடுகள் தொடர்பான விரிவான தகவல்களும் நூலில் காணப்படுகின்றன. யாழ்ப்பாணத்தை 1591 இல் போர்த்துக்கேயர் கைப்பற்றிப் பொம்மை அரசொன்றை உருவாக்கிய பின்னர், போர்த்துக்கேயப் பாதிரிமார்கள் தமது நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தினர். பண்ணைத்துறைக்கு அருகில் புதிய தேவாலயம் அமைத்தமை, அத்தேவாலயத்துக்காகச் செய்யப்பட்ட மாதா சொரூபத்தின் புதுமைகள், யாழ்ப்பாண அரச குடும்பத்தவர்களை மதம் மாற்றியமை போன்ற மதம் சார்ந்த விடயங்களும் நூலில் மிகுந்த முக்கியத்துவம் பெறுகின்றன.

சுவடுகள் தொடரும்...



ஒரு ஊடகவியலாளர் பெரும் பங்காற்றி வருகிறார். அவரது ஊடகத்தில் தமிழரசுக்கட்சியின் தலைமைத் துவத்தில் பலவீனங்கள் இருப்பதாச் செய்திகளை வெளியிடு வதன் மூலம் தமிழரசுக் கட்சியின் இன்றைய தலைமை வல்லமை அற்றது என்ற ஒரு கருத்தை மக் களின் மனதில் பதியவைக்க முடியும் என்று நினைத்து செயல் படுகிறார் இந்த ஊடகவியலாளர். இவர் அடுத்து மாகாணசபைத் தேர்தல் வந்தால் அதில் முதல்வர் வேட்பாளராக போட்டியிடும் கனவு உலகில் வசித்து வருகிறார் என்றும் பரவலாகப் பேசப்படுகிறது. இதில் இன்னொரு விதத்தில் தமிழரசுக் கட்சியின் கொழும்புக் கிளையைப் பற்றியும் அதன் தலைவரைப் பற்றியும் ஒரு செய்தியைக் கசிய விட்டுப் பிளவு களை ஏற்படுத்திடவும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. கொழும்புக் கிளையின் தலைவர்

நாடாளுமன்றத் தேர்தலில் தனக்கு விசுவாசமானவர்களின் இரண் டாவது தெரிவாகத்தான் வரவேண்டு மென்ற கணிப்பில் இருந்த சுமந்திரன் தன்னை விமர்சித்து வந்த சிறிதரனுக்கு ஒரு எலும்புத்துண்டு போல் நாடாளு மன்ற உறுப்பினருக்கும் அப்பால் வேறு ஒரு பெரிய பதவியைக் கட்சியில் பெற்றுத் தரத் தயாராக உள்ளதாக் கூறியிருப்பார் என்று தகவல்கள் வெளியாகி உள்ளன. இதன் மூலம் சிறிதரனுக்கு விழும் வாக்குகளின் இரண்டாம் வாக்குகளைத் தான் பெறலாம் என்பது தான் சுமந்திரனின் திட்டம். இதன் பிற்பாடு கூட்டமைப்பின் தலைமையைத் தான் கைப்பற்றுவது என்றும் சிறிதரனைத் தான் தமிழரசுக்கட்சியின் தலைவராக்குவ தாகவும் உறுதி அளித்துள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதனால் தான் நீலன் திருச்செல்வத்தை விண்ணன் என்று தலைவர் கூறியதாகவும், புலிகளாகிய

முன்மொழியப்பட்டது. சிறிலங்கா ஒற்றை ஆட்சி அரசொன்றாக அமைய வேண்டும் என்பதே அதுவாகும். உடனேயே செல்வாவின் பெயரில் திருத்தம் ஒன்று முன்மொழியப்பட்டு வழிமொழியப்பட்டது. ஒற்றை ஆட்சி என்ற சொல்லை அகற்றிவிட்டு அவ்விடத்தில் சமஷ்டி என்ற சொல் இடப்பட வேண்டும் என்பதே அதுவாகும். இவ்வாறு எக்கியராஜ்ஜெயை அகற்ற வேண்டும் என்று செல்வா கூறியதையும் சமஷ்டி என்று இட வேண்டும் என்று செல்வா திருத்தம் கொடு வந்ததையும் இன்றைய தமிழரசுக்கட்சி முற்றிலும் மறந்து விட்டு எக்கியராஜ்யே என்ற சொல்லைத் தமிழிலும் வலிந்து புகுத்துகிறது என்றால் இவர்கள் தந்தை செல்வா வழியிலா பயணிக்கிறார்கள்? இல்லையே.! சுமந்திரன் எக்கியராஜே என்பது ஒருமித்த நாடு தான் அது ஒற்றை ஆட்சியல்ல, என்று கூறிய போதெல்லாம் சட்டத் தரணி

**பகுதி - 3**

# நாடாளுமன்றத் தேர்தலும் தமிழினமும்

## பதவிப் போட்டியில் சிக்கித்தவிக்கும் கூட்டமைப்பு

- மாசிலான் -



விகிதாசாரப் பிரதிநிதித்துவம் என்ற முறையைக் கொண்டு வந்து ஐக்கிய தேசியக் கட்சியை நிரந்தரமாக ஆட்சியில் வைத்திருக்கலாம் என்ற கணிப்பு ஜே. ஆர் மனதில் இருந்தது. அதனால் அவர் அந்த முறையை இலங்கை நாடாளு மன்றத் தேர்தலில் அறிமுகப் படுத்தினார். இதன் மூலம் சிறு கட்சிகளும் நாடாளுமன்றம் செல்ல வாய்ப்புகள் ஏற்பட்டது என்பது உண்மையே.ஆனால் பின்னர் கட்சியின் பட்டியலில் யாருக்கு அதிக வாக்குகள் விழுகின்றனவோ! அவர்களே தேர்ந்தெடுக்கப்படுவார்கள் என்ற விருப்பு வாக்களிப்பு முறை மாற்றம் கொண்டு வரப்பட்டபோது தான் கட்சிக்கு உள்ளேயே ஒவ்வொருத்தருக் கும் இடையில் போட்டிகள் தோன்றித் தனிப்பட்ட ஆதரவுக்கான தளம் உருவாக் கப்பட்டது. அதுவே உட்கட்சி முரண் பாடுகளுக் கான களமுமாகியது. இந்த விகிதாசாரப் பிரதிநிதித்துவம் இம்முறை கூட்டமைப்புக்குள் பெரிய பதவிப் போட்டிகளை ஏற்படுத்தியுள்ளது. கூட்டமைப்பு முன்பு பெற்ற நாடாளுமன்ற உறுப்பினர்களது எண்ணிக்கையை இம்முறையும் பெறுவார்களா? என்ற ஐயமும் ஏற்பட்டுள்ளது. இந்த ஐயம் கூட்டமைப் பினரிடையேயும். ஒரு பெரும் பிளவை ஏற்படுத்தியுள்ளது. இந்த முறை யாழ்ப்பாண மாவட்டத்தில் நாடாளு மன்றத்திற்கு ஏழு உறுப்பினர்களையே தெரிவு செய்ய முடியும் என்பதால், யார் யார் அதிக வாக்குகளைப் பெறுவது என்பதில் மறைமுகமான உட்போராட்டம் ஏற்பட்டுள்ளது. வேட்பாளர் தெரிவு, தேசியப்பட்டியல் தெரிவு என்பனவற்றில் சுமந்திரன் தனது ஆதிக்கத்தை நிலை நாட்டியுள்ளார். தனக்கு வேண்டிய சில பெண்களைப் போட்டியிட வைப்பதில் அவர் பின்வாங்கும் நிலை ஏற்பட்டிருந் தும், தேசியப் பட்டியல் மூலம் அதில் ஒரு பெண்ணை உள்ளே கொண்டு வருவதிலும், வேட்பாளர் தெரிவிலும், தனது ஆதரவாளர்களை அவர் தேர்தலில் நிறுத்தியுள்ளதன் மூலம் கட்சிக்குள் தனது செல்வாக்கை நிரூபித்துள்ளார்.

இவ்வாறு வேட்பாளர் தெரிவில் தனது ஆட்களை நிறுத்தியவரின் அடுத்த இலக்குக் கூட்டமைப்பின் தலைமை யாகும். அதற்கு ஏற்றாற்போலவே கட்சிக்குள்ளேயும் சிலரை ஒதுக்கியும், சிலரை முன்னிலைப் படுத்தியும் வரு கிறார் சுமந்திரன். சுமந்திரனுக்கு வழி வகுத்துக் கொடுக்கும் கைங்கரியத்தில்

தேசியப் பட்டியல் மூலம் நாடாளுமன்றத் திற்குள் நுழைந்தால் தனித் தவில் போல் நாடாளுமன்றத்தில் தான் ஒரு பெரும் சட்டத்தரணி என்று வீற்றிருப்பது முடியாது போய்விடும் என்பதால் கொழும்புக் கிளையின் தலைவர் தவராசா கோத்தபாயவுடன் இணக்க அரசியலுக்கு அழைப்பு விடுத்துள்ளதாக ஒரு செய்தியை உலாவ விட்டுள்ளார்கள். அரசியல் யாப்பின் பத்தொன்பதாவது திருத்தத்தை முற்றாக நீக்குவதற்கு கோத்தபாயாவுக்கு முழு ஆதரவு கொடுப்பதற்குச் சுமந்திரன் ஒப்புதல் கொடுத்த செய்தி ஏடுகளில் வந்துள்ளது. தேவை என்றால் கோத்தபாயா அரசுக்கு வேண்டிய மூன்றில் இரண்டு பெரும் பான்மையைக் கொடுப்பதற்குத் தயார் என்றும் கூறிய சுமந்திரன் தான் நல்ல பிள்ளை போலவும், தவராசா தான் அவ்வாறான எண்ணங்களுடன் இருப்பதாகவும் கட்சியின் மூத்த உறுப் பினர் மீது களங்கத்தை ஏற்படுத்தித் தனது கட்சி வட்டத்தைப் பலப்படுத்த முயற்சிக்கிறார். சில நாட்களுக்கு முன்பு போராளிகளைக் கட்சியில் வந்து சேருமாறு அழைத்து ஒரு நாடகத்தை அரங்கேற்றி இருந்தார் சுமந்திரன். ஆனால் கொழும்புக் கிளை முன்பே இவ்வாறு முன்னாள் போராளிகளைச் சேர்க்கத் தொடங்கிய தாகவும் அதனைச் சுமந்திரன் விரும்பவில்லை என்றும் கூறியிருந்தார் தவராசா. இவ்வாறு கூறியதன் மூலம் அவமானப்பட்டு இருந்த சுமந்திரன் தவராசாவைப் பற்றிய செய்தி களை நுட்பமாக ஊடகங்களில் கசிய விட்டு அவருக்கு இழுக்கு ஏற்படுத்த முயன் றுள்ளார்.. ஆனால் தவராசா தான் எந்தச் சந்தர்ப்பத்திலும் இணக்க அரசியலை ஏற்றுக்கொள்ளவில்லை என்றும் தனது கட்சிக்குள்ளேயே ஒருவர் தன்னைப் பற்றிப் பொய்யான கருத்துகளைப் பரப்புவதாகவும் கூறியுள்ளார்.

இது ஒரு பக்கம் இருக்க இன்னொரு பக்கம் சிறிதரன் வேறு ஒரு பாதையில் பயணிக்கிறார். சுமந்திரனை இவ்வளவு காலமும் கண்டித்து வந்த சிறிதரன் திடீரென்று சுமந்திரனை மதியுரைஞர் பாலா அண்ணர் அளவுக்கு உயர்த்திப் பேசியுள்ளார். இவ்வாறான திடீர்ப் புகழ்ச்சிக்குள் சுமந்திரனைப் புதைக்க பின்னணி யில் ஏதாவது இருக்கிறதா என்ற ஐயம் பலரின் மனங்களில் ஏற்பட்டுள்ளது.. இந்தப் புகழ்ச்சிக்குப் பின்னால் சுமந்திரனின் இன்னொரு திட்டம் மறைத்திருக்கிறது.

தாங்கள் பின்னடைவு களைக்கண்டு சோர்ந்தபோதேல்லாம் பாலா அண்ணர் வழிகாட்டித் தங்களுக்கு உற்சாகத்தைத் தந்ததாகவும் அது போன றவர் சுமந்திரன் என்று சிறிதரன் கூறி யுள்ளார். மிகச் சிறந்த நடிப்பாற்றல் கொண்டவர் தான் என்றதைச் சிறிதரன் இதன் மூலம் நிரூபித்திருக்கிறார். சுமந்திரன் சிறிதரன் குழுவினர் நாடாளுமன்றப் பதவிகளுக் காகக் கட்சிக்குள் சிதைவைஏற்படுத்திக் கொண்டு இருக்கிறார்கள். ஆனால் சேனாதிராசா தங்கள் கட்சியில் ஏற்பட் டுள்ள பிளவைக் கண்டு கொள்ள வில்லை. அதேவேளை கூட்டமைப்பை விட்டுப் பிரிந்து சென்றவர்கள் பற்றிக் கவலைப்படுகிறார். பிரிந்தவர்கள் இப்பொழுது தான் தேர்தலுக்காகப் பிரிந்து சென்றார்களா?. அவர்கள் பிரிந்து சென்று பல ஆண்டுகள் கடந்துவிட்டது. அப்பொழுதெல்லாம் கவலைப்படாமல் இருந்த சேனாதி ராசா தேர்தல் முடிந்த பின்னர் ஒற்றுமைக்காகப் பாடுபடப் போகிறாராம். இது மக்களை ஏமாற்றக் கூறுவது என்று மக்களுக்குத் தெரியும். ஆனால் தேர்தலுக்குப் பின்னர் சுமந்திரன் சிறிதரன் ஆகியோரால் தமிழரசுக்கட்சிக்குப் பெரிய சோதனை ஏற்படப்போவதை சேனாதிராசா அறியாமல் வாக்கு வேட்டைக்காக எதை எதையோ சொல்லி வருகிறார் என்பது கவலைக்குரிய விடயம்.

மக்கள் இப்படியான குழப்பங் களையும், கூச்சல்களையும் நன்கு பார்த்துக் கொண்டு தான் இருக்கிறார்கள். கூட்டமைப்பு இதுவரை கிடைத்த அனைத்துச் சந்தர்ப்பங்களையும் தவற விட்டு விட்டது.இப்போது கட்சிக்குள்ளே குழிபறிப்புகள் தான் நடந்து கொண் டிருக்கிறது என்பதை மக்கள் நன்குணர்ந் துள்ளார்கள். வீட்டை மாற்றுவோம் என்ற சிந்தனை வளர்ந்து வருகிறது. கூட்டமைப்பு ஒற்றை ஆட்சிக்குள் தான் நிற்கும். ஒற்றை ஆட்சியில் தாயகம் தேசியம் என்பன என்றுமே சாத்திய மில்லை. என்பதைத் தமிழ் மக்கள் புரிந்து கொண்ட மாற்றத்தைக் கொண்டு வருவார்களா? என்ற வினா பலதரப் பிலும் எழுப்பப்பட்டு வருகிறது. பதவிக் கான அரசியலா? மக்களுக்கான அரசியலா? இங்கு நடைபெறுகிறது என்பதே தற்போதைய கேள்வி.

1972 இல் அரசியலமைப்பு உருவாக்கச் சபையில் இரண்டாவது அடிப்படைத் தீர்மானம் டாக்டர் கொல்வின் ஆர் டி சில்வாவினால்

தவராசா எங்கிருந்தார், சேனாதிராசா எங்கிருந்தார் என்று தெரியவில்லை. செல்வாவிற்குத் தெரியாத சட்டமா?

மு. திருசெல்வத்திற்குத் தெரியாத சட்டமாமா? வி.எஸ்.ஏ புள்ள நாயகத்திற்குத் தெரியாத சட்டமா? இவ்வாறு ஏராளமான சட்ட மேதைகளால் தயாரிக்கப்பட்ட திருத்தத்தை சுமந்திரன் ஏற்றுக் கொள்ளாமல், ஒற்றை ஆட்சிக்குள் சமஷ்டி இருக்கிறது என்பதையும், சமஷ்டி என்றால் சிங்கள மக்கள் பயப்படுவார்கள் என்பதையும் ஏற்று அமைதி காத்த சேனாதிராசா, தவராசா போன்றவர்கள் இன்று தங்கள் கட்சிப் பதவிகளுக்கே ஆபத்தைத் தேடிக்கொண்டார்கள்.

இது தான் உண்மை. இதை உணர்ந்தால் கட்சிகளை ஒற்றுமைப் படுத்தலாம். மாறாக சுமந்திரன் வழியில் தான் செல்வோம் என்றால் தமிழரசுக் கட்சியும், கூட்டமைப்பும் சுமந்திரனிடம் பறிபோவது தவிர்க்க முடியாததாகும். தமிழ் மக்கள் இதை நன்குணர்ந்து தேர்தலைச் சந்திக்க வேண்டும்..



# கருணாவின் தேர்தல் பிரசாரம் மற்றுமொரு காட்டிக் கொடுப்பு நடவடிக்கையா?

- குருபார்வை -

சென்ற வாரம் இப்பத்திரிகையில் தேர்தல் கால உளறு வாயர்களான வேட்பாளர்கள் குறித்துப் பரவலாக பேசப்பட்டிருந்தது. குறிப்பாக வள்ளுவரின் "யாகாவாராயினும் நாகாக்க, காவாக்கால் சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு" என்ற குறள் வார்த்தைகள் கூறும் அர்த்தபுஷ்டியான அறிவுரையைப் பற்றிச் சற்று அழுத்தமாகவே குறிப்பிடப் பட்டிருந்தது.

அதனை எழுதிய சூடு ஆற முன்னரே சொல்லிழுக்குப்பட்டு சோகாப்பர்களாக பிரமுகர்கள் பலர் தமது உளறல் வாயால் தம்மைத் தாமே இனங்காட்டியுள்ளமை நாட்டு மக்களின் நாவில் பிரதான பேசுபொருளாகியுள்ளது.

பட்டறிவோ, பகுத்தறிவோ இல்லாத வெறுமனே பதவிப் பதர்களாகவே தம்மை இனங்காட்டி வரும் நமது வேட்பாள நாயகர்கள் பலர் தேர்தல் பிரசார மேடை என்ற தளம் கிடைத்ததுமே பேசக்கூடாத விடயங்களை, பேசக் கூடாத சந்தர்ப்பங்களில், பேசக் கூடாத முறையில், பேசக் கூடாதவர்கள் முன்னிலையில் பேசி மாட்டிக்கொண்டு அவஸ்தைபடுவது அண்மைக் காலத்தில் அதிகரித்து வருவது சில சமயங்களில் எரிச்சலையும் பல சமயங்களில் அருவருப்பையும் மட்டுமல்ல அவமானத்தை ஏற்படுத்துவதாகவும் அமைந்துள்ளது.

சம்பந்தன் ஐயாதான் முதுமையின் இயலாமையும் இயலாமையால் இயல்பாகவே ஏற்படக் கூடிய கோபமும் எரிச்சலும் கலந்த கலவையாகக் கருத்துக்களை வெளியிட்டு வருகிறார் என்றால் சுமந்திரன், சிறிதரன், சித்தார்த்தன், சுரேஷ் பிரேமசந்திரன் ஏன் விக்கினேஸ்வரன் ஐயாவும் கூட பேசும் பேச்சுக்களும், விடுத்துவரும் அறிக்கைகளும், மிகமிக சிறுபிள்ளைத் தனமாகவும், கோமாளித் தனமாகவும் மட்டுமல்ல மக்களை ஏமாளிகளாக நினைத்துக் கொண்டு மேற்கொள்ளும் நடவடிக்கைகளாகவே இருக்கின்றன.

கொள்கை, கோட்பாடுகள் தமிழ்த் தேசியம் மற்றும் மக்கள் நலன் சார் திட்டங்கள், எதிர்காலச் செயற்பாடுகள் குறித்து மக்களுக்கு நம்பிக்கையூட்டும் வகையில் தமது கருத்தியல் தளத்தை வலுவாக கட்டமைத்துச் செயற்பட வேண்டியவர்கள் வெறும் கீழ்த்தரமானதும், காழ்ப்புணர்வு கொண்டதுமான மூன்றாந்தர எதிர்ப்பு அரசியலையே தொடர்ந்து பேசிவருவது தமிழ் மக்களுக்கு தமது அரசியல் தலைமைகள் மீதான நம்பிக்கையீனத்தை அதிகரிக்கவே வைத்துள்ளது. இது தமிழினத்தின் எதிர்கால எதிர்பார்ப்புகளுக்கு ஆரோக்கியமானதும் அர்த்தமுள்ளதுமான செய்திகள் எதனையும் தருவதாக இல்லை. மாறாக எதிர்காலத்தில் தமிழினம் சந்திக்க போகும் அச்சங்களையும், அவலங்களையும் முன்னெச்சரிக்கை யுடன் உணர்த்துவதுமாக உள்ளது.

முன்னாள் கருணா அம்மான் வெறும் விநாயகமூர்த்தி முரளிதரனாகத் தன்னை, தன் சுயத்தை வெளிப்படுத்திய பின்னர் செய்து வந்த காரியங்கள், பேசி வந்த பேச்சுக்கள் எல்லாம் அவர் பேரினவாத அரசியல்வாதிகளின் விசுவாசமான அடிமை என்பதை தமிழ் மக்களுக்கு இனம் காட்டி வந்த நிலையில் அவரது அண்மைக்கால அரசியல் மேடைப் பேச்சு அவர் மீது பேரினவாத தலைமைகளும், பௌத்த மத அடிப்படைவாதிகளும் கொண்டுள்ள மதிப்பீடு என்னவென்பதை அவருக்குப் பட்டவர்த்தனமாக்கியுள்ள தென்றே கூறவேண்டும்.

முதலாவது காட்டிக் கொடுப்புத் துரோகத்தனத்தின் மூலம் தன்னின மக்களின் உரிமைப் போராட்டத்தை நசுக்கவும் அவர்களில் பல்லாயிரக் கணக்கானோரை இனவழிப்புச் செய்யவும் உதவி மாபெரும் முள்ளிவாய்க்கால் பேரவலம் ஏற்படக் காரணமானார் என்பதை பௌத்த துறவிகள், இராணுவ உயர் அதிகாரிகள் தென்னிலங்கை அரசியல் தலைமைகள் எல்லாருமே ஏககாலத்தில் வெளிப்படுத்தியுள்ள சூழலில் அவர் விசுவாசித்தவர்களாலேயே காட்டிக் கொடுக்கப்பட்டுள்ளார் என்றே கூறவேண்டும்.

அவர் யார்யாருக்கெல்லாம் அற்ப வசதிகளுக்காகவும், பதவிச் சலுகைகளுக்காகவும், சொகுசு வாழ்க்கைகாகவும் தன் இனத்தைக் காட்டிக் கொடுத்து உதவினாரோ அவர்களில் சிலர் அவர்மீது இன்று பேரினவாதிகளால் சுமத்தப்பட்டுவரும் குற்றங்கள் மற்றும் கண்டனங்களிலிருந்து தற்காலிகமான பாதுகாப்பு வழங்கப்பட்டாலும் அவர் தன்னினத்திற்கு துரோகம் செய்து அரசுக்கு உதவி செய்து போரில் வாகை சூட உதவினார். அதற்காக அவரை மன்னிக்கலாம் என்று சொல்லப்பட்டாலும் ஏனையோர் அவரைக் கைதுசெய்யுங்கள் விசாரியுங்கள், சிறையில் அடையுங்கள் தண்டனை வழங்குங்கள் என்று கூக்குரல் இடத் தொடங்கியுள்ளமை தென்னிலங்கையில் ஒரு கொதி நிலையை ஏற்படுத்தியுள்ளது. இது தேர்தல் காலமாகையால் ஆளும் கட்சிக்கு எதிரான ஒரு தேர்தல் பிரசாரக் கருவியாகவும் இப்பிரச்சினை பயன்படுத்தப்படுவதும் தவிர்க்க முடியாத விடயமாகும்.

ஆனால் இங்கே இன்னொரு முக்கியமான விடயமும் பேசுபொருளாகியுள்ளது. அதாவது விநாயகமூர்த்தி முரளிதரனின் தேர்தல் பிரசார உரை கூட ஒரு திட்டமிட்ட மற்றொரு காட்டிக் கொடுப்பு நடவடிக்கையாகவே அரசியல் நோக்கர்களால் பார்க்கப்படுகிறது என்பதேயாகும்.

சர்வதேச ரீதியில், அரசின் அண்மைக்கால அதிரடி நடவடிக்கைகள் பலவும் சந்தேகத்துடனும், சற்றுச் சினத்துடனும் பார்க்கப்படுகிறது என்பது போர்க்கால குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் குறித்து விசாரணை மற்றும் பொறுப்புக் கூறல் விடயங்களில் அரசின் மெத்தனப் போக்கையும் தெனாவெட்டு கதையையும் பகிரங்கமாகவே கண்டிக்கும் தன்மை அதிகரித்து வருவதைக் காணமுடிகிறது.

இலங்கை அரசு இராணுவ ரீதியிலான ஆட்சி நிர்வாகக் கட்டமைப்பை நோக்கி நகர்கிறதா? என்ற கேள்வி பலரின் மனதிலும் முனைப்புக் கொண்டு வருவதையும் அவதானிக்க கூடியதாக உள்ளது. இந்த நிலையில் இதிலிருந்து சர்வதேச சமூகத்தின் கவனத்தை திசை திருப்பவே விநாயகமூர்த்தி முரளிதரனை இவ்வாறான ஒரு அறிக்கையை அரசே விடவைத்துள்ளது என்ற கருத்துருவாக்கமும் வலுப்பெற்று வருகிறது.

இதன் மூலம் ஆனையிரவு - கிளிநொச்சி சமரின் போது சரணடைந்த மூவாயிரம் வரையிலான படையினர் விடுதலைப்புலிகள். அதாவது அப்போது தளபதி கருணாவாக இருந்த நபர் கொன்று, சர்வதேச அளவில் பெரும் போர்க் குற்றத்தையும் மனித உரிமை மீறல்களையும் மேற்கொண்டார் என்ற குற்றச்சாட்டை வலுப்பெற வைக்க அரசே இந்த ஒப்புதல் வாக்கு மூலம் போன்ற பிரசார அறிக்கையை முரளிதரனை விட வைத்தார்கள் என்று கதையை கற்பனை என்று ஒதுக்கி விடவும் முடியாது. ஏற்கனவே முரளிதரன் தேர்தலில் வேறு ஒரு கட்சியில் போட்டியிட்டாலும் (அதுவும் தமிழ் மக்களின் வாக்கு வங்கியைச் சிதறடிக்கும் நோக்கில்....) அவருக்கு மஹிந்த அரசு அமையப் போகும் புது அரசில் தேசிய பட்டியல் ஊடாக இடம் அளிக்கப் போவதாகவும், வேறு பதவிகள் வழங்கப் போவதாகவும் உத்தரவாதம் அளிக்கப் பட்டுள்ளதாகக் கூறப்படும் நிலையில் முரளிதரன் அதற்காக எதனையும் செய்யத் தயாராக இருந்திருப்பார் என்றும் அரசியல் வட்டாரங்களில் உலாவரும் செய்திகளை முற்றாக நிராகரிக்கவும் முடியாது.

தான் என்ன செய்தாலும் தனக்கு எந்த நெருக்கடி வந்தாலும் தன்னை தற்போதைய ஆட்சியாளர்கள் கைவிடாது பாதுகாப்பார்கள் என்ற நம்பிக்கை முரளிதரனுக்கு அதீதமாகவே இருந்தது. அதனாலேயே... "நான் உண்மையைத் தான் சொன்னேன் போர்க்காலத்தில் நடந்ததைத் தான் சொன்னேன்... எல்லோருக்கும் ஏற்கனவே தெரிந்ததைத்தான் சொன்னேன்... என்னை யாரும் எதுவும் செய்துவிட முடியாது..." என முரளிதரனால் கம்பீரமாகப் பேசமுடிகிறது.

எதுவானாலும் இந்த நகர்விலும் அதாவது ஆனையிறவிலும், கிளிநொச்சியிலும் தான் மேற்கொண்டதாகக் கூறும் 3000 வரையிலான படையினரின் கொலைகள் விடுதலைப் புலிகளின் தலைமைப் பீடத்தின் கட்டளையின் பேரிலேயே செய்ததாக முரளிதரன் சொல்வது விடுதலைப் புலிகளுக்குச் சர்வதேச ரீதியில் நெருக்கடியையும், போர்குற்றம் குறித்த பிரச்சினையில் அரசுக்கு ஒரு விதமான பாதுகாப்புச் சூழலையும் ஏற்படுத்தவே முரளிதரனின் இந்த தேர்தல் பிரசாரம் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்டது என்ற நோக்கர்களில் கருத்து, சிந்திக்க வேண்டியதொன்றே.

எது எப்படியானாலும் விநாயகமூர்த்தி முரளீதரன் தனது அரச விசுவாச நடவடிக்கைகளில் அரசு தன்னைப் பாதுகாக்கும் என்ற நம்பிக்கையில் தொடர்ந்தும் ஈடுபடுகிறார் என்ற கருத்து வலுப்பெறவே செய்கிறது.

இதனை தேர்தலுக்குப் பின்னர் அமையப் போகும் புதிய அரசில் அவரின் அமர்விடம் எதுவாக இருக்கப் போகிறது என்பதை வைத்து உறுதி செய்ய முடியும்.



# கோத்தாபாய அரசுடன் கைகோர்க்கும் கூட்டமைப்பு



- சிலம்பு -

கோத்தபாயாவின் அரசு சனநாயகப் பாதையை விட்டு மெல்ல மெல்லச் சர்வாதிகார ஆட்சிக்கு, அதாவது இராணுவ ஆட்சிக்குச் செல்கிறதா என்ற எண்ணம் பலரின் மனதில் தோன்றியுள்ளது.சனாதிபதி சிவில் நிர்வாக அதிகாரிகள் பணியாற்றிய பல இடங்களுக்கு இப்போது பதவியில் உள்ள படைத்துறையினரையும், ஓய்வு பெற்ற படைத்துறையினரையும் நியமனம் செய்து வருவதே, இத்தகைய ஐயங்களை ஏற்படுத்துகிறது .

விடுதலைப் புலிகளின் போராட்டத்தை முடிவுக்குக் கொண்டு வந்தவர்கள் படைத் துறையினர் என்பதால் சிங்கள மக்களுக்கு அவர்கள் மேல் ஒரு நம்பிக்கை இருக்கிறது. தற்போது கொரோனாத் தொற்றுப் பரவலைத் தடுப்பதற்கும், படைத்துறையினர் பயன்படுத்தப்பட்டதால் அவர்கள் சிவில் அதிகாரிகளைக் காட்டிலும் தகைமை கூடியவர்கள் என்ற ஒரு எண்ணத்தைச் சனாதிபதி மக்கள் மனங்களில் ஏற்படுத்த விழைகின்றார்.அதன் தொடர்ச்சியாகவே செயலணிகளை அமைத்து, அவற்றிலும் படைத்துறையினரைப் பொறுப்புள்ளவர்களாக நியமித்து புத்த சிங்கள மேலாண்மையை நிலை நிறுத்த வழி ஏற்படுத்துகிறார். இதே நேரம் அரசியல் யாப்பின் பத்தொன்பதாவது திருத்தத்தை நீக்க வேண்டும் என்ற ஒரு கருத்தையும் அவர் பதவி ஏற்றது முதல் கூறி வருகிறார்.அதற்கு வரும் தேர்தலில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையை அவர் எதிர்பார்த்து நிற்கிறார்.

அரசியல் யாப்பின் பத்தொன்பதாவது திருத்தம் என்பது நிறைவேற்று சனாதிபதியின் அதிகாரங்களைக் குறித்ததாகக் கருத முடியாது.அரசியல் அமைப்புச் சபைகள் மூலம் சில ஆணையங்களை நிறுவி அதற்கான உறுப்பினர்களைத் தெரிவு செய்து நியமிப்பதும்,நாடாளுமன்றத்தை முன்னர் இரண்டு ஆண்டுகளில் கலைக்க முடியும் என்று இருந்ததை, நான்கரை ஆண்டுகள் கழிந்த பின்னரே கலைத்துப் புதிய தேர்தலை நடத்தலாம் என்பதுவும் அமைச்சரவையில் அமைச்சுப் பொறுப்புகளைச் சனாதிபதி வைத்திருக்க முடியாது என்பவை மட்டுமே அத்திருத்தத்தின் மூலம் நிறைவேற்றப்பட்டவைகளாகும். இதனால் சனாதிபதியின் நிறைவேற்று அதிகாரங்கள் பெரிதாகக் குறைக்கப்பட்டிருக்கவில்லை.இவ்வாறு இருக்கும் நிலையில் தான் பத்தொன்பதாவது திருத்தத்தை நீக்க வேண்டும் என்று கோத்தபாய இராசபக்சா தெரிவித்துள்ளார். சனாதிபதி நாடாளுமன்றத்தையும் தனது முழுக் கட்டுப்பாட்டில் வைத்திருக்கவே பத்தொன்பதாவது திருத்தத்தை நீக்க வேண்டும் என்று கூறி வருகிறார்.இது வரை இது தொடர்பாக அமைதி காத்து வந்த மகிந்த இராசபக்சாவும் பத்தொன்பதாவது திருத்தத்தை நீக்க வேண்டும் என்று தற்போது கூறுகிறார்

இந்தப் பத்தொன்பதாவது திருத்தம் பற்றி அரசியல் ஆய்வாளர் ஜெகான் பெரேரா கூறிய கருத்துகளை இங்கு நோக்குவது சிறந்ததாக இருக்கும். "பாதுகாப்புப் படையினரை அரசு அதிகமாக நம்பத் தொடங்குகிறது என்பதற்கான அறிகுறிகள் அரசின் செயல்பாடுகள் மூலம் தெரிகிறது.இரண்டு சனாதிபதி செயலணிக் குழுக்கள் நியமனத்தின் மூலம் இது நோக்கப்படுகிறது.

முதலாவது ஒரு பாதுகாப்பான நாட்டையும்,சட்டபூர்வமான நல்லொழுக்கச் சமுதாயத்தையும் உருவாக்குவதற்கான செயலணியாகும். இக்குழுவானது முற்றிலும் இராணுவம், உளவுத்துறை, காவற்றுறை ஆகியனவற்றின் அதிகாரிகளினால் உருவாக்கப்பட்டிருக்கிறது.

இரண்டாவது கிழக்கு மாகாணத்தில் தொல்பொருள் பாரம்பரிய முகாமைத்துவத் திற்கான சனாதிபதி செயலணி பற்றியது. இக்குழுவிலும் உயர் மட்டப் பாதுகாப்புப் படையினரைக்கொண்ட குழுவினரும் பணிபுரிவர்." இவ்வாறு தெரிவித்துள்ளார் ஜெகான் பெரேரா. இது மிகவும் ஆபத்தான ஒரு செயல்பாடு என்பது தான் பொதுவான கருத்தாகும். போரை வெற்றிகொண்ட படையினர் கொரோனாவையும் வென்றவர்கள் என்ற ஒரு தோற்றம், படையினர் சகலதையும் திறமையாகக் கையாள்வார்கள் என்ற மன நிலையை மக்களிடம் ஏற்படுத்தலாம் என்று ஆட்சியாளர்கள் நினைக்கிறார்கள்.இதனால் தான் சிவில் சேவையாளர்கள் பணியாற்றிய முப்பதுக்கும் மேற்பட்ட பதவி இடங்களுக்கு ஓய்வுபெற்ற படையினரையும் ,பணியில் உள்ள படைத்துறையினரையும் நியமித்து நாட்டின் வளர்ச்சியை மேம்படுத்தலாம் என்ற முடிவுக்கு வந்துள்ளார்கள். ஆனால் இது சாத்தியமா? இது எதுவரை கொண்டுபோய் விடப்போகிறது ?என்ற அச்சமே மேலோங்கி உள்ளது. ஆட்சியாளரின் ஒவ்வொரு நகர்வும் சர்வாதிகாரத்தை நோக்கிய நகர்வா ? என்ற அச்சம் பரவலாகக் காணப்படுகிறது.

இந்நிலையில் பத்தொன்பதாவது திருத்தத்தையும் நீக்குவது பற்றி ஜெகான் பெரேரா கூறியதையும் நோக்குவது நன்றாகும்..
"தற்போதைய தருணத்தில் மதிப்பிழந்த அரசியல் வாதிகளையும் பொது நிர்வாக சேவையில் உள்ளவர்களையும் விட இந்தப் பாதுகாப்புப் படை யினர் சிறந்த வேலையைச் செய்வார்கள் என்று நம்பக்கூடிய பலர் உள்ளனர். இலங்கை நிர்வாக சேவையின் செயல் திறன் மற்றும் அர்ப்பணிப்பு என்பன அடிப்படையில் தரம் ஒன்று என்ற கருதப்பட்டதொரு காலம் இருந்தது. அரசியல் வாதிகள் நிர்வாகத்தில் தலையிடுவதால் நிர்வாக சேவையின் பெருமை பாதிக்கப்பட்டது. இதனாற்றான் இரண்டாயிரத்துப் பதினைந்தாம் ஆண்டு நாடாளுமன்றத்தின் ஒருமித்த கருத்து ஒப்புதலுடன் பத்தொன்பதாவது அரசியல் அமைப்புத் திருத்தம் நிறைவேற்றப் பட்டது. இந்தப் பத்தொன்பதாவது திருத்தம் மேலும் பலப்படுத்தப் பட வேண்டும். எதிர்காலத்தில் அரசியலமைப்புச் சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டால் அதை இரத்துச் செய்யக்கூடாது. நாடாளுமன்றம் உட்பட நிர்வாக நிறுவனங்களை வலுப்படுத்துவது காலத்தின் தேவை" என்று ஜெகான் பெரேரா தெரிவித்துள்ளார்.

பத்தொன்பதாவது அரசியல மைப்புத் தீர்மானத்தை வலுப்படுத்த வேண்டும் என்று ஜெகான் பெரேரா மாத்திரமல்ல மேலும் பலர் கூறி வரும் நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் ஊடகப் பேச்சாளர் சுமந்திரன் பத்தொன்பதாவது திருத்தத்தை முற்றாக நீக்குவதற்கு தங்களின் ஒப்புதலை தெரிவித்துள்ளார்.இது ஆச்சரியப்படக்கூடியதா, இல்லையா! என்று கூடக் கூற முடியவில்லை. ஏனெனில் இந்த பத்தொன்பதாவது திருத்தத்தின் மூலம் தான் நாட்டிற்கு இரண்டாவது முறையாக ஏற்பட்ட எதேச்சாதிகார ஆட்சியை முறியடித்துச் சனநாயகத்தை காப்பாற்றினோம் என்று கூறிய கூட்டமைப்பு இப்பொழுது அதனை நீக்குவதற்கு ஒத்துழைப்புக் கொடுக்கத் தயாராக உள்ளதாக அறிவித்துள்ளது.

மைத்திரிபால சிறிசேனாவை ஆட்சிக்கட்டில் வைத்து நல்லாட்சியைக் கொண்டுவந்த கூட்டமைப்பு, அவர் திடீரென ரணில் விக்கிரமசிங்காவைப் பிரதமர் பதவியிலிருந்து நீக்கிவிட்டு மகிந்த இராசபக்சாவை பிரதமராக்கியதும் குழப்பமடைந்து போனார்கள். இந்தத் திகைப்பிலிருந்து அவர்களைக் காப்பாற்றியது பத்தொன்பதாவது திருத்தமே. ராசபக்சாவால் தனது பெரும்பான்மையைக் காட்ட முடியாத நிலையில் சனாதிபதி மைத்திரிபால சிறிசேனா நாடாளு மன்றத்தைக் கலைத்தார். அரசியல் யாப்பின் மூலத்தில் நாடாளுமன்றத்தை முதல் இரண்டு ஆண்டு காலத்திற்குள் கலைக்க முடியாது என்றிருந்தது. நாடாளு மன்றத்தை நான்கரை ஆண்டுகள் கழிந்த பின்னரே கலைக்கச் சனாதிபதியால் முடியும் என்று பத்தொன்பதாவது திருத்தம் கூறியது. இதை வைத்துத் தான் சுமந்திரன் உட்படப் பல சட்டத்தரணிகள் வழக்காடி பாராளுமன்றக் கலைப்புத் தவறு என்று வாதிட்டு வெற்றியடைந்தனர். ரணில் மீண்டும் பிரதமரானார். இவ்வாறு பயன்பட்ட பத்தொன்பதாவது திருத்தம் சனநாயகத்தைப் பாதுகாத்த பத்தொன்பதாவது திருத்தத்தை முற்றாக நீக்க வேண்டும் என்று கூறுகிறார் சுமந்திரன். சனாதிபதி எந்தத் திருத்தத்தை நீக்கினால் மேலும் தனது கைகள் வலுப்பெறும் என்று கூறுகிறாரோ! அதையே சுமந்திரனும் வலியுறுத்துவது என்ன காரணத்தினால். ?

ஐக்கிய தேசியக் கட்சி இரண்டாக உடைந்து விட்டது. அதனால் இனி இப்போதைக்கு ஆட்சியைப் பிடிக்க முடியாது.எனவே ஆளும் வர்க்கத்துடன் இணைவதே உள்ள வழி .எனவே தான் சுமந்திரன் வலியச் சென்று சனாதி பதிக்கு ஆதரவு கொடுக்கிறார் என்று கருதலாம்.அது மட்டுமல்ல ஆட்சியாளருக்குத் தேவை என்றால் மூன்றில் இரண்டு பெரும்பான்மை யையும் தாம் வழங்கத் தயாராக இருப்பதாகவும் கூறியுள்ளார் சுமந்திரன்..

கடந்த பத்து ஆண்டுகளாக ஜெனீவா வரை சென்று மகிந்த குடும்பத்தைக் காப்பாற்றியவர்கள் இப்பொழுது இங்கே நேரடியாகவே அவர்களுக்கு ஆதரவு கொடுப்பது ஆச்சரியமானதல்ல. கூட்டமைப்பைச் சுமந்திரன் எங்கெல்லாம் இழுத்துச் செல்கிறார் என்பதற்கு இப்போது நல்ல சான்று கிடைத்துள்ளது.

# தென்னிலங்கை அரசியலில்

## “கருணா காவியம்”

- பரணி -



விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இருந்தபொழுது ‘கருணா அம்மான்’ என அழைக்கப்பட்ட முரளீதரன் தனது பெரும் சாதனை என இரண்டாயிரம் முதல் மூவாயிரம் இராணுவத்தினரை ஆனையிறவுச் சமரில் கொன்றதாக அம்பாறையில் நடந்த தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் வைத்துச் சொல்லியுள்ளார். முரளீதரன் தமிழர் ஐக்கிய சுதந்திர முன்னணி என்ற பெயரில் கட்சியை நடத்திக்கொண்டு , இத் தேர்தலில் அம்பாறை மாவட்டத்தில் அகில இலங்கை தமிழர் மகா சபை என்ற அமைப்பில் தேர்தலில் போட்டியிடுகிறார். அம்பாறையில் நடந்த தேர்தல் கூட்டத்தில் வைத்தே “நான் கொரொனோ வைரசைவிடப் பயங்கரமானவன்,” எனவும், “ஒரே தினத்தில் இரண்டாயிரம், மூவாயிரம் வரையிலான இராணுவத்தினரைக் கொலை செய்ததாகவும் ” கூறியுள்ளார். தேர்தல் கூட்டம் என்பதால் சிங்கள இராணுவத்தினரைத் தான் கொன்றதாகக் கூறினால், தமிழ் மக்கள் தனக்கு வாக்களிப்பர் என்ற நோக்கத்தில் இவ்வாறு பேசியிருப்பார் என்று கருத இடமுண்டு. ஆனால் இவரது இந்தப் பேச்சு, தென்னிலங்கையில் அரசியல் வாதிகளிடையே பலவித கருத்து மோதல்களை ஏற்படுத்தியுள்ளது. ஆட்சியாளர்கள் கட்சியில் அங்கம் வகிக்கும் உறுப்பினர்கள், எதிர்க்கட்சியினர் என்று பலரும் இவரது பேச்சை அடிப்படையாக வைத்துப் பலவாறான கருத்துகளைத் தெரிவித்து வருகின்றனர். இதற்கிடையில் அவரது இந்தப் பேச்சு குறித்து குற்றப் புலனாய்வுப் பிரிவினர் இவரை விசாரணைக்கு வருமாறு அழைப்பும் விடுத்துள்ளனர். சென்ற செவ்வாய்க்கிழமை விசாரணைக்குச் செல்வார் என்று குறிப்பிட்டபோதும் முதலில் நலமின்மை காரணமாக அவர் அன்று விசாரணைக்குச் சமூகமளிக்கவில்லை. பின்னர் வியாழக் கிழமை விசாரணைகாகச் சென்றதாகவும்,ஏழு மணித்தியாலங்கள் விசாரணை நடைபெற்றதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. விடுதலைப்புலிகள் அமைப்பின் உறுப்பினராக தான் இருந்தபோது இராணுவத்தினரைக் கொலை செய்தது அனைவரும் அறிந்த விடயம் என்பதால் தன்னைக் கைது செய்ய முடியாது என்று முன்னதாக அவர் கூறியிருந்தார்.

விசாரணையின் பின்னர் கருத்துத் தெரிவித்த முரளீதரன் , “அப்போது நடந்ததை தேர்தல் பிரசாரத்தில் ஒரு உதாரணத்துக்காகக் கூறினேன். அதனைப் பெரிதுபடுத்து வதில் எந்தப் பிரயோசனமும் இல்லை.அப்படிப் பெரிது படுத்துபவர்கள் எமது அரசாங்கத்திற்குச் சிங்கள மக்களின் வாக்குகளைக் குறைப்பதற்கான பணியாகவே இதனைச் செய்கின்றனர். அதனைப் பொருட்படுத்தாது அதிலிருந்து தாங்கள் வெற்றி பெற வேண்டும். அம்பாறை மாவட்டத்தில் தனியான கட்சியொன்றில் நாம் போட்டியிடு கிறோம். நாங்கள் யாருக்கும் வலிக்கும் வகையிலோ. இராணுவத்தினரைக் குறைத்து மதிப்பிட்டோ கதைக்கவில்லை. இராணுவத்தினர் பலவித வெற்றிகளைப் பெற்றுள்ளனர். அதேபோன்று அனர்த்த நேரங்களிலும் அவர்கள் பெரும் பங்காற்றியுள்ளனர். இதன் படி இராணுவத்தினரை நான் ஒருபோதும் குறைத்து மதிப்பிட்டுக் கதைத்ததில்லை” என்று கூறியுள்ளார்.

முரளீதரனின் கூற்று எப்படியிருந்தாலும் அது பற்றித் தமிழ் மக்கள் பெரிதாக அலட்டிக் கொள்ளப்போவதில்லை. ஏனெனில் அவர் எப்போது இயக்கத்தை விட்டு வெளியேறினாரோ அன்றே அவர் தமிழினத் துரோகியாகவே தமிழ் மக்கள் கருதி விட்டனர். ஆனாலும் தேர்தலில் இராசபக்சாக்களுடன் நில்லாது தனியான கட்சியாக நின்றுகொண்டு இவ்வாறு தன்னைப் பெரிய வீரன் என்று காட்டி, இத்தனை ஆயிரம் இராணுவத்தினரைக் கொன்றவன் என்று பேசினால் தமிழ் மக்கள் வாக்களிப்பர் என்ற ஒரு நப்பாசையுடன் கூட்டத்தில் இவ்வாறு பேசியிருக்கலாம். வாக்குக்காகப் பேசிய பேச்சு இத்தனை தாக்கத்ததை தென்னிலங்கையில் ஏற்படுத்தும்என்று அவர் நினைத்ததில்லை.இராசபக்சாக்கள் தன்னைக் காப்பாற்றுவார்கள் என்ற முழு நம்பிக்கையினாலேயே மேடையில் தான் வீரவான் என்று பிதற்றியுள்ளார். தென்னிலங்கை அரசியலில் எதிக்கட்சியினருக்கு இவரது உரை தீனி போட்டதுபோல் இருப்பதாகத் தெரிகிறது. ஆனால் அது பெரிய தாக்கத்தை ஏற்படுத்துமா? என்பது கேள்விக்குறியே.இவரது பேச்சுக் குறித்துக் கருத்துத் தெரிவித்த பிக்குகள் முன்னணி இவரை உடன் கைது செய்யுமாறு கோரியுள்ளது.

முரளீதரனின் இப்பேச்சுப் பற்றிக் கருத்துக் கூறிய தினேஷ் குணவர்த்தனா, “அவர் மீது விசாரணையும் நடத்தலாம், அவருக்கு மன்னிப்பும் கொடுக்கலாம். புலிகள் எவ்வளவு கொடூரமானவர்கள் என்பதைச் சர்வதேசம் புரிந்துகொள்ள வேண்டும்” என்று கூறியுள்ளார். கருணாவை வைத்துப் புலிகள் கொடூரமானவர்கள் என்று தெரிந்து கொள்ள முடியும் கூறிய தினேஷ் குணவர்த்தனா, அவருக்கு மன்னிப்பும் கொடுக்கலாம் எனவும் பின்னர் கூறியுள்ளார். “முரளிதரனைக் கைது செய்ய வேண்டும் இல்லையேல் கொலைகளுக்கான முழுப்பொறுப்பையும் அரசு ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று கூறியுள்ள சம்பிக்க ரணவக்க, அத்துடன் நில்லாது “புலிகளைக் கொன்றோம், போரை வெற்றி கொண்டோம் என்று கூறிச் சிங்கள மக்களையும், இராணுவத்தினரைக் கொன்றோம் என்று கூறித் தமிழ் மக்கக்ளையும்” ஏமாற்றும் இரட்டை நாடகம் இதுவெனவும் குற்றம் சுமத்தியுள்ளார் . விமல் வீரவன்ச தேவதத்தன் கதையைக் கூறி அந்தக் கொடுமையான கணவனே திருந்தவில்லையா ? அதுபோல் கருணாவும் திருந்தி விடுவார் ! என்று ஒரு கூற்றின் மூலம் மழுப்பலாக முன்னர் அறிக்கை விட்டவர் தற்பொழுது அவர் கைது செய்யப்பட வேண்டும் என்று கூறியுள்ளார்.

சஜித் பிரேமதாசாவோ முரளீதரனை உடனே கைது செய்ய வேண்டும் என்று அறிக்கைவிட அதற்குப் பதிலாக “புலிகளுக்கு ஆயுதங்கள் கொடுத்த சஜித்தையும் கைது செய்ய வேண்டும்” என்று முரளிதரன் தெரிவித்துள்ளார். இதன் பின்னர் மகிந்த ராஜபக்சா கருத்துத் தெரிவிக்கையில் “புலிகளுக்கு ஆயுதங்கள் கொடுத்தது ஐக்கிய தேசியக்கட்சி என்றும் பிறேமதாசாவே அதற்கான பொறுப்பு என்றும்” கூறியுள்ளார். இதற்குப் பதிலடியாக ஐக்கிய தேசியக் கட்சியினர் “ரணிலைத் தோற்கடிக்க மகிந்த புலிகளுக்குக் காசு கொடுத்தார் ” என்று மறுத்துக் கூறியுள்ளனர்.இவை ஒரு பக்கம் இருக்க அட்மிரல் வீரசேகரா முரளீதரன் இராணுவத்தினருக்குச் செய்த உதவிகள்தான் போரை இலகுவில் வெல்வதற்கு உதவியது என்று கூறியுள்ளார். யுத்த காலத்தில் இரு தரப்பிலும் பலர் கொல்லப்பட்டுள்ளனர்.இராணுவத்தினரால் புலிகள் கொல்லப்பட்டார்கள், புலிகளால் இராணுவத்தினர் கொல்லப்பட்டார்கள். இதன்போது கிழக்குத் தளபதியாக இருந்த நேரத்தில் முரளீதரனும் இதில் பங்கு கொண்டிருக்கலாம். ஆனால் விடுதலைப் புலிகள் அமைப்பிலிருந்து விலகி இராணுவத்திற்கும் அரசுக்கும் ஒத்துழைப்பு வழங்கினார். அதன் பின்னரே இவருக்கு மன்னிப்பு வழங்கப்பட்டது என்று கூறியுள்ளார். மேலும் கூறுகையில் விடுதலைப் புலிகள் அமைப்பு,அதன் தலைவர் பிரபாகரன் தொடர்பில் இவர் பல்வேறு இரகசியத்தகவல்களை அரசுக்கு வழங்கினார். இதனாலேயே புலிகளின் தலைவர் பிரபாகரனைக் கொல்ல முடிந்தது என்றும் சரத் வீரசேகரா கூறியுள்ளார். இவர் கூறிய தகவல்களினாலேயே போரைக் குறுகிய காலத்தில் முடிவுக்குக் கொண்டு வர முடிந்தது என்று குறிப்பிட்டவர், இவ்வாறான கருத்துகளைக் குறிப்பிடுவதைத் கருணா தவிர்த்துக் கொள்ள வேண்டும் என்று அறிவுறுத்தியுள்ளார் .

போருக்கு உதவியவர் முரளீதரன் என்ற அட்மிரல் வீரசேகராவின் கூற்றை, அப்போது போருக்குத் தலைமை தாங்கிய சரத் பொன்சேகா முற்றாக மறுத்துள்ளார். அத்துடன் முல்லைத்தீவிலோ, புதுக்குடியிருப்பிலோ பிரபாகரன் தங்கி இருந்த ஒரு வீட்டைக் கூடக் காட்டித் தர முரளிதரனால் முடிய வில்லை என்று கிண்டலாகக் கூறியுள்ளார். முரளீதரன் சரணடைந்த அறுநூறு காவற்றுறையினரையும் , 1200 இராணுவத்தினையும் கொன்றிருக்கலாம் .அது தான் அவரது சாதனை என்றவர் அவர் சரணடையும் போது 150 பேர் வரையினரே அவருடன் சரணடைந்தனர். அவர்களிலும் எண்பதுக்கும் மேற்பட்டவர்கள் சிறுவர் போராளிகளே என்று கூறியிருந்தார். இவ்வாறாக முரளீதரனின் பேச்சு இலங்கை அரசியல்வாதிகளால் பேசப்பட்டு வரும் நிலையில் நியூயோர்க்கைத் தலைமையகமாகக் கொண்ட மனித உரிமைகள் கண்காணிப்பகம் முரளீதரன் மீது ஏராளமான குற்றச்சாட்டுகளைக் கூறி அவர் விசாரிக்கப்பட வேண்டும் என்று கூறியுள்ளது.அவ்வமைப்பின் தலைவர் மீனாட்சி கங்குலி கூறுகையில் போர்க்குற்றங்கள்,கடுமையான மனித உரிமை மீறல்கள் ஆகியன குறித்து இலங்கை அதிகாரிகள் ஜகருணா ஸமீது விசாரணை நடத்தி சரியான முறையில் வழக்குத் தொடர வேண்டுமென்று கூறியுள்ளார். ஆனால் அவர் மீண்டும் நீதியிலிருந்து தப்பி விடுவார் என்ற கவலை உள்ளது என்றும் கூறியுள்ளார். முன்னர் அவர் இங்கிலாந்தில் பிடிபட்டபோது இலங்கை அரசு அவரைக் காப்பாற்றியதை நினைவுபடுத்தியே இவர் இங்கும் தப்பி விடுவார் என்று கூறியுள்ளார் மீனாட்சி கங்குலி. இலங்கையில் விசாரணை எவ்வாறு நடக்கும் என்பது யாவரும் அறிந்ததே..புலிகளை அழித்தவர் என்று கூறி மன்னிப்பு வழங்கத் தயாராகவே இருக்கிறது அரசு. இதே நேரம் இன்னொன்றையும் இங்கு கவனித்தே ஆக வேண்டும். முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் பொதுசன முன்னணியின் முக்கிய உறுப்பினருமாகிய வாசுதேவ நாணயக்காரா என்ன சொல்லியுள்ளார் என்பது தான் மிகவும் கவனிக்கப்பட வேண்டிய முக்கியமான பொருளாக உள்ளது.

வாசுதேவா தனது உரையில் “எதிர் தரப்பினர் கருணா கூறியதைத் தங்களின் அரசியல் தேவைக்காகப் பயன்படுத்துகின்றனர்.கிழக்கு மாகாணத்தைக் கைப்பற்றவும்,பலம் கொண்ட விடுதலைப் புலிகளை வெற்றி கொள்ளவும் இரகசியத் தகவல்களை வழங்கினார். இதன் காரணமாகவே யுத்தத்தைக் குறுகிய காலத்தில் வெற்றி கொள்ள முடிந்தது. யுத்த காலத்தில் செய்த விடயங்களுக்குத் தற்போது தண்டனை வழங்குவதற்கு எமது நாட்டின் சட்டத்தில் எவ்வித இடமும்கிடையாது என்று” குறிப்பிடுகிறார். இக்கூற்றானது முரளிதரனுக்கான கூற்றாக மட்டும் எடுத்துக் கொள்ளப்பட முடியாதுள்ளது. “போர்க்காலத்தில் நடந்தவைகளை ” என்று வாசுதேவா கூறுவதன் மூலம் “போர்க்காலத்தில் இராணுவத்தினரின் போர்க்குற்றங்கள் விசாரிக்கப்பட வேண்டும்.” என்ற தமிழ் மக்களின் கோரிக்கைக்கும் சேர்த்துத் தான் போர்க்காலங்களில் நடந்தவைகளை விசாரிக்க இலங்கைச் சட்டத்தில் இடம் இல்லை என்று கூறியுள்ளார். சர்வ தேச விசாரணை வேண்டும். இலங்கையில் நடந்தது ஓர் இனப்படுகொலையே என்று கூறியபொழுது, இனப்படுகொலைகளுக்கான சான்றுகள் இல்லை, சர்வதேச விசாரணை முடிந்து விட்டது என்று சொல்வதோடு, சர்வதேச விசாரணை என்ற விடயத்தில் ஏமாற்று நாடகம் ஆடிய தமிழ் அரசியல் வாதிகளுக்கும் சேர்த்துத்தான் அவர் “ இங்கு கருணா எனப்பட்ட முரளீதரன் மீது விசாரணை செய்யச் சட்டம் கிடையாது. அது போர்க்காலத்தின் இடம்பெற்றது.” என்று கூறியுள்ளார். கருணா எனப்படும் முரளீதரன் அரசுக்கு வேண்டப்பட்டவர்.அவருக்கு மன்னிப்புக் கொடுக்கப்பட்டு விட்டது என்று கூறியுள்ளனர். எனவே அவர் மீது மேலும் பெரிய விசாரணைகள் தொடர்வதற்கு வாய்ப்புகள் குறைவே.கண்துடைப்புகள் நன்றாகச் செய்யப்படும். மொத்தத்தில் “போர்க்கால நிகழ்வுகளுக்கு இங்கு விசாரணை கிடையாது.” என்ற வாசுதேவ நாணயக்காரவின் கூற்றுத்தான் முதன்மை பெறும். இதைத்தமிழ் அரசியவாதிகள் புரிந்துகொள்வார்களா?





# தேர்தலுக்கான ஜனநாயகச் சூழல் பலவீனப்படுகிறதா?

## மலாவி தேர்தல் அனுபவம் ஒரு முன்னுதாரணமாக இருக்கட்டும்.

- ஐ.வி. மகாசேனன் -

பல அரசுகளில் நீதித்துறை என்பது நிர்வாகத்துறையின் சேவகத் துறையாகக் காணப்படுகின்ற சூழலில், மலாவி என்கிற தென்கிழக்கு ஆபிரிக்க நாடொன்றில் ஜனாதிபதி தேர்தலில் மோசடி நடைபெற்றுள்ளதாகக் கூறி ஜனாதிபதி தேர்தலை மீள நடாத்துமாறு பணித்து ஜுன்-23ஆம் திகதி ஒரு வருட காலப்பகுதிக்குள் இரண்டாவது தேர்தல் நடைபெற்றுள்ளது. நிர்வாகத்துறைக்கு எதிரான நீதிமன்றத்தின் தீர்ப்பு அந் நாட்டின் ஜனநாயகத்தை உறுதிப்படுத்தும் காரணியாக அமைந்துள்ளது. இலங்கை யிலும் சனநாயகத் திருவிழாவாகிய தேர்தல் ஒன்று நடைபெறத் தயாராகின்ற சூழலில், குறித்த தேர்தல் ஜனநாயகத் துடன் இடம்பெறுமா? என்பது பலதரப்பின் கேள்வியாகக் காணப்படுகிறது.

இந்நிலையிலேயே மலாவி என்கிற தென்கிழக்கு ஆபிரிக்க நாட்டில் ஜனநாயகத்தைப் பேண, நிர்வாகத் துறையை எதிர்த்து நீதித்துறை வழங்கியுள்ள மறு தேர்தல் தீர்ப்பின் சர்வதேச அனுபவத்தோடு, இலங்கையில் நடைபெறவுள்ள தேர்தலில் இடம்பெறக் கூடும் என எதிர்வுகூறப்படும் ஜனநாயக மீறல்களையும் இலங்கையின் சுயாதீன தேர்தல் ஆணைக்குழு சீர்செய்யுமா? என்பதைத் தேடுவதாகவே குறித்த கட்டுரை உருவாக்கப்பட்டுள்ளது. ஜனாதிபதி, தேசிய சட்டமன்றம் மற்றும் உளளூராட்சி மன்ற உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதற்காக 21 மே 2019அன்று மலாவியில் பொதுத்தேர்தல்கள் நடத்தப் பட்டன. நாட்டின் தேர்தல் ஆணையம், ஆரம்பத்தில் ஜனநாயக முற்போக்குக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் பீட்டர் முத்தரிக்காவை மே 2019 தேர்தலில் 38.57 சதவீத வாக்குகளுடன் குறுகிய வெற்றியாளராக அறிவித்து அவரைத் தொடர்ந்தும் ஜனாதிபதியாக ஆட்சி பீடமேற அனுமதித்தது. இந்த முடிவுகள் அங்குள்ள பிரதான எதிர்க்கட்சிகளின் பரவலான எதிர்ப்புகளுக்கு வழிவகுத்தன. மக்கள் வீதியிலிறங்கிப் போராடினார்கள்.

அந்தப்போராட்டங்களில் வன்முறை வெடித்தது. 35.41 சதவீதத் துடன் இரண்டாவது இடத்தைப் பிடித்த லாசரஸ் சக்வேராவும், 20.24 சதவீதத் துடன் மூன்றாவது இடத்தைப் பிடித்த சவுலோஸ் சிலிமாவும் இணைந்து தேர்தல் முடிவுகளுக்கு எதிராக நீதிகேட்டு நீதிமன்றம் சென்றனர். வெற்றிபெற்றதாக அறிவிக்கப்பட்ட பீட்டர் முத்தரிக்காவுடன் இணைந்து தேர்தல் ஆணையம் பல மோசடி ஆவணங்களில் முறைகேடு செய்ததாக அவர்கள் சுட்டிக்காட்டி, அந்த முடிவை எதிர்த்து நீதிமன்றத்தில் வாதிட்டனர். 2020ஆம் ஆண்டு பெப்ரவரியில், ஒருமனதாக வழங்கப்பட்ட தீர்ப்பில், ஐந்து நீதிபதிகள் கொண்ட குழு பரவலான, முறையான மற்றும் கடுமையான முறைகேடுகள் தேர்தலில் நடைபெற்றதை மேற்கோள் காட்டி அவ்வகையான முறைகேடுகளை உறுதிப்படுத்தியதுயதுடன் 150 நாட்களுக்குள் புதிய தேர்தல்கள் நடைபெறவேண்டும் எனவும் அந்த நீதிமன்றம் உத்தரவிட்டது. முக்கியமாக, ஒரு ஜனாதிபதி வேட்பாளர் 50 சதவிகிதத்திற்கு மேற்பட்ட பெரும்பான்மையைப் பெற வேண்டும் என்று நீதிமன்றம் விதித்தது. 1994ஆம் ஆண்டில் மலாவி பலதரப்பட்ட போட்டிக் குத் திரும்பியதிலிருந்து, தேர்தல் பிரதேசவாரி பிரதிநிதித்துவ ( **First - Past - the Post System**) முறையால் தீர்மானிக்கப்பட்டது. இதில் அதிக வாக்குகளைப் பெற்ற போட்டியாளர் அவர்கள் பெரும்பான்மையைப் பெறுகிறார்களா என்பதைப்பொருட்படுத்தாமல் வெற்றியாளராக அறிவிக்கப்படுகிறார்கள். இம்முறையிலேயே பீட்டர் முத்தாரிகாவையும் மலாவி தேர்தல் ஆணையம் ஜனாதிபதியாக அறிவித்திருந்தது. தீர்ப்பைத்தொடர்ந்து பீட்டர் முத்தாரிகா கோபமடைந்து அதனைக் கண்டித்ததுடன், தீர்ப்பை எதிர்த்து மேன்முறையீடு செய்த போதிலும் நீதிமன்றம் அவரது மேன்முறையீட்டை தள்ளுபடி செய்தது. நாட்டின் ஜனநாயக உறுதிப்படுத்தலில் புதிய தேர்தலின் அவசியத்தையும் உறுதிப்படுத்தியிருந்தது. இந்நிலையிலேயே கடந்த ஆண்டு வாக்களித்ததை அரசியலமைப்பு நீதிமன்றம் ரத்து செய்த பின்னர் 2020 ஜுன் 23 அன்று மலாவி புதிய தேர்தலுக்குத் திரும்பியது. மலாவியில் கடந்த தேர்தலில் சனநாயகத்தை உறுதிப்படுத்த தவறியவர் என்று குற்றம் சாட்டப்பட்ட மலாவி தேர்தல் ஆணையத்தின் தலைவரும் மக்களின் கடும் எதிர்ப்பால் பதவி விலகியுள்ளார். தேர்தல் ஜனநாயகத்தின் திருவிழாவாக அமைகின்ற போதிலும் ஜனநாயகம் என்ற போர்வையில் ஜனநாயகமற்ற முறையில் மலாவி இல் நடைபெற்ற தேர்தலுக்கு எதிராக நடைபெற்ற வலுவான மக்கள் போராட்டத்தினூடகவும் நீதித்துறையின் சுயாதீன தன்மையாலும் ஜனநாயகம் காக்கப்பட்டுள்ள சர்வதேச அனுபவத்திலிருந்து இலங்கையர்கள் பலவிடயங்களைக் கற்றுக்கொள்ள வேண்டியவர்களாய் காணப்படுகின்றார்கள்.

இலங்கையில் ஏற்பட்டுள்ள கொரோனா அபத்தத்தினால் பல இழுபறிக்கு பின்னால் ஆகஸ்ட்- 05 தேர்தல் நடைபெறுமென திகதியிடப்பட்டு சுகாதார விதிகளுக்கமைய தேர்தல் பிரச்சார நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அவ்வாறு நடைபெறவிருக்கின்ற பாராளுமன்ற தேர்தலில் ஜனநாயகம் பாதுகாக்கப்படுமா? மக்களின் உண்மையான விருப்பம் தேர்தலில் பிரதிபலிக்குமா? என்பது தேர்தல் நடைபெற முதலே பெரும் சர்ச்சையாக மேலெழுந்துள்ளது. ஆறுமுகன் தொண்டமானின் இறுதி ஊர்வலத்தில் சமூக இடைவெளி பேணப்படாது கூடிய திரளை அனுமதித்த அரசாங்கம், பின்னர் அமெரிக்க தூதரகத்தின் முன்னால் கறுப்பின இளைஞனின் கொலைக்கு நீதி வேண்டி இடம்பெற்ற போராட்டத்தில் சமூக இடைவெளியின்மையை கூறி அடக்குமுறை மூலம் போராட்டத்தை முடக்கி இருந்தது. அரசாங்கம் இரு நிகழ்விலும் கையாண்ட இரு வேறுபட்ட வழிமுறை கொரோனா அபத்தத்தை சாதகமாகப் பயன்படுத்தி அரசாங்கம் தனது நிகழ்ச்சி நிரலையே முதன்மைப்படுத்தி வருகின்றமை உறுதிப்படுத்தப்படுகிறது. இந்நிலையில் பிரச்சார செயற்பாடுகளிலும் இராணுவ, பொலிஸாரின் உதவியுடன் கொரோனா அபத்தத்தை சாட்டாகக் கூறி எதிர்க்கட்சிகளின் பிரச்சாரங்களை இடையூறு செய்யக்கூடிய நிலைமையே அதீதமாகத் தென்படுகிறது. இவ்வாறான சூழலில் மக்களின் ஜனநாயகம் பாதிக்கப்படுவதுடன் மக்களின் உண்மையான கருத்துநிலை தேர்தலில் வெளிப்படப்போவதில்லை என்பது உறுதியாகிறது. மேலும், இலங்கையில் சிவில் சேவைகளில் இராணுவ ஓய்வுநிலை உத்தியோகத்தர்களின் உள்வாங்கல், இலங்கையின் நிர்வாகத்தில் இராணுவமயமாக்கத்தின் செறிவை அதிகரித்துச் செல்கிறது என்பதை இலங்கை வாழ்மக்களும், சர்வதேசமும் தெளிவாக அறிந்துள்ளது. அதேநேரம் வடக்கு, கிழக்கில் இராணுவ முகாம்களின் அதிகரிப்பு மற்றும் சிறு கிராமங்களுக்கூடாவும் இராணுவ மோட்டார் வாகனங்களின் அதிவேகப் பயணம், இராணுவத்தின் திடீர் சோதனை நடவடிக்கைகள் என்பன வடக்கு, கிழக்கில் தமிழ் மக்களிடையே பதட்டமான சூழ்நிலையை உருவாக்கியுள்ளது. தேர்தல் நெருங்கும் சூழலில் இந்நிலை இன்னும் அதிகரிக்கப்படலாம் என்றே எதிர்பார்க்கப்படுகிறது. தற்போதே மக்கள் மிகவும் நெருக்கடிமிக்க ஒரு வித பய உணர்வுடனேயே வாழ்கிறார்கள். இந்நிலைமை தொடரின் வடக்கு, கிழக்கில் வாக்களிப்பு வீதம் குறைவாகவே காணப்படும். இராணுவ பிரசன்னமும் அதன் அதிகரிப்பும் தமிழ் மக்களின் ஜனநாயத்தை பாதிக்க வாய்ப்புள்ளது..

மிகவும் அபத்தமான செய்தி என்னவெனில் சமகாலத்தில் காணப்படும் கொரோனா அபத்த குறுகிய காலப்பகுதியினுள்ளேயே பத்துக்கும் மேற்பட்ட தமிழ் இளையோர் பயங்கரவாதச் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுத்தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இவ்விடயங்கள் தொடர்பில் எத்தத் தமிழ்அரசியல் தலைமையும் காத்திரமான எதிர்வினையாற்றியிருக்கவில்லை. யாவரும் தேர்தல் பிரச்சார போட்டியில் ஒருவரை ஒருவர் பழிபோடுவதிலேயே மும்மரமாக நிற்கின்றனர். அவர்கள் ஒன்றை மறந்து விடுகின்றனர் இவ்அபத்தமான சூழல் நெருக்கடியில் மக்கள் அரசியலிலிருந்து ஒதுங்கிவிடக்கூடக்கூடிய நிலைமை காணப்படுகிறது. தமிழ் மக்களின் வாக்களிப்பு வீதம் குறைவடையின் இவர்கள் யாரிடம் வாக்கினைப்பெற இது போன்ற பழிபோடும் பிரச்சாரங்களை மேற்கொள்கிறார்கள் என்று புரியவில்லை! தமிழ் மக்களுக்காக அரசியல் சேவை செய்யின் தமிழ் மக்களின் பிரச்சினைகள் தொடர்பிலேயே அரசியல் பிரச்சாரம் முன்னெடுக்கப்பட வேண்டும். அவ்வாறு மக்கள் பிரச்சினைகள் பிரச்சார மேடைகளில் மேலோங்கி அவைகள் இயல்பாய் பூர்த்தி செய்யக்கூடிய சூழ்நிலை அமையவேண்டும்.

2015ஆம் ஆண்டு ஆட்சி மாற்றத்திலிருந்தே மஹிந்த தேசப்பிரிய மற்றும் அவரது தேர்தல் ஆணைக்குழுவின் சுயாதீன தன்மை பல தரப்புக்களினால் பராட்டப்பட்டு வருகிறது. குறிப்பாக 2015ஆம் ஆண்டு ஆட்சி மாற்றத்தின் போது ஏற்பட இருந்த அரசியல் குழப்பத்தை தீர்த்து ஜனநாயக வெற்றியை உறுதிப்படுத்தியதாகப் பாராட்டப்பட்டதுடன் பலரின் பார்வை அவர் பக்கம் திரும்பியிருக்கிறது. எனிலும் தற்போது நடைபெற உள்ள பாராளுமன்ற தேர்தலில் தேர்தல் ஆணைக்குழுவின் சுயாதீன தன்மை மற்றும் ஜனநாயகப் பாதுகாப்பு தொடர்பில் பல தரப்பும் விசனப்போக்கை கொண்டுள்ளன. அரசாங்கம் இராணுவத்தின் ஓய்வுபெற்ற அதிகாரி ஒருவரை தேர்தல் ஆணைக்குழுவின் தலைவராக மாற்றி தேர்தலை நடாத்திவிடும் என்ற அச்சத்திலேயே மஹிந்த தேசப்பிரிய கொரோனோ அபத்தத்திலும் தேர்தலை நடாத்துவதற்கான ஒழுங்குகளை செய்வதாகவும் தேர்தல் ஆணைக்குழுவின் சுயாதீன தன்மை தொடர்பில் சந்தேகம் எழுப்பப்படுகிறது. அரசியலமைப்பு ரீதியாக சுயாதீன தன்மை வலியுறுத்தப்பட்டுள்ள தேர்தல் ஆணைக்குழுவானது இத்தேர்தலிலும் ஜனநாயகத் தன்மையை உறுதிப்படுத்துவதை உறுதி செய்ய வேண்டும்.

இவ்வாறானதொரு சூழலில், ஜனநாயகத்திற்கான மையவிடயமாகக் கருதப்படும் தேர்தலானது இலங்கையின் ஜனநாயகத்தை உறுதிப்படுத்துவதற்கான பொறிமுறையாய் அமைதல் வேண்டும். இன்றேல் தேர்தலூடாக ஜனநாயகத்தை உறுதிப்படுத்துவதற்கான சூழலை உருவாக்க தென்கிழக்கு ஆபிரிக்கா நாடானா மலாவி போன்ற நாடுகளில் நடைபெற்ற தேர்தல் அனுபவங்களை மக்களும் நீதித்துறையும் கைக்கொள்ள வேண்டும். பொதுவாகத் தேர்தல் என்ற விடயம் ஜனநாயம் இன்றி நடத்தப்பட்டால், அனைத்து இனங்களினதும் ஜனநாயகசுதந்திர வெளி என்பது காணாமல் போக வாய்ப்புள்ளது.

# பறிபோகும் நிலங்களும் மண்ணின் மைந்தர்களும்

- பார்த்தீபன் வரதராஜன் -



மட்டக்களப்பு மாவட்டத்தின் எல்லைப்புறக் கிராமங்களுள் ஒன்றான புல்லுமலை மற்றும் தாந்தாமலை, கச்சகொடி, சுவாமி மலை போன்ற பிரதேசங்களில் யாழ்.எய்ட் என்ற தனியார் அமைப்பு, அங்குள்ள மக்களுக்கான இடர்காலப் பணிகளை முன்னெடுத்தபோது அவர்கள் அடிப்படை வசதிகள் கூட இல்லாது அல்லல்படுவதை அவதானிக்க முடிந்தது. தமிழ் நிலம் பறிபோவதைத் தடுக்க வேண்டுமாயின் உண்மையிலேயே அவர்கள் வாழ்வாதாரம் மேம்பாடடைய வேண்டியது அவசியமாகிறது. முதலில் அவர்கள் பாதுகாக்கப்பட வேண்டும்.

கடந்த காலங்களில், அந்தக் கிராம மக்கள் தங்களுடைய பூர்வீக நிலங்களைக் பறிகொடுத்திருக்கின்றனர். அதேபோல் மீண்டும் பறிபோய்விடக்கூடாது என்பதற்காகப் பல்வேறு பட்ட இடர்களை அனுபவித்துக் கொண்டும் அந்த மண்ணில் வாழ்ந்து வருகின்றார்கள் என்பதை விட அந்த மண்ணை இழக்காமல் காத்து வருகின்றார்கள் என்பதே உண்மையாகும்.

கிழக்கு மாகாணத்தில் பல பிரதேச இழப்புக்கள் ஏற்பட்டன. அந்த இழப்புக்கள் பெரும்பாலும் எல்லைக் கிராமங்களை மையப்படுத்தியே நடந்தேறின. இவ்வாறான தமிழ் நில அபகரிப்பினாலேயே தமழர் தாயகம் சுருங்கிவருகிறது. எல்லைக் கிராமங்களை மையப்படுத்திய இது போன்ற நில அபகரிப்பானது ஒரு அரசியல் பின்னணியோடு அரங்கேற்றப்பட்டுவருவது அனைவரும் அறிந்த விடயம்.

அந்தவகையில் அந்த மக்கள் தங்களுடைய பிரதேசங்கள் பறிபோய்விடகூடாது என்பதற்காகப் பல இடர்களையும் அனுபவித்துக் கொண்டு வாழ்ந்து வருகின்றார்கள், தமிழர் தாயகம் பாதுகாக்கப்பட வேண்டும் இதனையே நாம் அடிக்கடி மேடையில் உச்சரித்து வருகிறோம். “தமிழர் தாயகத்தில் மீண்டும் ஒரு பிரதேச இழப்பு ஏற்படகூடாது என்பதற்காக இவர்கள் வாழ்க்கைப் போராட்டம் அளப்பரியது.


கச்சகொடி சுவாமி மலை மட்டக்களப்பு அம்பாறை மாவட்டத்தில் ஓர் எல்லைக்கிராமம். காடுகளுக்கு நடுவிலே அமைந்துள்ள கிராமம். முன்னர், அந்தப் பிரதேசத்தில் தமிழர்களின் எண்ணிக்கை அதிகம் இருந்தது. தற்போது 100 க்கும் குறைவான குடும்பங்களே வாழ்ந்து வருகின்றன. யானைகளின் தொல்லை ஒரு புறம். யானைகள் ஊருக்குள் வராமல் தடுப்பதற்காக அமைக்கப்பட்ட மின்சார வேலியில் மின்சாரம் தாக்கிப் பறிபோகும் மனித உயிர்கள் மறு புறம் இவ்வாறு பல இடர்கள் மத்தியில் அவர்கள் எல்லைக் காவலர்களாக வாழ்ந்து வருகின்றனர்.

அவ் மக்களுக்கான நிவாரணப் பணிகளை நாம் முன்னெடுத்துக் கொண்டு இருக்கும் போது கூட மின்சார வேலியில் மின்சாரம் தாக்கி 60 வயது குடும்பஸ்தர் ஒருவர் உயிர் இழந்த பரிதாபமும் இடம்பெற்றுள்ளது என்பது வருத்தத்திற்குரிய செய்தியாகக் குறிப்பிடலாம்.

அத்துடன் அவர்களுக்கான சரியான போக்குவரத்திற்குரிய உட்கட்டுமான வசதிகள் எதுவும் இல்லை. வைத்தியவசதிகள், பாடசாலை வசதிகள் போன்ற அடிப்படைத் தேவைகள் கூட வழங்கப்படவில்லை. காட்டு விலங்குகளின் தொல்லைகளில் இருந்து எந்தவிதப் பாதுகாப்பும் செய்து கொடுக்கப்படாது, பல்வேறு பட்ட இடர்களுக்கு மத்தியில் தங்களுடைய பூர்வீக நிலத்தில் வாழவேண்டும் என்ற அடிப்படையிலேயே இவர்கள் வாழ்வது தெரிகிறது. அதே சமயம், இக் கிராமத்திற்கு சற்று தொலைவில் அம்பாறை மாவட்ட எல்லை கிராமமொன்றில் 400 சிங்களவர்கள் அங்குள்ள ஒரு பன்சலையின் அனுசரணையில் குடியமர்த்தப்பட்டதாகவும் அங்குள்ள மக்கள் கூறுகின்றார்கள்.

அத்துடன் தங்களுடைய பிரதேசங்களுக்குள் யானை உள்நுழையாது இருக்க அமைக்கப்பட்ட மின்சார வேலியில் உள்ள மரக்கட்டைகளை மட்டும் யானைகள் தங்களுடைய கால்களால் தள்ளி விழுத்திவிட்டும் அல்லது வேறு மரங்களை கொண்டு வந்து மின்சார வேலிகளுக்கு மேல் போட்டு விட்டு தங்களுடைய கிராமங்களுக்குள் உள்நுழைவாதாகவும் கூறுகின்றார்கள். எனவே அந்த யானைகள் “எல்லை கடப்பதற்காகச் சரணயாலயங்களில் பயிற்றுவிக்கப்பட்ட யானைகளாக இருக்கலாம்” என்றும் மக்கள் சந்தேகப்படுகின்றனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள புல்லுமலை மற்றும் தாந்தாமலை கச்சகொடி சுவாமி மலை ஆகிய எல்லைக் கிராமங்களுக்கு பக்கத்தில் அம்பாறை மாவட்டத்தில் காணப்படுகின்ற் கிராமங்களான தெனியத்தகண்டய, மகாஓயா மற்றும் படியத்தலாவ போன்ற பிரதேசங்களில் 1901 ஆம் ஆண்டு 3302 பேராக இருந்த சிங்களவரின் தொகை 1981 இல் 26060 ஆக உயர்ந்ததும் அதே போல் அம்பாறை மாவட்டத்தில் சம்மாந்துறை அம்பாறை போன்ற பிரதேசங்களில் 1901 ஆம் ஆண்டு 616 பேர் ஆக இருந்த சிங்களவர் 1981 இல் 91925 ஆக அதிகரித்தும் காணப்பட்டன என்பது வரலாறுகள்.




1901




1981

அதன் தொடர்ச்சிதான் அம்பாறை மண் தமிழர்களிடம் இருந்து பறிபோனது.

இது போன்ற எல்லைக் கிராமங்கள் பறிபோகின்ற விடயங்களை அறிக்கைகளால் மட்டும் கட்டுப்படுத்த முடியாது. தொடரும் இவ்வாறான பிரதேச இழப்புக்களை தடுக்கவும் முடியாது. மாறாக தங்களுடைய பூர்வீக நிலங்கள் பறிபோக கூடாது என்பதற்காகப் பல இடர்களையும், உயிராபத்துக்களையும் தாங்கிக் கொண்டு வாழும் இவர்கள் பக்கம் தமிழர்கள் அனைவரினது கவனமும் திரும்ப வேண்டும். இவர்களுக்கென ஒரு விசேட திட்டம் எம்மத்திலேயே உருவாக்கப்பட வேண்டும். நிலங்கள் பாதுகாக்கப்பட வேண்டுமாயின் முதலில் அங்குள் மக்கள் பாதுகாக்கப்பட வேண்டும்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் புல்லுமலை மற்றும் தாந்தாமலை கச்சகொடி சுவாமி மலை போன்ற பிரதேச மக்களைப்போல் தமிழர் தாயகப்பிரதேசத்தில் எல்லை கிராமங்களில் வாழும் எமது மக்களுக்கு அவர்களுக்குத் தேவையான இடர்கால நிவாரணங்களையும் வாழ்வாதார மற்றும் வாழ்வியலுக்கான உதவிகளையும் தொடர்ந்து வழங்கி அந்த மக்களுக்கு கரம் கொடுத்து பலப்படுத்துவதன் மூலம் எமது எல்லைகளைப் பலப்படுத்தி பிரதேச இழப்புக்களைத் தடுக்க முடியும்.




# சம்பந்துமில்லாமல் சம்பந்தர் பற்றி... தேரர்கள்..

சம்பந்தர் இறங்கிவந்தாலும், நாங்கள் தீர்வுக்கோ அதனைத் தருவதற்கோ இணங்கோம் என்று மெதகொட அபேதிஸ்ஸ தேரர் சபதமெடுத்ததாகக் கேள்வி.அவர் சம்பந்தன் பற்றிச் சொல்லும்போது "பிரிவினைவாதப் போரை முன்னெடுக்கும் சம்பந்தன் தொடர்பில் அரசாங்கம் விழிப்போடு இருக்க வேண்டும்" என்று சொல்லி இருக்கிறார்.

13வது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்து வதில் உள்ள தடைகளைத் தகர்த்தேறியவே அவர் அரசையும், பிரதமரையும் பாராட்டிப் பேசி வருகிறார். பிரதமர் ராஜபக்சவை மிகவும் சிறப்பாக வர்ணிக்கும் வகையில் "அவரைப் பப்பாமரத்தில் ஏற்றுவது போன்று சம்பந்தன் வேளியிட்ட கருத்துகளை ஆங்கிலப் பத்திரிகை ஒன்றில் கண்டேன். பிரதமரைச் சிறப்பான வார்த்தைகளால் வர்ணிப்பது தவறு கிடையாது. சம்பந்தன் எதற்காக வர்ணிக்கிறார் என்பதே எனது சிந்தனை." என்ற தேரரின் பேச்சு எனக்கு ஒரு புறம் நகைச்சுவையாக இருந்தாலும், மறு புறம் தேரர் போல என்னையும் சிந்திக்க வைத்திருப்பதால்தான் வைரமுத்து இதனை ஒரு முக்கிய விடயமாக ஏற்று எழுதத் தொடங்கி இருக்கிறேன்.

சம்பந்தர் மஹிந்தாவைப் பப்பாவில் ஏற்றுவதாகத் தேரர் சொல்லுகிறார். ஒரு மனிதனைப் பப்பாவில் ஏற்றினால் என்ன நடக்கும். அவன் பாரத்தைப் பப்பாமரம் தாங்காது அது முறிந்து விழும். விழுந்தவன் கை கால் முறிந்து சேதப்பட்டு ஒன்றில் கிடந்து அழுந்துவான். அல்லது இறந்து விடுவான். அதைத்தான் சம்பந்தர் செய்வதாக நான் எண்ணுகிறேன். இது தேரருக்கு விளங்கவில்லை. தேரருக்குச் சம்பந்தர் பற்றியும் தெரியாது அவர் நரிக்குணம் பற்றியும் புரியாது என்றுதான் எண்ணத் தோன்றுகிறது.

அடுத்தது தெற்கிலுள்ள தமிழ் அல்லாத ஊடகங்களுக்கு அறிக்கை விடும் சம்பந்தர் பற்றியது. வடக்கில் ஒன்றும் தெற்கில் ஒன்றும் அவர் பேசுகிறாரோ? ஆங்கில ஊடகத்தில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தர் பிரதமரின் புகழைப் பாடுவதாகத் தேரர் விசனப்படுகிறார். ஆனால் வடக்கில் வரும் தமிழ் ஊடகங்களில் ஒன்று, சம்பந்தர் அரசையும், அது சார்ந்தவர்களையும் வசைபாடுவதாக அல்லவா செய்தியை வெளியிடுகிறது. ஆனி 8 திங்கட்கிழமை 22.06.2020 அன்று வெளிவந்த யாழ்.பிராந்தியப் பத்திரிகை ஒன்றில் "தமிழர்கள் ஒரு போதும் அடிபணிய மாட்டார்கள். அடக்குமுறைகளைத் தகர்த்தெறிய சாத்வீகரீதியில் தீவிரமாகப் போராடுவார்கள் - என்கிறார் சம்பந்தன்.



சர்வதேச ஆதரவுடனே புதிய அரசுடன் பேச்சு! திருமலை மக்கள் சந்திப்பில் சம்பந்தன் எடுத்துரைப்பு - என்று 28.06.2020 இல் திருகோண மலையில் ஒரு கதையைச் சொல்லி இருக்கிறார். வடக்கில் வடக்கு மக்களைத் தழுவி விடுவதாகப் பேச்சு. தெற்கில் மஹிந்தாவுக்குப் "மஜாஜ்" செய்வதாக ஒரு பேச்சு. கிழக்கில் சர்வதேசத்துக் குப் பூச்சுப் பூசுவதாக மறு பேச்சு. வடக்கில் பொங்கி எழும் சம்பந்தன் தெற்கிலும் இப்படிப் பொங்கினால் என்ன? தமிழர்கள் பேசும்போது பொங்கி எழும் சம்பந்தன் சிங்களவர்கள் பேசும்போதும் இப்படிப் பொங்கி எழலாமே! வடக்குக்கு ஒரு வேஷம், தெற்குக்கு வேறு ஒரு வேஷம். இந்தத் தள்ளாத வயதில் ஏன் இந்த நடிப்பு? இது இவருக்குத் தேவைதானா?

தன்னை ஒரு சிங்கள அரசின் நண்பனென்று காட்ட ஒரு தமிழ் ஊடகப் பேட்டி ஒன்றில் தேசியக் கொடி விவகாரம் தொடாபாகக் கேட்கப்பட்ட கேள்விக்கு இவர் பொங்கி எழுந்ததைப் பல தமிழ் மக்கள் காணொளியில் கண்காராக் கண்டது ஞாபகமிருக்கலாம். "ஏன் எங்களையும் சிங்கள மக்களையும் பிரிக்கப் பார்க்கிறீர்கள்? ஏன் எமக்குள் விரோதத்தை ஏற்படுத்திகிறீர்கள்? தமிழருக்குத் தீர்வு வரக் கூடிய சூழல் கூடிவரும்போது ஏன் நீங்கள் இந்தவிதமான கேள்விகளைக் கேட்டுக் குழப்புகிறீர்கள்? இதனால் உங்களுக்கு என்ன லாபம்?" என்ற தொனிப்பட அந்த ஊடகவியலாளருக்கு எதிராகக் கெம்பி எழுவதைப் பார்த்தீர்களானால் சம்பந்தரின் வேஷங்கள் பற்றியும், நடிப்புப் பற்றியும் இலவுவாக அறிந்து கொள்வீர்கள்.

கூட்டமைப்பில் சம்பந்தன் மட்டுமா இப்படி வேஷம் போடுகிறார் என்று எண்ணுகிறீர்கள்? அவரைவிடக் கூட்டமைப்பில் குணசித்திர நடிகர்கள், நகைச்சுவை நடிகர்கள், வில்லன்கள், துணை நடிகர்கள், வில்லிகள், துணை நடிகைகள் என்று பெரிய பட்டியலே உண்டு. அதில் அண்மையில் தலைவர், பாலா அண்ணர் என்று புலிப் பாசத்தைக் கொட்டி நடித்து மாட்டிக் கொண்டவர் வன்னி மாஜி எம்பி ஸ்ரீதரன். ஆனால் அந்த நடிப்பு அவ்வளவாக எடுபடவும் இல்லை, அதைப் பார்த்து மக்கள் ஏமாறவும் இல்லை. மக்கள் நன்மை கருதி, ஊடக மொன்று படங்காட்டுவதைப் போல அவரின் சகல விதமான நடிப்பையும் ஒரு திரையில் முன், பின், அப்போது. இப்போது என்று விலாவாரியாகக் காட்டி அவர் நடிப்புப் பற்றிய விழிப்புணர்வான்றை ஏற்படுத்தியதால் தமிழ் மக்கள் தப்பித்துக் கொண்டார்கள். அடுத்த நடிகனாகச் சுமந்திரனைச் சொல்லுவேன். அவரும் புலிழ எதிர்ப்பு நாடகமாடி சிங்கள மக்களிடம் நட்சாட்சிப் பத்திரம் வாங்க விழைந்து நாறிப்போனவர். பல காலமாக புலி எதிர்ப்புக் கருத்துகைளை மக்கள் மத்தியில் விதைத்ததோடு மட்டுமல்லாது, புலிகளை மறந்து எம்மை ஏற்றுக் கொள்ளும் ஒரு காலம் விரைவில் வரும் என்று ஒரு "பொக்கற்" கூட்டத்தில் சொன்னது எனது நினைவிலுண்டு. அப்படிப்பட்ட சுமந்திரன் தற்போது தேர்தல் மேடைகளில் மக்களுக்குப் "புலிப் பாணி" போடுவதாகக் கண்டேன். தமிழ் மக்களுக்கு இவர்கள் நாடகத்தைப் புரிய வைக்க வேண்டும். இவர்கள் தற்போது இவ்வாறான நாடகமாடி வாக்குகளை வெல்லவே வாய்பேச்சின்மூலம் மேடைகளில் போராடிவருகிறார்கள். இப்படி முன்னுக்குப் பின் முரணாகப் பேசுகின்றவர்கள் கையில் அதிகாரம் சென்றால் என்ன நடக்கும் என்பதை தமிழ் மக்கள் நன்குணர வேண்டும். இவர்கள் நாடகம் பற்றியும், குறுக்குவழி அரசில் பற்றியும் , ஒரு தேரர் மட்டுமல்ல பல தேரர்கள் சொல்லி வருகிறார்கள் . அவர்கள் அரசாங்கத்தை எச்சரித்தும் இருக்கிறார்கள். தேரர்கள் தங்கள் பக்கத்தில் கவனமாக இருப்பதைப்போல தமிழ் மக்களாகிய நாமும் இது விடயத்தில் அவதானமாக இருப்போமாக!

# சீனாவின் நீர் ஆயுதம்

## சீன தேசத்தின் அணை அரசியலும், அரசியல் அணையும்.

எழுத்துருவாக்கம் : ப. ராஜ்குலன்



உலகின் மிகப்பெரிய அணை - சீனா

தண்ணீரை ஆயுதமாகப் பயன்படுத்த முடியுமா? உலகமே கற்பனை கூடப் பண்ணிப் பார்க்காத பிளாஸ்டிக் அரிசி, பிளாஸ்டிக் முட்டை, கோவா என உருவாக்கி உலகையே மூக்கின் மீது விரல் வைக்கச் செய்தவர்களுக்கு இது ஒன்றும் கடினமானதல்ல..!

சீனப் போரியல் மேதை சன் சூ (Sun Tzu) என்பவரால் கி.மு 5 ஆம் நூற்றாண்டளவில் எழுதப்பட்ட “போர்க் கலை” (The Art of War) என்னும் நூல், போர்க் கலையில் பயன்படுத்தப்பட வேண்டிய மூலோபாயங்களையும், உத்திகளையும் சிறப்பாக விவரிக்கிறது. இந்நூலை, இன்றும் அதன் போரியல் உள்நோக்கங்களுக்காக பலரும் வாசிக்கின்றனர். இந்தப் போர்க்கலை நூல் உலகின் மிகப் பழையதும், வெற்றிகரமானதுமான போரியல் நூல்களுள் ஒன்று. சீனாவின் ஏழு போர்க்கலை நூல்கள் என வழங்கப்படுவனவற்றுள் மிகவும் புகழ் பெற்றதும், செல்வாக்கு மிக்கதுமான நூலும் இதுவே ஆகும். கடந்த 2000 ஆண்டுகளுக்கு மேலாக, ஆசியாவின் மிகச் சிறந்த போர்க்கலை நூலாக இது விளங்கி வருகிறது.



இதில், எதிரிகளை எப்படிக் கையாள்வது மற்றும் போரிடாமலே எப்படிப் போரில் வெல்வது உள்ளிட்ட உத்திகளோடு, நீர் மேலாண்மை மற்றும் நீரை எப்படி ஆயுதமாகப் பயன்படுத்துவது என்பது குறித்த குறிப்புகளும் உண்டு. உதாரணமாகவும், உவமையாகவும் அதில் சொல்லப்பட்ட சில விடயங்களைப் பார்ப்போமானால், தண்ணீர் மேடுகளை நோக்கிப் போகாது. ஆனால் தாழ்வான பகுதிகளை நோக்கி விரைவாகவும், விசையோடும் பயணிக்கும். அந்தத் தண்ணீரை அணை கட்டித் தேக்கி வை. என்றோ ஒருநாள் அந்த அணை உடையும் போது, அந்த நீரின் ஆர்ப்பரிப்பைக் கண்டு மனிதர்கள் உயிரைக் காப்பாற்றிக் கொள்ள ஓடுவார்கள். நீர் பள்ளமான பகுதிகளில் தேங்கிக் கொள்ளும். இதே போலத் தான் இராணுவ வீரனும் இருக்க வேண்டும். தண்ணீர் எப்படி ஆக்கிரமிக்குமோ, அதே போன்று உனக்கும் கிடைக்கும் பகுதிகளை ஆக்கிரமித்துக் கொள். ஒருநாள் உன்னுடைய எதிரி நிராயுதபாணியாக உன்முன் நிற்பான். அந்தத் தருணத்திற்காக காத்திரு. அந்த வேளையில் தாக்கு. எதிரிகள் பயப்படுவார்கள். பலவீனப்படுவார்கள். தண்ணீரும் இராணுவ வீரனும் ஒன்றே! இதுவே, சன் சூ வின் அறிவுரை.

இதிலிருந்து என்ன பாடங்களைக் கற்றுக்கொண்டார்களோ சீனர்கள் தெரியவில்லை, இந்த உலகிலுள்ள நீர் ஆதாரங்களெல்லாம் தமக்கே சொந்தம் என அரிதாரம் பூசிக்கொண்டு, 1949 முதல் அணைகளைக் கட்டத் தொடங்கினார்கள். ஒவ்வொன்றும் சாதாரண அணைகளல்ல. உலகிலேயே மிகப்பெரிய அணைகள். ஒன்றல்ல இரண்டல்ல.., இன்றுவரை சுமார் எண்பத்தியேழாயிரம் (87000) அணைகளைக் கட்டியுள்ளார்கள். எங்கே கட்டினார்கள்? எதற்காக கட்டினார்கள்? சராசரி ஒருநாளைக்கு இரண்டு அல்லது மூன்றுவீதம் கட்டி முடிக்கப்பட்டிருக்கவேண்டும். இவற்றுள் நான்கில் மூன்று பெரிய அணைகள்.

உங்களுக்குள் ஒரு கேள்வி எழலாம். சீனாவிற்கு அடுத்த பெரிய நாடாக இந்தியா உள்ளது. இந்தியா இதுவரை எத்தனை அணைகளைக் கட்டியுள்ளது? இதுவரை சுமார் 3700 அணைகளையே கொண்டுள்ளது. 3700 எங்கே? 87000 எங்கே?..

மூன்று ஆழ்பள்ளத்தாக்கு அணை (Three Gorges Dam) என்பது யாங்சே ஆற்றின் குறுக்கே கட்டப்பட்ட நீர்மின்சாரம் உற்பத்தி செய்யும் ஓர் அணையாகும். இந்த அணை சீனாவின் ஹூபே (Hubei) மாகாணத்தில் அமைந்துள்ளது. இதுவே உலகின் மிகப்பெரிய நீர்மின் உற்பத்தி செய்யும் இடமாகும். ஒவ்வொரு மின்னியக்கியும் 700 மெகாவாட் திறனுடையது. அணையின் 32 முதன்மை மின்னியக்கிகளையும், 50 மெகாவாட் திறனுடைய இரண்டு சிறிய மின்னியக்கிகளையும் சேர்த்தால் அணையின் மின் உற்பத்தி நிலையத்தின் மொத்தத் திறன் 22500 மெகாவாட் ஆகும்.

இது உலகின் மிகப்பெரிய நீர்மின் நிலையம். இந்த அணைத் திட்டத்தால் மின்சார உற்பத்தி மற்றும் வெள்ளக்கட்டுப்பாடு தவிர ஆற்றில் பெரிய கலன்கள் செல்லும் வசதியும் கிடைக்கிறது. சீன அரசாங்கம் இத்திட்டத்தை வரலாற்றுச் சிறப்புமிக்க பொறியியல், சமூக, பொருளாதார வெற்றியாகக் கருதுகிறது. எனினும் அணையினால் பல தொல்பொருள், பண்பாட்டு இடங்கள் நீரில் மூழ்கிவிட்டன. 1.3 மில்லியன் மக்கள் இடம் பெயர்ந்தனர். மேலும் இதனால் குறிப்பிடத்தக்க வகையில் சூழ்நிலை மாற்றம் ஏற்பட்டது, நிலச்சரிவு ஏற்படுவதற்கான வாய்ப்புகளும் அதிகமாகின. இந்த அணையானது சர்ச்சைக்குரியதாகவே சீனாவிலும், வெளிநாடுகளிலும் பலரால் பார்க்கப்படுகிறது.



ஏனெனில், கடல் மட்டத்திலிருந்து சுமார் 175 மீட்டர் (574 அடி) (நதி மட்டத்திலிருந்து 91 மீட்டர் (299 அடி)) நீர் மட்டம் அதிகபட்சமாக இருக்கும்போது, அணையால் உருவாக்கப்பட்ட நீர்த்தேக்கம் சுமார் 660 கிலோமீட்டர் (410 மைல்) நீளமும் 1.12 கிலோமீட்டர் (0.70 மைல்) சராசரியாக அகலத்தில். நீர்த்தேக்கத்தின் மொத்த பரப்பளவு 1045 சதுர கிலோமீட்டர் ஆகும். மேலும் இது மொத்தம் 632 சதுர கிலோமீட்டர் நிலப்பரப்பில் வெள்ளத்தை ஏற்படுத்தக்கூடியது. இந்த நீர்த்தேக்கத்தில் சுமார் 39.3 கன கிலோமீற்றர் (9.43 கன மைல்) தண்ணீர் இருக்கும். அந்த நீர் 42 பில்லியன் டன் எடையுள்ளதாக இருக்கும். இந்த அளவிலான வெகுசன மாற்றம் பூமியின் சுழற்சியை பாதிக்கும், இது நிலை மாற்றத்தின் தருணம் என்று அழைக்கப்படுகிறது. அதாவது சுழற்சியின் வேகத்தில் மாற்றத்தை ஏற்படுத்துகிறது. கடல் மட்டத்திலிருந்து 175 மீட்டர் உயரத்தில் 42 பில்லியன் டன் தண்ணீரை உயர்த்துவது பூமியின் செயலற்ற தருணத்தை அதிகரிக்கும், இதனால் அதன் சுழற்சியை மெதுவாக்கும். இருப்பினும், விளைவு மிகவும் சிறியதாக இருக்கும். இது போன்ற வெகுசன மாற்றம் நாள் நீளத்தை 0.06 மைக்ரோ விநாடிகளால் மட்டுமே அதிகரிக்கும் என்றும் பூமியை நடுவில் சற்று அதிக வட்டமாகவும், மேலே தட்டையாகவும் உருவாக்கும் என்று நாசா விஞ்ஞானிகள் கணக்கிட்டனர். இது துருவ நிலையை சுமார் இரண்டு சென்றிமீட்டர் (0.8 அங்குல) மாற்றும். சுழற்சியின் அச்சுடன் ஒப்பிடும்போது பூமியில் உள்ள எந்தவொரு பொருளின் வெகுசனத்திலும் ஏற்படும் மாற்றம் அதன் நிலைத்தன்மையை மாற்றிவிடும், இருப்பினும் பெரும்பாலான மாற்றங்கள் அளவிட முடியாத அளவிற்கு சிறியவை, ஆனாலும் அவை கணக்கிடப்படலாம்.

2017ஆம் ஆண்டு இந்தியா - சீனா டோக்கிலாம் பிரச்சனை ஒருவாறாகப் பேசித் தீர்க்கப்பட்ட தருணத்தில், சீனாவிடம் இந்தியா ஒரு கோரிக்கையை முன் வைத்தது.



சீனாவின் திபெத் பகுதியின் நீர் நிலைகள் தொடர்பான தரவுகளை இந்தியா கேட்டது. சீனா அதனைக் கண்டு கொண்டதாக இல்லை. அந்தவருட இறுதியில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கால் பல நூற்றுக் கணக்கான உயிர்கள் பலியாகின. பல கோடி சொத்துக்கள் நாசமாகின. இதற்குச் சீனாவே காரணம் என இந்தியா குற்றஞ்சாட்டியது. இவற்றையெல்லாம் சீனா கணக்கில் எடுத்ததாக இல்லை..

இன்றல்ல, நேற்றல்ல, 1950 களில் திபெத்தை, எப்போது சீனா கையகப்படுத்தியதோ, அன்றிலிருந்து சீனாவின் கீழிருக்கும் நாடுகளான பாகிஸ்தான், கம்போடியா, நேபாள், பங்களாதேஷ், வியட்நாம், மியான்மார் உள்ளிட்ட நாடுகளுக்குச் சீனா நினைத்தால்தான் தண்ணீர் என்ற நிலையை உருவாகியது.

திபெத் பல ஆறுகளின் பிறப்பிடம். அதனாலேயே சீனா அதனைத் தன்வசம் வைத்துள்ளது. திபெத் ஆக்கிரமிப்பு என்பது எதிர்காலத்துக்கானதே தவிர, தற்காலத்துக்கானதல்ல.

அமெரிக்கா உள்ளிட்ட பல நாடுகள் எண்ணெய் வளம், இயற்கை எரிவாயு, மீத்தேன் என்பவற்றுக்குப் பின்னால் ஓடும் போது, சீனா மட்டும் 87000 அணைகளைக் கட்டியிருப்பதைப் பார்த்தோம். இத்தனை ஆயிரம் அணைகளின் நிர்மாணத்துக்குப் பின்னால் பல்லாயிரம் உயிர்களைப் பலி வாங்கப்பட்டுள்ளன என்பது கண்ணுக்குத் தெரியாததொரு வரலாறு. அது ஒன்



றும் சீனர்களின் உயிர்களல்ல. சீனாவின் கீழிருக்கும் நாடு களான பாகிஸ்தான், கம்போடியா, நேபாள், பங்களாதேஷ், வியட்நாம், மியான்மார் உள்ளிட்ட நாடுகளைச் சேர்ந்த அப்பாவி மக்களின் உயிர்கள். இந்தச் செய்தியை நாம் படிக்கும் போது, "சீ" இப்படியொரு காட்டுமிராண்டித்தனமான உலக அரசியலைச் சீனா செய்கிறதா? என்ற வெறுப்பும் எம்முள் ஏற்படலாம்.

இதற்கு முன் சில ஆய்வுக் கட்டுரைகளில் படிக்கும் போது அமெரிக்கா கொடூரனாகத் தெரிந்தாலும் சீனாவுடன் ஒப்பிடும் போது அவர்கள் பரவாயில்லை போல் தோன்றுகின்றனர். அமெரிக்காவிடம் 86000 அணைகள் உள்ளன. ஆனால், அவற்றில் 5000 அணைகளே பெரியவை. ஆனால் சீனாவின் 87000 அணைகளில் 50000 அணைகள் மிகவும் பிரமாண்டமானவை. இவற்றுள் முக்கியமானதாக நாம் பார்க்கவிருப்பது "மேக்கொங்" ஆறு. இதனை மறித்துச் சீனா பாரிய அணை ஒன்றைக் கட்டியுள்ளது.

மேக்கொங் ஆறு (Mekong) உலகில் மிக நீளமான ஆறுகள் என்ற வரிசையில் 11 ஆவது இடத்தினை வகிக்கிறது. ஆசியாவில் உள்ள மிக நீளமான ஆறுகளில் 7வது என்று சொல்லப்படுகிறது. மொத்தத்தில் 4,350 கிலோ மீற்றர் நீளம் கொண்டது. திபெத்தில் தொடங்கி சீனாவின் யுன்னான் மாகாணம், மியான்மார், லாவோஸ், தாய்லாந்து, கம்போடியா, மற்றும் வியட்நாம் ஆகிய பிரதேசங்கள் வழியாக பாய்கிறது. வியட்நாமின் தென்கிழக்குப் பகுதியில் தென் சீனக்கடலில் கலக்கிறது. அறுபது மில்லியன் மக்கள் தண்ணீர் உணவு மற்றும் போக்குவரத்துக்காக இந்த நதியைச் சார்ந்து வாழ்கின்றனர்.

மேக்கொங் உலகின் அதிக மீன்வளத்தைக் கொண்டுள்ளதாகச் சொல்லப்படுகிறது. இது 795,000 சதுர கிலோமீற்றர் அதாவது 307,000 சதுர மைல் வடி நில பரப்பளவு நீரை வடிகட்டுகிறது. ஆண்டொன்றுக்கு 457 கன கி.மீ ($Km^3$) (114 மில்லியன் கன அடி) நீர் இந்த ஆற்றின் வழியே வெளிச் செல்லுகிறது.

கடந்த 2019ஆம் ஆண்டில் வெளிவந்த "மேக்கொங் ஆறு வறட்சியின் பிடியில்" எனும் செய்தி உலக நாடுகளை அதிர்ச்சிக்குள்ளாக்கியது. கடந்த 100 ஆண்டுகளில் இதுவே முதல் முறையாக ஏற்பட்ட வரட்சி என்று கணக்கிடப்பட்டுள்ளது. இது என்ன அவ்வளவு பெரிய செய்தியா? என்று நீங்கள் கேட்கலாம். இந்த வரட்சியினால் மியான்மார், லாவோஸ், தாய்லாந்து, கம்போடியா, மற்றும் வியட்நாம் உள்ளிட்ட நாடுகள் கடுமையாகப் பாதிக்கப்பட்டன. ஒரு காலத்தில் ஆசியாவின் நெற்கிண்ணம் என்று போற்றப்பட்ட இந்த ஐந்து நாடுகளும் இன்று நீருக்காகச் சீனாவிடம் கையேந்தும் நிலையைச் சீனா தனது இராஜதந்திர நரித்தனத்தால் உருவாக்கியுள்ளது என்றால் மிகையில்லை.

தாய்லாந்தை எடுத்துக் கொண்டால், கரும்பு உற்பத்தியில் இந்தியா, பிரேசிலை அடுத்து உலகளவில் மூன்றாவது இடத்தில் உள்ளது, ஆனால் இன்று தம்முடைய நாட்டுக்குத் தேவையான கரும்பைக்கூட உற்பத்தி செய்ய முடியாத நிலையில் அவர்கள் இருக்கின்றனர்.

வியட்நாமில் 94000 ஹெக்ரெயர் நிலப்பரப்பில் நெல் செய்கை நிலங்கள் கடுமையான பாதிப்புக்குள்ளாகி இருக்கின்றன. அது மட்டுமல்லாமல். இந்த மேகொங் ஆறு வற்றிப் போனதால் வியட்நாம் முழுவதும் நிலத்தடி நீரில் கடல்நீர் கலந்து உப்பு நீராக மாறத் தொடங்கிவிட்டது. அங்கு மேகொங் ஆற்றை நம்பி ஏறத்தாழ 6 கோடி மக்கள் வாழ்கின்றனர்.

மியான்மார், லாவோஸ், தாய்லாந்து, கம்போடியா, மற்றும் வியட்நாமுடன் இணைந்து அமெரிக்கா மேகொங் ஆறு தொடர்பாக ஒரு கட்டுப்பாட்டு வாரியத்தை அமைத்தது. அதற்குப் பார்வையாளர் நாடாகச் சீனா அனுமதிக்கப்பட்டது. சீனாவின் நரித்தனம் அங்கே எடுபடாது என்றாலும், அந்த வாரியத்தின் கட்டுப்பாடுகளை மதிக்க வேண்டிய இடத்தில் இருக்கும் சீனா, கட்டுப்பாடுகளை மீறி மேகொங் ஆற்றின் குறுக்கே அணையைக் கட்டி, அதற்கான துணை அணைகள் எனச் சிறிய பல அணைகளைக் கட்டி ஆற்றின் பாதையைத் திசைமாற்றியது. இந்த ஆற்றின் தடத்தை மாற்றியபின் சீனா வியட்நாமிடமும், தாய்லாந்திடமும் தமது பட்டுவழிப் பாதைத் திட்டமான "பட்டை ஒன்று பாதை ஒன்று" என்னும் திட்டத்தில் கையெழுத்திடச் சொல்லி அச்சுறுத்தி வருகிறது. சீனாவின் "பட்டை ஒன்று பாதை ஒன்று" என்ற திட்டத்தைப் பற்றி நாம் கடந்த இதழில் குறிப்பிட்டு இருக்கிறோம்.

இதற்கு நடுவே இந்தியாவிலுள்ள பிரம்ம புத்ரா நதி மீது சீனாவின் ஆதிக்கம் பற்றியும் குறிப்பிட்டாக வேண்டும். பிரம்மபுத்ரா என்ற நதியை நீங்கள் நன்கு அறிந்திருப்பீர்கள். அதன் கிளை நதியான சியாங் நதி இந்தியாவிற்குள் நுழையும் முகப்புப் பகுதியில் கறுப்பு நிறமாக மாறியே உள் நுழைகிறது. இது பற்றிச் சீனாவிடம் கேட்டபோது திபெத்தில் ஏற்பட்ட நிலநடுக்கம் காரணமாகவே நீர் நிறம் மாறியதாகச் சொல்லினர். ஆற்று நீர் மாசடைந்து வருவதற்கு அதுவே காரணம் என்றும் சொன்னார்கள். ஆனால் அதுவல்ல உண்மைக் காரணம். சீனா திபெத்தின் ஆற்றுப்படுகையில் கனிமங்களை அகன்றெடுத்தது. அது தொடர்பாக வேறு பல ஆய்வுகளையும் செய்தது. அதனாலேயே நீர் நிறம்மாறிதாகப் பின்னர் கண்டறியப்பட்டது.

அது மட்டுமல்லாமல், தமது நாட்டின் நீர்மின் நிலையங்களின் நீர்த் தேவைகள் மற்றும் நீர்ப்பங்கீடுகளை முடித்து மீதமுள்ள நீரையே மற்ற நாடுகளுக்கு அனுப்பு கின்ற மனிதாபிமானமற்ற செயலைச் சீனா செய்துவருகிறது.

இதுதான் நீரை ஆயுதமாக மாற்றும் யுக்தி அல்லது திறன் என்றும் சொல்லலாம். நீருக்காக மற்ற நாடுகள் திண்டாடும் வேளையில், ஏங்கித் தவிக்கையில், 87000 அணைகளுடன் நீர் மேலாண்மையில் தன்னிறைவு பெற்ற நாடாகச் சீனா, உலகில் முன்னணியில் இருக்கின்றதென்பதில் இந்த உலகிற்கு என்ன பயன்? தவித்த வாய்க்குத் தண்ணீர் தராத நாடெல்லாம் ஒரு நாடா? இயற்கையே இதற்கான பதிலை நிச்சயம் கொடுக்கும்.

பிறரைச் சுரண்டுவதால் ஏற்படுகின்ற தன்னிறைவு "தன்நிறை வல்ல"!





மியான்மாரில் ஏற்பட்டுள்ள வறட்சி



வியட்நாமில் ஏற்பட்டுள்ள வறட்சி

# காற்று வாக்கிலே....

"முன்னொரு போதும் கண்டிராத ஒரு இராணுவ ஆட்சி நாட்டில் ஏற்படப் போகிறது. இது குறித்து நாம் அனைவரும் விழிப்புடன் இருக்க வேண்டும். என அபாய அறிவிப் பொன்றை சுமந்திரன் ஐயா விடுத்துப் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளார்".

அதுவும் வேட்பாளர் அறிமுகக் கூட்டமொன்றில் வைத்தே அவர் இதனைத் தெரிவித் துள்ளதாகச் செய்தி வெளியிட்டுள்ள ஊடகம், அமையப் போற இராணுவ ஆட்சி தொடர்பாக விபரம் எதனையும் சுமந்திரன் அவர்கள் தெரிவித்ததாகக் குறிப்பிடவில்லை. எனினும் அவர் குறிப்பிடுவது அடுத்து வரப்போகும் அரசையே அவர் அவ்வாறு குறிப்பிடுகிறார் என்றே அர்த்தம் கொள்ள வேண்டியுள்ளது.

அதாவது கோத்தாபாய ராஜபக்ஷ அவர்களின் கட்சியைத் தவிர வேறெந்த கட்சியையும் குறித்து அவர் இவ்வாறான கருத்தை வெளியிட்டிருக்க முடியாது. முற்றிலும் அதாவது ஆட்சியில் உள்ளேயும் வெளியேயும் ஒரு இராணுவச் சூழலை முழுமையாக உரு வாக்கி வைத்துக் கொண்டு தேர்தலை நடத்த தீர்மானம் எடுத்திருப்பது கோத்தபாய ராஜபக்ஷ தலைமையிலான ஆட்சியே!

இராணுவ உயர் அதிகாரிகளையும், ஓய்வு பெற்ற படைத்தரப்பு முக்கியஸ்தர்களையும் நாட்டின் நிர்வாகக் கட்டமைப்பின் உயர் பீடங்களில் பதவியில் அமர்த்தியும், அவர்களுக்கு அதீத அதிகாரங்களை வழங்கியும் ஒரு புதியவகை ஜனநாயக(?) நிர்வாக முறைமையை ஏற்படுத்தியுள்ள ஜனாதிபதி அவர்கள் அதற்கான காரணங்களைக் கூறி நியாயப்படுத்தி வருவதானது ஒரு இராணுவ ரீதியிலான ஆட்சி முறை ஏற்படுவதற்கான கட்டியம் கூறலாக எடுத்துக்கொண்டால் அதில் ஆச்சரியப்பட எதுவுமில்லை.

அது கிடக்கட்டும், வரப்போகிறதாகக் கூறப்படும் இராணுவ ஆட்சி குறித்து அபாய சமிக்ஞை காட்டும் சுமந்திரன் ஐயா தான் சில வாரங்களின் முன்னர் இந்த ஆட்சியுடன் பேச்சுவார்த்தைக்குத் தயார் என்றும், இந்த அரசு தமிழ் மக்களுக்கு நீதியானதும் நிலையானதுமான தீர்ப்பை வழங்கும் எனத் தாம் நம்பு வதாகச் சம்பந்தன் ஐயா கூறியதற்கு மறுப்பேதுமின்றி அமைதி காத்தாகவும் கூட்ட மைப்புக்குள்ளேயே பகிரங்க மாகப் பேசப்படுகிறதே! அதற்கு என்ன விளக்கம் தரப்போ கிறார்?



தங்களுக்கல்ல....! மக்களுக்கு தான் உபதேச எச்சரிக்கை என்று சொன்னாலும் சொல்ல லாம்.

தென்னிலங்கையின் இரு பிரதானக் கட்சிகளும் கருணாவின் தேர்தல் பிரச்சாரத் தின் போதான அறிவிப்பால் ஒருவருக்கொருவர், ஒருவரை ஒருவர் "துரோகி" பட்டம் கட்டுவதில் மாறிமாறி மோதிக் கொள்வது சுவாரஸ்யமான விடயமாகியுள்ளது. ஆனையிறவிலும் – கிளிநொச்சியிலும் 3000க்கும் அதிகமான படையினரை கொன்றதற்கான உரிமை கோரல் அறிவிப்பால் தேர்தல் பிரசார மேடைகள் அனல் கக்கத் தொடங்கியுள்ளன.

இந்நாள் வரை மஹிந்தவினதும், அரசினதும் சிறப்புச் சலுகைகள் பல பெற்ற பெருமைக் குரியவராகவும், அமைச்சு அந்தஸ்த்துக்கு உரிய கௌரவங்களைப் பெற்றவராகவும் ஆளுங்கட்சிக்கு ஆதரவுத் தளத்தை ஏற்படுத்திக் கொடுப்பவராகவும் விளங்கிய கருணாவை உடனே கைதுபண்ணி, விசாரணை செய்து தண்டனை வழங்குமாறு பிரதான எதிர்க்கட்சிகள் குறிப்பாக சஜித் தலைமையிலான அணியினர் அரசுக்கு அழுத்தம் கொடுக்கத் தொடங்க அரசியல் தேரர்களும் அதற்கு ஆதரவுக் கோஷம் எழுப்பிச் சீற ஆரம்பிக்க.... வில்லங்கம் உருவாகிவிட்டது.

பதிலுக்கு கருணா மீண்டும் தன் பங்கிற்கு இந்திய இலங்கை படையினரைக் கொல்லப் பெருமளவு ஆயுதங்களை விடுதலைப்புலிகளுக்கு வழங்கியவர் சஜித்தின் தந்தையான பிரேமதாஸாவே... அதற்கு நானே கண்ட சாட்சி, எனவே சஜித்தையும் கைது செய்து விசாரிக்க வேண்டு மென்று கூற... ஆரம்பித்து விட்ட கருத்து மோதல் தென்னிலங் கையை கலக்குக் கலக்கிக் கொண்டிருக்கிறது.

இப்போது கருணா இஸம்" தேர்தல் பிரச்சார கால முக்கிய பேசு பொருளாகிவிட்டது. கருணா வில்லனா? ஹீரோவா? பௌத்த சிங்கள வாக்காளப் பெருமக்களின் விடைகாண முடியாத வினாவே இதுதான். இது ஒரு புறம் இருக்க. கருணாவை விடுதலைப் புலிகளுக்கு எதிராகவும் தமிழ் மக்களுக்கு துரோகம் செய்யும் வகையிலும் செயற்பட பின்னணியில் இருந்த ரணிலார் தவிர கருணாவுக்கு முடிசூட்டி" அதாவது பதவிக் கௌரவம் வழங்கி பாராட்டு வழங்கவில்லை. மாறாக அவரை ஒரு கருவேப் பிலையாகப் பயன்படுத்திவிட்டு போகாதிருந்து விட்டோம் என்று அறிவித்து கருணா செய்ததாகக் கூறப்படும் படையணி கொலைகளுக்கு தமக்கும் எவ்வித சம்பந்தமு மில்லை எனக் கூறித் தப்பிக்க முயன்றுள்ளார். விடுதலைப்புலிகளைக் கருணா காட்டிக் கொடுத்தார். ரணில் கருணா அவர்களுக்கு செய்த ஊளியத்துக்காக அவருக்கு கறிவேப் பிலை பட்டத்தை வழங்கி கௌரவித்துள்ளார்.

கருணா தன் இனத்திற்காகப் போராடிய போது தளபதி........
போராட்டத்தை காட்டிக் கொடுத்த போது துரோகி............
மஹிந்த அரசின் கூற்றின் படி மன்னிக்கக்கூடிய கொலைகாரக் குற்றவாளி.........
ரணிலின் கணிப்பின் படி தூக்கி எறியப்பட வேண்டிய கறிவேப்பிலை...........
ஆமாம் அவர் தன் நெஞ்சறிய தான் யார் என்பதை மதிப்பீடு செய்ய வேண்டிய காலம் இதுதான்.



இந்த வாரமும் வழக்கம் போல் ஒரு பௌத்த பிக்குவானவர் அதாவது பேராசிரியர் மெதகொட அபேதிஸ்ஸ என்பவர் "தேரோபதேசம்" ஒன்றைச் சொல்லியுள்ளார் இது சம்பந்தன் ஐயாவின் அண்மைக்கால பேச்சுக்கள் தொடர்பில் வெளியிடப்பட்டுள்ள உபதேசபதம் அல்லது எச்சரிக்கை என்றும் கூடக் கொள்ளலாம்.

அதாவது சம்பந்தப் "பெருமான்" மஹிந்த ராஜபக்ஷ அவர்கள் குறித்து புகழ் புராணத்தை அண்மைக்காலமாகப் பாடி வருகிறார் அல்லவா?

மஹிந்த நல்லவர், வல்லவர், தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு நீதியானதும் நிலையானதுமான தீர்வை அவர்தான் தரக்கூடியவர் என்ற தொனிப்பட ஏதேதோவெல்லாம் திடீரென்று பேச ஆரம்பித்திருக்கிறார் அல்லவா? அது தொடர்பாகவே அபே திஸ்ஸ தேரரின் தேரோபதேசக் கருத்து வெளியாகியுள்ளது.

அதாவது சம்பந்தன் ஐயா எவ்வளவு தூரம் இறங்கி வந்தாலும், எந்தளவுக்கு அளவுக்கு மீறி மஹிந்த ராஜபக்ஷ அவர்களைப் புகழ்ந்தாலும் தமிழர்களின் பிரச்சினைகளுக்கு அவர்கள் கேட்கும் தீர்வெதனையும் தர இணங்கமாட்டோம். அரசை அப்படித் தீர்வொன்றை தர அனுமதிக்க மாட்டோம் என அவர் சூளுரைத்துள்ளார்.

13 ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல் படுத்தக் காரணமாக இருக்கும் தடைகளைத் தகர்த்துக் கொள்வதானால் சம்பந்தர் மஹிந்த ராஜபக்ஷவின் புகழ்பாடி நிற்கிறாராம். அதனால் அவரை எந்த வகையிலும் நம்பவே கூடாதாம் அரசு இவ்விடயத்தில் மிக விழிப்பாகவும் இருக்க வேண்டுமாம்....!

இது அபேதிஸ்ஸவின் கண்டுபிடிப்பு.

சம்பந்தர் மஹிந்த ராஜபக்ஷவைப் புகழ்ந்து பாராட்டுவதன் மூலம் – பப்பா மரத்தில் ஏற்றுவது போல் – அவர் மனதினை மாற்ற முயற்சிக்கிறாராம். தேனொழுகு வதைப் போல் சம்பந்தன் பேசும் பேச்சுக்கு மயங்கி ஏமாந்து விடக் கூடாதாம்." எப்படி உள்ளது தேரரின் உபதேசம்?

ஆனால் ஜனாதிபதியும் பிரதமரும் இவரது பேச்சுக்கு எடுபட மாட்டார்களாம் தேரர் சொல்லி விட்டார். சம்பந்தன் என்ன சொல்லப் போகிறார்?

"நான் சிவனேன்னு ஏக்கிய ராஜ்ய தீர்வுக்கே தலையா கைகட்டிப் பவ்வியமாக நிற்கிறேன்... என்னைப் போய் பிரிவினைவாதி என்கிறார்களே.... இது தகுமோ, இது முறையோ, இது தர்மம் தானோ என்று புலம்பினாலும் புலம்பலாம்.




தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசாவுக்கு திடீரென்று பெருங்கவலை ஒன்று ஏற்பட்டுள்ளது. அதாவது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருந்து பிரிந்து சென்றவர்கள் குறித்து கவலையே அது. காலங்கடந்த கவலை. கூட்டமைப்பு உடைந்தால் மாற்று அணிகள் உருவாகும் என்பது எல்லோருக் குமே தெரிந்த வெளிப்படையான விடயம். தமிழ் மக்களின் எதிர்காலம் குறித்த நலனில் அக்கறை இருந்திருக்குமானால் புரிந்துணர்வுடனும், விட்டுக் கொடுப்புகளுடனும் அனைத்துக் கட்சிகளும் செயற்பட்டிருப்பின் கூட்டமைப்பு உடைந்திருக்காது.

தொலை நோக்குச் சிந்தனை எதுவுமற்ற சுயநல அபிலாஷைகளுக்கும், வரண்ட கட்சி அரசியலுக்கும் முக்கியத்துவம் கொடுத்து தமிழர் வாக்குவங்கியை – ஒரு மித்த பலத்தை சிதைத்த புண்ணியவான்கள், கூட்டமைப்பில் அங்கம் வகித்த அனைத்து தலைவர்களுமே.... மாவை அவர்களில் ஒருவரே.... இப்போது கவலைப்படுகிறாராம்.... கண்ணீர் வடிக்கிறாராம். தேர்தலுக்குப் பின் இணைந்து செயற்படவும் எதிர்பார்க்கிறாராம்.

கதை விடுகிறார்.... இதனை மக்கள் நம்ப வேண்டுமாம்.
மக்களுக்கான அரசியல் எதுவெனத் தெரியாத இந்த மகானுபவர்கள் தேர்தலின் பின் செய்ய விரும்புவதை இப்போதே செய்யலாமே...!

செய்யமாட்டார்கள் செய்ய இவர்கள் யாருக்கு விசுவாசமாக இருக்கிறார்களோ அந்த உள்ளக அயலக எஜமான்கள் விடமாட்டார்கள் இதுவே உண்மை...!



கல்கி

அந்தநாள் ஞாபகம்..

நமது இலங்கைக் கடிதம்....
- 27. 09. 1953 கல்கி -

# சேர் அருணாச்சலத்துக்கு அஞ்சலி



*கொழும்பு, செப். 20 உ,*

அற்பாயுளில் முடியும் மனித ஜென்மமெடுத்தும் அமர வாழ்வு வாழும் பாக்கியம் சிலருக்கு மட்டும்தான் கிடைக்க முடியும். உலகின் நீண்ட சரித்திரத்தில் இத்தகைய பாக்கியம் பெற்றவர்களின் தொகையை விரல் விட்டு எண்ணிவிடலாம். இறந்தும் இறவாமல் மக்கள் மனத்திலே சிரஞ்சீவியாக வாழும் பெரியார்களில் ஸர் பொன்னம்பலம் அருணாசலமும் ஒருவரென்பதில் இலங்கை உண்மையாகவே பெருமையடையலாம். இவரது நூற்றாண்டு விழாவை ஜாதி மதி நிற பேதமில்லாமல் இலங்கை மக்கள் கொண்டாடி நாட்டின் சுதந்திரத்துக்கு வித்திட்ட மகா மேதைக்கு அஞ்சலி செய்தார்கள்.

கொழும்பு ரோயல் கல்லூரியில் நடைபெற்ற நூற்றாண்டு விழாக் கூட்டத்தில் பிரதம மந்திரி ஸ்ரீ டட்லி சேனாநாயகா பேசிய பொழுது உலகில் இலங்கைச் சமுதாயமென்று ஒன்று இருக்கும் வரையில் சேர் பொன். அருணாசலத்தின் பெயரும் சிரஞ்சீவியாயிருக்குமென்றார். அரசாங்கக் கட்சியையும் எதிர்கட்சிகளையும் சேர்ந்த பல தலைவர்கள் சேர் அருணாசலத்தின் அரிய பெரிய தேச சேவைகளையும் பாராட்டிப் பேசினார்கள். அவருடைய வாழ்க்கைச் சரித்திரத்தையும் அவர் இயற்றிய நூல்கள் கட்டுரைகள், சொற்பொழிவுகள் ஆகியவற்றையும் தொகுத்துப் புத்தகங்களாக வெளியிடுவதென்று ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டு அதற்கு ஒரு மான்யம் வழங்க அரசாங்கமும் சம்மதித்திருக்கிறது. சேர் அருணாசலத்தின் ஞாபகார்த்தமாகத் தற்சமயம் பார்லிமெண்டு சபைக் கட்டிடத்திக்கு முன்னாலிருக்கும் அவரது உருவச்சிலை ஒன்று போதாதென்று அரசாங்கத் தலைமைக் காரியாலயத்தின் முன்னால் இன்னொரு சிலையைப் பிரதிக்ஷ்டை செய்ய நடவடிக்கையெடுக்க வேண்டுமென்றும் பிரதம மந்திரி சேனாநாயகா உணர்ச்சி பரவசத்துடன் பேசியது சேர் பொன்னம்பலம் அருணாசலத்தின் சத்திய வாழ்க்கையும் தேச சேவையும் சிங்களவர்களின் மனத்தை எவ்வளவு தூரம் கவர்ந்துள்ள தென்பதை அறிவுறுத்துகின்றது.

சுதந்திரத்தைப் பற்றி பேசுவதே பயங்கரமான குற்றமாயிருந்த காலத்தில் மக்களின் சுதந்திர உணர்ச்சியைத் தட்டியெழுப்பி ஒரு நாட்டை ஆள மற்றொரு நாட்டுக்கு ஒருபோதும் உரிமை கிடையாதென்று முழங்கினார் சேர் அருணாசலம். அவருடைய அக்கறை இலங்கையொடு நின்றுவிடவில்லை. இந்தியாவில் லிட்டன் பிரபு வைசியராக இருந்த பொழுது நடந்த கொடுங்கோலட்சியைக் கண்டித்து ஸ்ரீ கார்ப்பெண்டர் என்ற ஒரு உயர்தர பிரிட்டிஷ் அதிகாரிக்கு எழுதிய கடிதத்தில் “இந்தியாவில் பிரிட்டிஷார் நடத்தும் அநியாயத்தைப் பார்த்தால், புனாவில் போய்க்குடியேறி இந்திய சுதந்திரப் போராட்டத் தீயில் குதிக்க வேண்டுமென்று என் மனம் என்னை தூண்டுகிறது” என்று எழுதினார் சேர் அருணாசலம். தாய் நாடான இந்தியாவிடமும் இந்தியத் தலைவர்களிடமும் அவருக்கு இருந்த மதிப்பும் மரியாதையும் அளவிட முடியாதது. மனம் போல் மரணமென்பார்கள். அதைப் போல இந்தியாவிடம் மிகுந்த அன்பும் விசுவாசமும் கொண்டிருந்த சேர் அருணாசலத்தின் ஆவி இந்தியாவிலேயே பிரிந்தது. சிதம்பர தரிசனம் செய்துவிட்டுப் பழனிக்கு வந்த சமயம் அங்கு சற்றே ஜுரம் கண்டது. ஆயினும் பழனியாண்டவரைத் தரிசித்துக் கொண்டு மதுரைக்கு வந்ததும் அங்கு அவர் சிவபதம் அடைந்தார்.

பாரத புண்ணிய பூமியிலேயே தம்மைத் தகனம் செய்ய வேண்டுமென ஸர் அருணாசலம் விரும்பியதாயும் ஆனால் இலங்கையிலிருந்த அவரது நண்பர்கள் இங்கு அவரது பூத உடலைக் கொண்டு வந்து விசேட மரியாதையுடன் தகனம் செய்த தாயும் அவர்கள் உறவினர்கள் கூறுகின்றனர்.

தபால் மந்திரி ஸ்ரீ எஸ். நடேசன் கொழும்பு பொதுக் கூட்டத்திலும் யாழ்ப்பாணப் பொதுக் கூட்டத்திலும் சொல்லியதைப் போல சைவத்துக்கு ஸர் அருணாசலம் செய்த சேவைகள் அளவற்றவை திருவாசம், தாயுமானவர் பாடல்கள், ஆகியவற்றை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துச் சைவத்தின் பெருமையை மேனாட்டவர்களும் உணரச் செய்தார்.

ஸர் அருணாசலத்துக்கு தொழிலாளர் வர்க்கம் விசேடமாக நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளது. இலங்கையில் தொழிலாளர் இயக்கத்தின் தந்தை என்று அவரைக் கம்யூனிஸ்டு தலைவர் ஸ்ரீ பீட்டர் கெனமன் ஒரு ரேடியோப் பிரசங்கத்தில் வர்ணித்தது நூற்றுக்கு நூறு உண்மை. இந்த நாட்டில் இலங்கைத் தொழிலாளர் சங்கம் என்ற பெயருடன் ஒரு தொழிலாளர் சமுக ஷேமாபிவிருத்தி ஸ்தாபனத்தை முதன் முதலாகத் தோற்றுவித்த பெருமை சேர் அருணாசலத்துக்கே உரியது. இந்த ஸ்தாபனத்துக்கு இலங்கை இந்திய காங்கிரஸின் முது பெருந்தலைவரான ஸ்ரீ பெரி சுந்தரம் முதல் காரியதரிசியாகத் தெரிவு செய்யப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

யாழ்ப்பாணத்தில் மந்திரி ஸ்ரீ நடேசன் தலைமையில் நடைபெற்ற நூற்றாண்டு விழாக் கூட்டத்தில் கட்டுரைப் போட்டிகள் நடந்து பதக்கங்கள் வழங்கப்பட்டன. கண்டி, குருணாகல், மட்டக்களப்பு, திருகோணமலை முதலான நகரங்களிலும் சேர் அருணாசலம், நூற்றாண்டு விழாவைக் கொண்டாடினர். இன்று ஞாயிற்றுக் கிழமை கொழும்பு விவேகானந்தா சபையினரும் நூற்றாண்டு விழாவைக் கொண்டாடினார்கள்.

- ரஜனி -

# பிரபஞ்சப் பூ

- முனியப்பதாசன் -

நிறமற்றுப் பேதமற்றுக் கலப்பற்று நின்ற உயிர் ஒன்று, ஆத்மா ஒன்று தன் தூயதும், அகண்ட விசாலத் தத்துவத்தையும் மயிரிழையாய் அதனிலும் இளையாய்ச் சுருக்கி அவள் வயிற்றில் புகுந்து நின்று அதுவே அவளாய் மாறி செழித்து மலர்ந்தது.

உயிர்ப் பூ!

தொட்டிலிற் கிடந்த குழந்தை சிரித்தது. பனியில் தோய்ந்து நிற்கிற செம்ரோஜாவின் மெத்தென்ற இதழ்கள் போல் குழந்தையின் இதழ்கள். கவி பொது வாய்க் காணுகிற பரிசுத்தம் நிரம்பிய தெய்வத் திருவிழிகள். கைகளும் கால்களும் மண்ணில் நிற்கிற பரிசுத்தத்தில் தெய்வத் தன்மையோடு நிற்கின்றன. புதிதாய் அடைபட்டுப்போன "ஆத்மா" தனக்கே உரித்தான ஒளியை அங்கமெலாம் செலுத்திக் கிறங்கிக் கொண்டிருந்தது.

"வீல்..." முதல் குரல் இல்லை. இது பழைய குரல் தப்பித் தப்பி எங்கெங்கோ பிறந்து, எதனாலோ ஆண்டும், ஆளப்பட்டும், அனுபவித்தும், அனுபவிக்கப்பட்டும் நிற்கிற ஒரு சக்தியின் பழைய குரல். மனிதனின் குரல்.

தொட்டிலின் முன்னே வியப்பையும், தன் அனுவொன்றின் பிரதிபலிப்பையும் பார்த்தபடியே நின்ற அவரின் கண்கள் எதெதுவோ பிறந்தும், தேய்ந்தும் போய்க் கொண்டிருந்தது. அவர் சிரித்தபடியே தனது விரல்களால் மெதுவாய்த் தொட்டார்.

குழந்தை சிரித்தது.

"சாந்தினி... சாந்தினி"

... அந்தப் பெயரின் இதத்தை நெஞ்சில் நிறுத்தி அனு அனுவாய்ச் சுவைத்தபடியே சிரித்தார்.

பக்கத்தே கட்டிலில் கிடந்த சத்தியபாமா கேட்டாள்:

"என்ன பெயர் வைக்கப் போகிறீர்கள்?"

"சாந்தினிதேவி"

"எந்தச் சாந்தினிதேவி". அவள் ஆச்சரியத்துடன் கேட்டாள்.

மரமாயும், மலராயும், நீராயும், நிலனாயும், தோன்றும் உயிர்க் கருவறையில் இருந்தும், கணந்தோறும் அரும்பவிழும் பலநூறு சாந்தினிகள்தான். உடல் சேர்க்கும் பற்றற்று உயிர் தூண்டும் உணர்வின் நெகிழ்வில் கசியும் பற்றோடு பார்த்தால் எல்லாமே இவள்தான். இவளில் எல்லாம், ஞானிகள் பேசுகிறாற் போல எல்லையற்றுப் பாயும் உயிரின் ஊற்றின் கரு " இவளுள்ளும் தான் ஓடுகிறது..."

பிறகு... நீ.

அவள் தேம்பி அழுதாள்.

அவளுள் பொறி தட்டிற்று. அவருக்கு நோய் என்பதாக அவள் எண்ணம். ஒவ்வொருவனும் போட்டி போட்டுக்கொண்டு, அதையும்,இதையும், எதையும் சம்பந்தா சம்பந்தமில்லாமல், பொருத்தம் பொருத்தமில்லாமல் வறுகிக் குமிக்க நினைக்கிற போது இந்த மனிதர் மட்டும் அந்த நாளையிலிருந்து இன்றுவரையும் இந்த மாதிரித்தான் பேசிக்கொண்டிருக்கிறார். இது ஒரு நோயில்லாமல் பிறகென்ன.

அவள் மிரள மிரள விழித்தபடியே பார்த்தாள். தொட்டிலில் குவிந்த அவர் விழிகள் ஒவ்வொன்றாய் நெஞ்சில் தேங்கிச் சுவைத்தபடியே அவள் பார்வையை நோக்கிப் பதிந்தது. அவள் கண்களில் எதனாலோ ஒரு நாணம். கூசியும் குறுகியும் பார்க்கிறாற் போலக் கூடப்பட்டது.

"சாந்தினி"

அவள் பிரமை நீங்கிற்று.

மண்ணின் சம்பந்தத்தை, தான் என்கிற தனித்துவமான மனிதர்களின் பந்தத்தை நிலை நிறுத்துகிற பெயர். எப்படியிருந்தாலும் அவரும் மனிதர் தான். மண்ணோடு சம்பந்தப்பட்ட ஆசைகள் அவருள்ளும் தான் இருக்கிறது.

"பாமா, உனக்குப் பெயர் பிடித்திருக்கிறதா?"

அவள் பிரமை முற்றாய் நீங்கிற்று.

இலேசாய்க் குறும்பாய்ச் சிரித்தாள்.

"நீ ஒரு குழந்தை. குழந்தைக்குக் குழந்தை. குழந்தை என்கிற படியைக் கடந்தும் குழந்தையாய் நிற்கிற குழந்தை." சிரித்தபடியே அவர் தொடர்ந்து சொன்னார்: " உன்னில் அவள், அவளில் நீ, நான்..."

அவள் மீண்டும் விம்ம ஆரம்பித்துவிட்டாள்.

அவர் தொட்டிலைப் பார்த்தபடியே நின்றார்.

அவளோ தன் நினைவுத் தொட்டிலைப் பார்த்தபடி நின்றாள்.

(2)

அவள் எதையும் ஏட்டில் கற்றுக்கொண்டவளல்ல. கண் முன்னால் தெரிகிற எதையும் நிலை நிறுத்தி அசைபோட்டு அதன் சாறான உயரிய ஞானத்தையும் ஏற்று நிற்கிற ஞானப் பெண்ணுமில்லை. ஒரு பகுதி ஓங்கி ஒரு பகுதி தாழ்ந்து நிற்கிறதுதான் மனித அறிவு. அந்த அறிவு இதயத்தைத் தொடுகிற போதுதான் ஆத்மீகம் பிறக்கிறது. அந்த ஆத்மீக கீதத்தின் லயம்பட்ட அமுதமயமான உள் ஒலி எல்லாருக்கும் எப்போதும் கேட்டுக்கொண்டேதான் இருக்கிறது. அந்தக் கீதத்தின் ஓசை அலைகள் மிதந்து பிரபஞ்சத்தின் தோற்றப் பொலிவில் தொட்டும் தொடாமலும் நிற்கிறபோது, பார்வையாளனின் பார்வையினூடே படுகிற "புரியாப் புதிர்கள்" அதைச் சீண்டிவிடுகின்றன. பிறகு இசைலயம். அவள், சத்திய பாமாவிற்கும் ஒருநாள் அது கேட்டது. மலரொன்று இதழ் விரித்து மலர்ந்தது. மாலையில் அது வாடி உதிர்ந்து நின்றது.



மறுநாள் புலருகிறபோது நேற்றுப் பூத்த கிளையில் புதிதாய் ஒன்று. நேற்றிருந்தாற் போலத்தான். மாற்றமேயில்லை. அவளுள் ஒரு கேள்வி: எதிலிருந்து எது பிறந்தது? நேற்றைய பூவிலிருந்து இன்றைய பூ மலர்ந்ததா? அதே அழகு, அதே உயிர், நேற்றைய பூவின் வாடிய மலரின் "ஆத்மா" அழகு இன்றைய இந்த மலரில் ஒட்டிக்கொண்டதா? எதிலிருந்து எது பிறந்தது? இந்த மலர் நேற்றைய மலரா? இன்றைய மலரா? முந்தி பல நூறு ஆண்டுகளுக்கு முன்னால் பிரபஞ்சத்தில் பூத்த புத்தம் புதிய முதல் மலரா? எது?

அது அவளுக்குப் பைத்தியமாகிவிட்டது. அதுதான் பேச்சு. அதுதான் நினைவு. பார்வை எதனிலும் பதிகிறதாக இல்லை. நேற்று – இன்று – நாளை இவற்றில் தான் உலகம். இதன் உயிர் ஒன்றா, பலவா? அவளுக்கு " அவருக்கு எந்த நோய்" என்று விம்முகிறாளே! அந்த நோய் அப்போது பிடித்திருந்தது.

அவள் வீட்டின் முன்னால் ஒரு தொண்டர் நிலையம். அவளுக்கு அதில் எல்லாம் நம்பிக்கையில்லை. உலகத்திற்கு ஒரு மாதிரி காட்டி விட்டுபோன ஞானிகளது புறத்தோற்றத்திற்குப் பூப்போட்டுக் கொண்டிருக்கிறவர்கள் என்பதாக அங்குள்ள துறவிகளைப் பற்றிய அவள் எண்ணம். உண்மையும் அதுதானே. பார்க்கப் போனால் வாழ்வு முழுமையும் நெஞ்சோடும், உள் ஒலியோடும் நம் ஆத்மீகத் துறவிகள், சங்கரரிலிருந்து இராமகிருஷ்ணர் வரை பேசியும் அனுபவித்தும் வந்த மௌன பாஷைகளை யாரேனும் கேட்டு விட முடியுமா? பிரசாரம் பண்ண முடியுமா? சார்ந்தும் போற்றியும் வாழுகிறவர்கள் மகான்களின் வாய்மொழிகளுக்குத் தத்துவ விளக்கம் செய்யத்தானே முடியும்.

சத்திய பாமாவிற்குத் தன் குழப்பத்தை, அந்த நோயைத் தீர்ப்பதற்கு அங்கு போவதைத் தவிரவும் வழியில்லை.

இரவு ஆடலும், பாடலும், நற்குணங்களின் பொலிவுமாய் அறையில் விரிந்து கொண்டிருக்கிறது.

அன்று சிவராத்திரி நாள்,

நடராச விக்கிரகம் பளிச்சென்று அறையில் நிற்கிறது. சுற்றவரப் பலர் ஆடுகின்றனர். பேயாட்டம். எதனுள்ளோ அவர்கள் புகுந்து புகுந்து குடைந்து குடைந்து ஆடுகின்றனர். அலுப்பில்லை, சலிப்பில்லை, மலர்ச்சி, மலர்ச்சி. அவள் அறையின் வாயிற்படியண்டை நின்று வெகு நேரமாய்ப் பார்த்தபடியே நின்றாள். அவள் மூளை குழம்பிற்று.

"ஆடுவோர் யார்? ஆட்டப்படுவோர் யார்? எவர்? எவருக்குள் எவர்? வெறும் குழப்பந்தான். மண்ணில் பிறந்த இரு உயிர்கள் வளர்ந்தபோது வார்த்தைகள் பிறக்கவில்லை. சைகைதான் பிறந்தது, அந்தச் சைகைதான் நடனமா? நடனம், சிவனின் நடனம். முதல் உயிர்களின் நடனம். முதல் பாஷை, காலப் பெருவெள்ளத்தில் நீந்தி நிற்கிற இந்த மனிதர்கள் தேவனின் நடனத்தைத்தான் இன்றைக்கும் ஆடுகிறார்களா? முதலுயிர்களின் நடனமா? யார் முதலுயிர், நீயா நானா? சிவனா? யார் உள் நீ சிவன் சிவனில் எல்லாமேயா?

அப்போது அவள் வீரிட்டுக் கத்தினாள். இப்போதும் அவள் கண்டத்திலிருந்தும் அந்தக் குரல் பிறந்து விட்டிருக்கிறது.

"அவர் தொட்டிலை விட்டு வேகமாய் அவள் படுத்திருந்த கட்டிலை அடைந்து அவளைத் தொட்டுப் பார்த்தார். அவள் விழித்தாள். அவருள் ஒரு நினைவு பூத்தது.

(3)



அறை வாயிற்படியண்டை நின்ற படியே வெகு நேரமாய்ப் பார்த்துக் கொண்டிருந்த அவளை அவரும் இமை கொட்டாமல் பார்த்தபடி நின்றார். அவளின் தோற்றம் அவரை உலுப்பி விட்டபடியேயிருந்தது. சமயத்தைப் பற்றி "நிலியஸ் புறப்பென்சிற்றீஸ்" என்று சொல்லுகிற சமய மனோபாவங்களைப் பற்றி ஐரோப்பிய ஞானிகள் எழுதிய நூல்களை அவர் படித்திருக்கிறார். அப்போதிருந்த அவள் தோற்றம் மேற்கத்திய ஞானிகள் "காரணரீதியாய்" உருக் கொடுக்க முடியாத பேருருவாய் நிற்கிறாற்போல இருந்தது. "மேற்கத்திய சிந்தனைகளோடு கீழையத்தேயத்துத் துறவியின் மனோபாவங்களைச் சித்தரிக்க முடியாது" என்கிற றொமெயின் றொலன்டின் ஆழ்ந்த கூற்றும் அவருள் எழுந்தது.

சமய வாழ்வை ஏற்றுக்கொண்டு ஒரு விவேகானந்தத் துறவியாய் வரவேண்டுமென்கிற தீராத வெறியில் உந்தப்பட்டு அவர் துறவியாய் அந்த மடத்தில் சேர்ந்தார். நாள் போனால் அவர் காணுகிற துறவிகளின் உச்சமான சமாதி நிலையில் அவர் கண்டறியாத ஓர் அலாதியான ஆழ்ந்த இசைலயம் கனிந்த மௌனமும் அவளின் வெறிமயமான – தோற்றத்தின் ஊடே புகுந்து நிற்பதையும் அவர் கண்டார். அதில் அவர் கிறங்கி நிற்கிறபோதுதான் அவள் வீரிட்டுக் கத்தினாள்.

சடாரென எழுந்து அவளைத் தொட்டுப் பிடித்தபடியே எதனாலோ தாழ்வாரத்தடிக்கு வந்துவிட்டார் அவர்.

பிரிபடாத மௌனம் கவிந்து வெகுநேரமாய்ப் பரவிக் கொண்டிருந்தது.

உள்ளே பாட்டும் கூத்தும் நடந்துகொண்டிருந்தன.

பிரிபடாத அந்த மௌனத்தை அவரே முதலில் பிளந்தார்.

"நீ யார் என்று நான் அறியலாமா?"

அவள் சிரித்தாள். சிரித்தபடியே சொன்னாள்:

"என்னை அறிய நீ யார். நான்தான் முதல் உயிர். பிரபஞ்சத் தொட்டிலில் பூத்த முதல் பூ. உயிர்ப்பூ. அதில் நீ, நான். பல்கிப் பெருகிச் சுமை சுமையாய் நிற்கும் இன்றைய உயிர்கள். எல்லாமே முதலுயிர். முதலுயிரில் எல்லாம் நேற்றைய பூ . இன்றைய பூ. நாளைய பூ. முதல் பூத்த முதல் பூ. அதில் நான், நீ..."

அவர் குழம்பிவிட்டார்...

மேற்கின் காரணரீதியான முடிவுகளையும் கிழக்கின் உணர்வு மயமான முடிபுகளையும் அசைபோட்டபடியே அவர் இப்போதும் அவளை நன்றாக உற்றுப் பார்த்தார். குழப்பந்தான் மிஞ்சியது. வெறும் குழப்பம்.

அவள் அவளே போலவும் அவளில்லைப் போலவும் இருந்தது. அவளுள் முதல் பூத்த உயிர்ப் பூவே தெரிகிறாற் போலவும் அதுவே வேறு போர்வை ஒன்றினுள் புகுந்து இன்று அவளாய்த் தோற்றம் காட்டிப் பேசுகிறாற் போலவும் அவருக்குத் திடமான நம்பிக்கையே பிறந்துவிட்டது.

"கீதைத் தத்துவம்" பூரணமாய் உயிர்பெற்று நிற்கிறாற்போலவும் பட்டது.

அவரின் சிந்தனையை அவள் கலைத்தாள்.

"உங்களுக்குத் தெரியாதா?"

"எதைப்பற்றி?"

"நீ யார், நான் யார்?"

அவருள் சடுதியாய் ஒரு முடிவு.

"நீ என்றும் நான் என்றும் வேறு வேறு தோற்றத்தில் நிற்கிற உயிர்கள் ஒன்றாய்க் கலக்கிற போது நீயும் நானும் கலந்து விடுகின்றன. அந்தக் கலவையில் பிறக்கிற உயிர்ப் பூக்கள் நீயா? நானா? என் உள் மனித உயிர் தோன்றிய காலத்திலிருந்தும் உயிர் ஊற்றாய் ஓடிவருகிற பெருநதியின் கலப்பு இருக்கிறது. உன்னில் இருக்கிறது. பிறகு நீயா? நானா? நதியா? நீயும் நானும் என்று தேங்கி எதுவும் நிற்கிறதில்லை. நீயும் நானும் தேங்கி நிற்காமல் உலகம் முடியுமட்டும் ஒட்டுப்பட்டுக் கொண்டே ஓடுவதற்குத்தான் குழந்தைகள் பிறந்தபடியே இருக்கின்றன. அதில் நீயில்லை, நான் இல்லை. பெருநதி அவற்றின் கலப்பு.

"புரிந்ததா?" அவள் தலையை ஆட்டினாள். ஒன்றுமே அவளுக்குப் புரியவில்லை. அவள் போய்விட்டாள்.

(4)

அவர் தூக்கம் பிடிபடாமல் அன்றைய இரவு முழுதும் சிந்தித்தபடியே இருந்தார்.

காலம் காலமாய் இந்திய மண்ணில் தோன்றிய ஒளி முத்துக்களான ஆத்மீகத் துறவிகள் எதனையே பற்றிப் பேச மறந்து விட்டதாக அவருள் ஒரு நினைவு முகிழ்ந்தது. தெய்வச் சிருஷ்டியின் ஆண் பெண் என்கிற இரு உயிர்கள் புத்துக்கொண்டேயிருக்கிறபோது "நீ, நான்" என்கிற பாகுபாடுகள் இல்லை என்று அவர் கருதினார். ஆண் பெண் என்கிற உயிர்களின் புனிதமான கலப்பில் பிறக்கிற பசிய புதிய உயர்ப்பூவில் "நீயும் நானும் சகல உயிருமே" நிறைந்துவிடுகிறதே? "நான் பிறப்பதுமில்லை, இறப்பதுமில்லை". என்று பகவான் கீதையில் பேசுகிறாற் போல யார் இறக்கிறார்கள். யார் கலக்கிறார்கள், யார் பிறக்கிறார்கள்? முதலுயிர்தானே?

"உயிர்ப் பூக்கள் உதயமாகிய திருமணத்தை எதற்காய் கீழைத் தேயத்தின் கம்பீரமாய், இமயமலை என நின்ற இந்தியத் துறவிகள் துறந்தனரோ? அவர்கள் "மாதிரி" காட்ட வந்தவர்கள். அதைத்தான் அவர்கள் சொல்ல வேண்டுமென்றதற்காய்ச் சொன்னார்களோ? ஆற்றலும் வேகமும் நிரம்பியதான ஒரு சமூகத்தைச் சிலரையாவது கொண்டு உருவாக்கி, இந்திய நாட்டின் பசியையும் பஞ்சத்தையும் அவ்வப்போது போக்கடித்துவிட வேண்டுமென்கிற வெறியில் கிளர்ந்த வெறியில் அந்த கொடிய விதியைச் சொன்னார்களோ?

"எதுவோ அவர்" அந்த முடிவிற்கு வந்துவிட்டார்.

மறுநாள் பொழுது புலர்ந்ததும் அவர் சத்தியபாமாவின் வீட்டிற்குப் போனார்.
திருமணம் நடந்தது. ஆண்டுகள் நகர்ந்தன.
சத்தியபாமா மாறிவிட்டாள். மண் உலகத்து ஆசைகளும், பற்றும் மனோபாவமும் நிரம்பிய பெண்ணாக மாறிவிட்டாள்.
அவருக்கு அது ஒரு நூதனமாகவே படவில்லை. பல சமயங்களில் பலருக்கு அந்த மாதிரியான "சமய உணர்வு மனோபாவங்கள்" ஏற்படுகின்றன என்றும் ஆழ்ந்தும் போற்றியும் வந்தாற்றான் அவை நிலைக்கும் என்பதும் அவருக்குத் தெரியும்.
"ஒரு காலத்தில் அவள் பிரபஞ்சப் புதிரை அவிழ்க்கத் தொண்டர் நிலையத்தை" தேடி வந்தவளா? என்கிற ஐயுறவு அவருள்ளேயே பல சமயங்களில் எழத்தான் எழுந்தது.
அவர் மட்டும் மாறவில்லை. ஒரு விஷப் பரீட்சையை அவர் செய்தார். உயிர்களின் பேதமற்ற கலப்பில் அவர் ஒரு பேருண்மையைக் கண்டுவிடலாம் என்கிற சடுதியான முடிவிற்கு வந்து செயற்பட்டுவிட்டார். "அவரது பேருண்மைத் தத்துவம்" வெறும் உணர்வு மயமாய்ப் பார்க்கிறபோது பெரிதாயும் அழகாயும்தான் இருந்தது. நடைமுறையிலோ? மண்ணோடு சம்பந்தப்பட்டு அவசியங்கள் பிறந்து கொண்டேயிருந்தன. அப்போதெல்லாம் " இராமகிருஷ்ண பரமஹம்ஸருக்கும் சாரதாதேவியாருக்கும்" இருந்த உணர்வுமயமான தொடர்பின் வலிமைமிக்க ஆத்ம சக்தி அவரைக் கொன்றது.
நெடுநாள் கழித்துக் குழந்தையும் பிறந்தது.
தொட்டிலில் கால்களையும் கைகளையும் மெதுவாய் ஆட்டியபடியே இதோ அழுகிறது.
"குவா.... குவா..."

(5)

அவர் கைகளில் அவள் சரிந்து வாடிய பூக்குடலை போலக் கிடக்கிறாள்.
"சாந்தினி"
"ஏன்" என்று அவள் கேட்டாள்.
அவர் பொறி கலங்கிப் போனார். "உன் பெயர் அதுவா? குழந்தையின் பெயரை நினைவு தப்பிப்போய் உன் பெயர் என்று கூப்பிட்டால் நீ "ஏன்" என்கிறாயே?"
அவர் உலகத்து மனிதராய்ப் பேசினார். அவருக்கு "நோயில்லை".
அவள் சிரித்தாள்.
முன்பு அவள் பைத்தியக்காரி போல இருந்த காலத்தில் பிறந்தாற் போன்றே சிரிப்பு. அவர் பயந்துபோனார்.
"சாந்தினி.... இல்லை, இல்லை, சத்தியபாமா"
"இல்லை... இல்லவேயில்லை, நான்தான் "சாந்தினி" நானே அவள். அவளே நான். நானும் நீயும் தேய்ந்து பிறந்தது குழந்தை. புதிய உயிர். அதில் நீயில்லை. நான் இல்லை. அதுதான் சாந்தினி. அதுதான் நான், நீங்கள், அதுவுமில்லை, முதலுயிர். மண்ணுலகத்தில் தோன்றிய முதலுயிர்."
"நான்தான் சாந்தினி சொல்லுங்கள்"
"நீதான் முதலுயிர்"
அவள் சரிந்து விழுந்தாள்.
அவர் மண் உலகத்து மனிதராய் அழுதார்.
"நான் பிறப்பதுமில்லை,இறப்பதுமில்லை" என்கிறாற்போலத் தொட்டிலிற் கிடந்தது குழந்தை சாந்தினி சிரித்தாள்.
– ஐப்பசி 1966 – (தீபாவளி சிறப்புமலர்)

## Nadarajah Kuruparan

2020 தேர்தலுக்குப் பின் காணாமல் போகப்போவது…?

சிறுபான்மைத் தேசிய இனங்களின் பிரதிநிதிகளால், இதுவரை காணாமல் போனது கோவணம் மட்டுமே… 2020 இலங்கையின் நாடாளுமன்ற தேர்தல் புதிய பாடங்களைப் புகட்டப் போகிறது… சுதந்திரத்திற்குப் பின்னான இலங்கையின் ஆட்சியை, இரு பெருந் தேசியக் கட்சிகள் பங்கு பிரித்துக்கொண்டன. **D.S**. சேனநாயக்கா வழிவந்த ஐக்கியதேசிக் கட்சியும், ஞறுசுனு பண்டாரநாயக்க வழிவந்த சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் மாறி மாறி ஆட்சிக்கு வந்தன.

**D.S**. சேனநாயக்கா – **SWRD** பண்டாரநாயக்க யுகங்களுக்கான தற்காலிக – அல்லது நிரந்தர முடிவுரையை, 2019ஆம் ஆண்டு எழுத ஆரம்பித்த ராஜ பக்ஷக்கள், 2020 ஆம் ஆண்டு நாடாளுமன்ற தேர்தலுடன், அவ்வுரையை நிறைவுசெய்ய உள்ளனர். டீ.எஸ் சேனநாயக்கா தலைமையிலான பலம்வாய்ந்த ஒரு வழியிலான ஐக்கிய தேசியக் கட்சியின் யுகத்தை, தகர்த்து, பண்டார நாயக்கா வழியிலான மற்றுமொரு யுகத்தை 1956ல் **SWRD**. பண்டாரநாயக்க உருவாக்கினார்.

ஆனால் இருபெரும் பலம்வாய்ந்த மரபுவழிப்பட்ட அரசியல் சகாப்தங் களை தகர்த்து, 2019ல் ராஜபக்ஷ யுகத்தை ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஸ பலமாக நிறுவி உள்ளார். 2005 முதல் 2015 வரை மகிந்த ராஜபக்ஸவே ஜனாதிபதியாக இருந்தார். ஆனால் பண்டாரநாயக்கா வழிவந்த சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமைப் பதவியின் ஊடாக அந்தப் பதவியைப் பெற்றுக் கொண்டார். ஆனால் 2019 ஜனாதிபதி தேர்தலில் ராஜபக்ஷக்களால் உரு வாக்கப்பட்ட பொதுஜனபெரமுன தலைமையில் போட்டியிட்ட கோத்தாபய ராஜ பக்ஷ தனிச் சிங்கள வாக்குகளால் பெரும்பான்மைப் பலத்துடன் ஜனாதிபதி யானார்.

ஜே.ஆர். ஜெயவர்த்தனவினால் உருவாக்கப்பட்ட 1978ஆம் ஆண்டு 2ஆம் குடியரசு அரசியல் யாப்பின் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையில், முதல் முறையாக சிறுபான்மைத் தேசிய இனங்களின் ஆதரவின்றி, வாக்குகள் இன்றி 2019ல் கோத்தாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாக தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

சிறுபான்மைத் தேசிய இனத்தின் ஆயுதவழி பேரம்பேசலை, பாரிய யுத்தத்தின் மூலம் அழித்த ராஜபக்ஷக்கள், அடுத்த 10 வருடத்தில் ஜன நாயகவழிப் பேரம்பேசலுக்கும் முடிவுரை எழுத ஆரம்பித்தனர். அந்த முடி வுரையை 2020 நாடாளுமன்ற தேர்தலில் நிறைவுக்கு கொண்டுவர, சிறுபான் மைத் தேசிய இனங்கள் தம்முள் முரண்டுபட்டு துணைநிற்கின்றன.

இலங்கையின் சுதந்திரத்தின் பின்னான 73 வருட கால அரசியல் வரலாற்றில் என்றுமே இல்லாத புதிய அரசியல் அத்தியாயம் 2020 ஓகஸ்ட்டின் பின் ஆரம்பமாக உள்ளதுடன், அந்த அத்தியாயம் இலங்கை மக்களுக்கும், குறிப்பாக சிறுபான்மைத் தேசிய இனங்களுக்கும் புதிய பாடங்களைப் புகட்டப் போகிறது. அந்த அத்தியாயத்தின் ஆரம்பத்திற்கு கட்டியம் கூறுபவயே கருணா அம்மானின் ஊடக வெளிப்பாடும், அதன் தொடர்ச்சியான விசாரணைகளும், அழுத்தங்களும் பிரசாரங்களும்…

அந்த அத்தியாயத்தின் ஆரம்பத்திற்கு கட்டியம் கூறுபவயே, உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் தொடர்ச்சியாக முஸ்லீம் தலைவர்கள் கட்சிகளின் மீதான குற்றச்சாட்டுகளும், விசாரணைகளும் பிரசாரங்களும்… அந்த அத்தியாயத்தின் ஆரம்பத்திற்கு கட்டியம் கூறுபவயே, வடக்கு – கிழக்கு – கொழும்பு – மலையக சிறுபான்மைத் தமிழ்த் தேசிய இனங்களின் கட்சிகளும், தலைவர்களும், நாட்டை துண்டாக்கும் முயற்சிகளில் ஈடுபடுகிறார்கள், ஆதரவளிக்கிறார்கள் என்ற குற்றச்சாட்டுகளும், விசாரணைகளும், பிரசாரங்களும்…

அந்த அத்தியாயத்தின் ஆரம்பத்திற்கு கட்டியம் கூறுபவயே, அரசாங்கத் துடன் அல்லது அவர்களுக்கு கடுமையான ஆதரவுடன் செயற்படும் கருணா அம்மான் கிஸ்புல்லா போன்றோர் மீதான குற்றச்சாட்டுக்களும், விசாரணை களும், பிரசாரங்களும்.. அந்த வகையில் நாடாளுமன்றில் மூன்றில் இருண்டு பெரும்பான்மையை தனிச் சிங்கள வாக்குகளால் பெற்றுக்கொள்வதற்கான பொதுஜனபெரமுன கட்சியினதும், ராஜபக்ஷக்களின் முயற்சியும் வெற்றியை நோக்கி நகர்ந்துகொண்டு இருக்கின்றன. தேசிய விடுதலைப் போராட்டத்தில் எழுச்சி பெற்ற விடுதலை இயக்கங்களுள் உடைக் கப்பட சிதைக்கப்பட முடியாத இயக்கம் என கருதப்பட்ட புலிகள் இயக்கம் உடைக்கப்பட்டு சிதைக்கப்பட்டது போல், சுதந்திரத்திற்குப் பின் உடைக்க முடியாத பழம்பெரும் கட்சி என கருதப்பட்ட ஐக்கியதேசியக் கட்சி உடைக்கப்பட்டு சிதைக்கப்பட்டுள்ளது. 2020 நாடாளுமன்ற தேர்தலின் பின், தேசிய ரீதியாக பலமாக உருவாகப் போகும் ராஜபக்ஷ யுகத்திற்கு, மறுமுனையாக உருவெடுக்கப் போராடும் பிரேமதாஸ யுகத்திற்கு ஈடுகொடுக்கும் முயற்சியிலும், சேனநாயக்க யுகத்தை தக்கவைப் பதிலுமே ரணில் தலைமையிலான ஐக்கியதேசியக் கட்சியின் காலம் கழிகிறது. இலங்கையில் ஆளும் கட்சி – எதிர்க்கட்சி என இரு கட்சி ஆட்சிமுறை இருந்தால் போதும். மக்கள் ஒன்றை விரும்பாவிட்டால் மற்றொன்றை தெரிவு செய்யலாம். பல கட்சி ஆட்சி முறை குழப்பகரமானது.

அபிவிருத்திக்கும், ஒழுக்கமான அரசியலுக்கும் ஆபத்தானது என்ற, ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஸவின் எண்ணக் கருவிற்கு ஏற்ப சிறு கட்சிகள் தாமே தமக்கு குழி பறித்துக்கொண்டு இருக்கின்றன. இம்முறை நாடாளுமன்ற தேர்தலில பழம்பெரும் கட்சிகளான, ஐக்கியதேசியக் கட்சியும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் பலமிழந்து போயுள்ளன. சிறிலங்கா சுதந்திரக்கட்சி ஒரு சில இடங்களில் தனித்தும், பெரும்பாலன இடங்களில் பொது ஜன பெரமுனவுடன் இணைந்தும் களமிறங்கி யுள்ளது.

ஐக்கியதேசியக் கட்சி இரண்டாகி சஜித் தலைமையிலான ஐக்கியமக்கள் சக்த்தி தனித்து போட்டியிடுகிறது. தேசிய ரீதியில் 3 ஆவது இடத்தில் இருந்த ஜே.வி.பி 4 ஆவது இடத்திற்கு தள்ளப்பட்டுவிட்டது. இந்தத் தேர்தலில் தன்னை தொடர்ந்து 3ஆவது இடத்தில் தக்கவைப்பதற்கான வாழ்வா சாவா போராட்டத்திற்கு ஜேவிபி தள்ளப்பட் டுள்ளது. இலங்கையின் தேசியச் சூழல் இப்படி இருக்க, வடக்கு – கிழக்கு – மலையகம் கொழும்பு பிரதேசங்களை மையமாகக் கொண்டு இயங்கும் சிறுபான்மைத் தேசிய இனங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகள், நாடாளுமன்ற கதிரைகளை இலக்கு வைத்து கனவுலகத்தில் சஞ்சரித்துள்ளன.

இந்த வகையில், 2020 நாடாளுமன்ற தேர்தல் தேசியரீதியான படிப்பினைகளை உருவாக்குவதோடு, விசேடமாக பிராந்தியவாழ் சிறுபான்மைத் தேசிய இனங் களுக்கே பாடம் புகட்ட உள்ளதாக நான் கருதுகிறேன். வடக்கில் இம்முறை தமிழ்த் தேசிய வாக்குகளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு – தமிழ்தேசிய மக்கள் முன்னணி – தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி ஆகியன பங்கு பிரிக்க உள்ளன. இலங்கைத் தேசியம் – அல்லது அபிவிருத்தி அரசியல் என்ற இலக்குகளை ஆதரிக்கும் வாக்கு களை, ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி – ஐக்கியதேசியக் கட்சி – பொதுஜனபெரமுன கட்சிகள் பங்கு போட்டுக் கொள்ள உள்ளன.

கிழக்கில் தமிழ் மக்களின் வாக்குகள், – அபிவிருத்தி – கிழக்கு பிரதேச முதன்மை – பாதுகாப்பு என்பவற்றை முன்னிறித்தி களத்தில் நிற்கும் பிள்ளையான் தலைமையிலான தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சிக்கும், தமிழ்த்தேசியக் கூட்டமைப்பிற்கும் இடையிலான நேரடிப் போட்டியிலும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி – மற்றும் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி ஆகியவற்றின் பக்க அளவிலான போட்டியிலும் சிதறும் தமிழ் வாக்குள் முஸ்லீம் கட்சிகள் அல்லது தேசியக் கட்சிகளின் ஒரு ஆசனத்தை அதிகரிக்க வழிசெய்யப் போகின்றன.

இந்தச் சாதகமான அரசியல் சூழலும், யுத்தத்தை வென்றவர்கள் ராஜபக்ஸக்கள் – தனிச் சிங்கள வாக்குகளால் ஜனாதிபதியாக முடியும் என்ற சிங்கள பெரும் தேசியவாதத்தை நிரூபித்தவர்கள் ராஜபக்ஸக்கள். கொரோனாவை வென்றவர்கள் ராஜபக்ஷக்கள் என்ற வெற்றிகளின் அலையும் பலமான ராஜபக்ஷக்களின் யுகத்தை உருவாக்கப் போகின்றன.

மாறாக நாடாளுமன்றக் கதிரைச் சுகங்களுக்கு அல்லாடும் சிறுபான்மைத் தேசிய இனங்களின் பிரதிநிதிகளால்,, இதுவரை காணாமல் போனது கோவணம் மட்டுமே…

2020 நாடாளுமன்றத் தேர்தலின் பின் காணாமல் போவது….?

# வாக்களான் வாக்கே வாக்காளனைக் காக்கும்




வேட்பாளரின் வாக்குறுதிகள் உங்களைக்
காக்காது..
அரசியல்வாதிகள் தடம்மாறுகிறார்கள்
ஆனால்..! வாக்காளர்கள் தடுமாறக் கூடாது.!

ஜனநாயகம் என்பது
வாக்காளனின் சுதந்திரத்தில் தங்கியுள்ளது.!

சுதந்திரம் என்பது
ஜனநாயகத்தைப் பாதுகாப்பதில் தங்கியுள்ளது..!

அதிகாரத்தைப் பிறரிடம் கையளிக்க முன்
அவர் தகுதி பற்றியும், அவர் உண்மைத்
தன்மை பற்றியும்
சற்றுச் சிந்தியுங்கள்..!

சரியானவருக்கு உங்கள் வாக்கைக்
கொடுப்பதன் மூலம்
போலிகளைப் புறந்தள்ளிவிட்டு,
ஆரோக்கியமானதொரு
சமூகத்தைக் கட்டி எழுப்பத் துணை நிற்கத்
திடசங்கற்பம்
கொள்வோமாக!

## எம் இனிய வாசக நேயர்களே!

இணைய மூலம் உங்களை நாடிவரும்
“தீபம்” இணையவார இதழ் குறித்த
உங்கள் மனப் பதிவுகளை, கருத்ததிர்வுகளை
எம்முடன் பகிர்ந்து கொள்ள வேண்டும் என
எதிர்பார்க்கிறோம்..
தமிழ் ஊடகப் பரப்பில்
சுயாதீனமானதும், தனித்துவமானது
மானதுமான இலக்கில் மக்கள் தேடலைத்
தொடர, நீங்களும் எம்முடன்
இணைந்து செயற்பட
விரும்புகிறோம்.
தீபம் பற்றிய ஆழமானதும்,
அர்த்தமுள்ளதுமான தங்கள்
எண்ணங்களுடன்
எம்முடன் தொடர்ந்து
இணைந்திருங்கள்..



உங்கள் எண்ணங்களை எழுதி
எமது மின்னஞ்சல் முகவரிக்கோ அல்லது
வட்ஸ்அப் இலக்கத்துக்கோ
அனுப்பி வைக்கலாம்.
-தீபம்-

பதிவு இலக்கம் : 105267
வார இதழ்
தீபம்
இணையப் பதிப்பு

## வாசகர்களுக்கு... ஒரு வேண்டுகோள்

தீபம் இணைய இதழாக வரத் தொடங்கிப் பல வாரங்களாகின்றன. அதுவும் இலவசமாக உங் களைத் தேடி வருகிறது. எம்முடன் தொடர்பில் இல்லாதவர்கள் இதனைப் பெற விரும்பினால், தயவு செய்து deepamweekly20@gmail.com எனும் எமது மின்னஞ்சல் முகவரிக்கு வேண்டுகோளை அனுப்பி அல்லது Whatsapp / IMO இலக்கமான

imo Whatsapp **+94715177 847**

**+94760288 853** Viber

தற்போது தமிழன் வழிகாட்டி இணையத்தளத்திலும்
www.tamilanguide.com

உடன் இணைந்து பிரதியைப் பெற்றுக் கொள்ள லாம். அது மட்டுமல்லாது நீங்கள் எங்களுக்குச் செய்யும் கைமாறாக உங்களுக்கு வரும் இதழை தரவிறக்கம் செய்து உங்கள் குழுவிலுள்ள பிற ரோடும் பகிர்ந்து கொண்டால் இந்த இதழை மேலும் விரிவுபடுத்தி, மிகவும் பயனுள்ளதாக அமைக்க வாய்ப்பாக இருக்கும் என்பதைப் பணிவன்புடன் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

GMail

இவ் இணைய வார இதழ் : இல. 151, நாவலர் வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள நோர்சி மீடியா பணிமனையில் தயாராகி
28.06.2020 அன்று வெளியிடப்பட்டது.